
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

181

OFFICE OF THE STATE EDITOR
151/44/73
15 OCT 1973
MADRAS-8

Sep-73



தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



சென்னைத் திருமயிலை அருள்மிகு கற்பகாம்பாள் கலியாண மண்டபத்தில் நிகழ்ந்த தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு வருகைதந்த நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர். கலைஞர் அவர்களுக்குச் சங்கத் தலைவர் தம்பி அ. தேவேந்திரன், M.L.A., அவர்கள் மாலைசூட்டி வரவேற்றல் (3—9—73)

## பொருளடக்கம்


1. முருகன் பெருமை
2. கந்தர் கலிவெண்பா
3. தமிழ் இன்பம்
4. நானும் தானும்
5. வாழ்த்துப் பேருரை
6. தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் மாநாட்டுச் சிறப்புரை
7. நாராயணா என்னும் நாமம்
8. பிரபத்தி நெறியின் பெருமை
9. சிறந்ததொரு முருகன் துதிச்செய்யுள்
10. தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு
11. பழநித் திருக்குடமுழுக்கு விழா
12. மதிப்புரைகள்
13. கட்டுரைப் பட்டியல்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.


'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

151/64/73
15 OCT 1973
GAZETTEER UNIT LIBRARY




மாலை 15 | பிரமாதீச — ஆவணி, புரட்டாசி — செப்டம்பர் 1973 | மணி 12

# முருகன் பெருமை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் (2—9—73), 'முருகன்பெருமை' என்னும் தலைப்பில் பேசும்படி பணித்திருப்பது, சாலவும் பொருத்தமும் சிறப்பும் உடையதாகும். பேசுகின்ற இடம், பேச அமைந்த நேரம், பேசுதற்குக் கொடுக்கப் பெற்றுள்ள தலைப்பு ஆகிய மூன்றுமே, மிக்க சிறப்புக்குரியனவாக அமைந்துள்ளன. இங்குப் பெருந்திரளாகக் கூடியுள்ள அன்பர்கள் அனைவரும், முருகனின் அருமை பெருமைகளை அறிந்து ஈடுபட்டு, அதன்கண் அழுந்தித் திளைக்கும் ஆர்வலர்களேயாவர். முருகனின் பெருமைக்கு அளவும் எல்லையும் இல்லை. அவனது அளவற்ற பெருமைகளுள், முருகனுக்கே தன் பெருமை இத்தகையதென்று தெரியாது என்பதும் ஒன்று. முருகன் எல்லாம் அறிந்தவன் என்பது உண்மையேயாயினும், அவனும் அறியாதது, அறிந்து கொள்ள இயலாதது ஒன்று உண்டு எனத் தெரிகின்றது. அஃது அவனது பெருமை. முருகன் தன் பெருமையைத் தானே அறியான். தனக்கே இனைத்தென அறிய இயலாத பெருமை, முருகனுடையது.

> "ஞானந்தான் உருவாகிய
> நாயகன் இயல்பை
> யானும் நீயுமாய்
> இசைத்தும்என்றால் அஃதெளிதோ ?
> மோனம் தீர்கலா முனிவரும்
> தேற்றிலர் முழுதும்
> தானும் காண்கிலன் இன்னமும்
> தன்பெருந் தலைமை"

எனச் சூரபதுமனுக்குச் சிங்கமுகாசுரன் கூறுவதாக வரும் கந்தபுராணப் பாடல், இங்கு நாம் சிந்தித்து இன்புறுதற்குரிய

JL Q2m24, N59TK

தாகும். "எம்பெருமான் ஏது உடுத்து அங்கு ஏதுஅமுது செய்திடினும், தம் பெருமை தான் அறியாத் தன்மையன் காண் சாழலோ"! என வரும் திருவாசகப் பாடற்பகுதியும், ஈண்டு நாம் ஒப்பு நோக்கி உணர்தற்குரியது. தன்பெருமை தான் அறியாத் தன்மையனாகிய முருகனின் பெருமையினை, இங்கு நாம் நம்மால் இயன்ற அளவில் ஒரு சிறிது மட்டும் சிந்தித்துணர முயல்வோம்!

148713

**கடவுட் கருத்துவிளக்கம்:**

இவ்வுலகப் படைப்பில், நாம் எத்தனையோ வியத்தகு செயல்களைக் காண்கின்றோம். இறைவனின் படைப்பில் எல்லாப் பொருள்களுமே, ஒவ்வொரு வகையில், இணையற்ற சிறப்பும் அழகும் உடையனவாகத் திகழ்கின்றன. எனினும், இவற்றுள் எல்லாம் தலைசிறந்த ஒன்று எதுவாக இருத்தல்கூடும் எனத் திறனறிந்து தேர்ந்து தெளிவோமாயின், "உண்மையைக் கடைப்பிடித்து, உண்மைக்காகவே உயிர் வாழ்கின்ற உத்தமன் ஒருவன் இருப்பானாயின், அவனே இறைவனின் படைப்புகள் எல்லாவற்றுள்ளும் இணையற்ற பெருஞ் சிறப்புடையவன் ஆவான்" ("An honest man is the noblest work of God") எனக் கூறலாம். இங்ஙனமே மனிதன் நிகழ்த்தியுள்ள செயற்கருஞ் செயல்கள் பலவற்றுள், எதனை மிகச் சிறந்த செயற்கரிய பெருஞ் செயலாகக் கொள்ளுதல் கூடும் எனக் கருதி ஆராய்வோமாயின், காணவும் கருதவும் இயலாத கடவுளைப் பற்றிச் சிந்தித்து உணர்ந்து, இன்ன தன்மையன் என்று அறியவொண்ணா இயல்பினனாகிய இறைவனை, அவன் இன்னின்ன தன்மைகள் உடையவன் என்று ஆராய்ந்து அறிந்து, அனுபவித்துக் கருத்து விளக்கம் செய்துள்ள சிறப்பே, மனிதனின் செயற்கருஞ் செயல்களுள் எல்லாம் தலை சிறந்த செயல் ஆகும் எனலாம். ("The noblest conception of God is the highest achievement of man").

சத்தியத்தைப் போற்றுமுயர் சான்றோனே, ஈசன்றன்
வித்தக நற்படைப்பில் மேலோனாம்;— அத்தகையில்
ஈசனருட் பண்புநலன் எண்ணி வகுத்ததுவே,
மாசில்மனி தன்மாட்சி யாம். (ந.ரா.மு.)

இவ்வடிப்படையிற் செவ்விதின் ஆராய்ந்தால், ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத இறைவனாகிய ஒரு முழு முதற்பொருளையே, சிவபெருமான் திருமால் விநாயகர் முருகன் அம்பிகை என்றெல்லாம், வெவ்வேறு வகைகளிற் கண்டுணர்ந்து அநுபவித்து, நம்மனோர்க்கு ஏற்றபெற்றி விளக்கி அறிவுறுத்திப் போந்தருளிய நம் முன்னோர்களின் செயல், பெரிதும் போற்றுதற்குரியது.

ஒரு நாட்டின் நாகரிகம் பண்பாடு ஒழுக்கம் வாழ்வியல் நலங்கள் அனைத்துக்கும் ஏற்ப, அவர்கள் போற்றுகின்ற புனிதப் பொருள்கள் அமைகின்றன. எத்தகைய பொருள்களைப் புனிதமாக ஏற்றுக்கொண்டு, ஒரு நாட்டு மக்கள் போற்றி வருகின்றனரோ, அதற்கு ஏற்பவே அவர்தம் நாகரிகம் பண்பாடு கலைச்சிறப்பு வாழ்க்கைநலம் முதலியன அமைகின்றன. இவ்வுண்மை மன்பதை நூலார் (Sociologist) அனைவரும் செவ்விதின் உணர்ந்ததொன்றாகும். அமெரிக்காவில் கழுகும், உருசியாவில் கரடியும், எகிப்தில் முதலையும், இங்கிலாந்தில் சிங்கமும், சீனாவில் நெருப்புயிர்க்கும் ஒருவகைக் கொடிய நச்சுப்பாம்பும் (Dragon), இந்தியாவில்

N73. 15.12 

பசு அல்லது யானையும் ஒவ்வொரு வகையில் புனிதப் பொருள்களாகப் போற்றப்பெறுகின்றன. இவற்றால் அவ் வந் நாட்டின் இயல்புகள் ஒருவகையில் புலனாகின்றன எனலாம்.

*ஒரு நாட்டில் வாழும் மக்களின் பண்பிற்கு ஏற்பவே, அவர்கள் வணங்கும் தெய்வத்தின் இயல்புகளும் அமைகின்றன. எத்தியோப்பியர்கள் தங்களைப் போலவே, தங்கள் தெய்வமும் கரு நிறமும், தட்டை மூக்கும் உடையன வாகக் கருதுகின்றனர். திரேசிய மக்கள் தங்கள் கடவுளைத் தங்களைப்போலவே, நீலநிறக்கண்களும், செம்பட்டை மயிரும் கொண்டனவாகக் கருதுகின்றனர். அம் முறையில் ஆராய்ந்தால், தமிழ்மக்களின் உயரிய நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றின் உருவகமாக விளங்கும் முருகப்பெருமானின் அருமை பெருமைகளை, நாம் அறிந்துணர்ந்து கொண்டு மகிழலாம்.

எனவே, கடவுட்பெரும் பொருளை முருகன் எனப் பெயர் சூட்டி, வடிவும் இயல்பும் வரலாறும் தத்துவமும் காட்டி, வழிபட்டு வருவதன் மூலம், தமிழ் மக்கள் நாகரிகக் கலையியற் பண்பாட்டு வாழ்க்கை நலங்களில், தனிச்சிறப்புற்று வாழ்ந்து வருகின்றனர் என, நாம் பெருமிதம் கொண்டு மகிழலாம். முருகவழிபாடே, தமிழ் மக்களின் சிறந்த நாகரிகக் கலையியற் பண்பாட்டு வழிபாட்டு நலங்களுக்கு மூலகாரணம் எனலாம்.

பழம்பெருங் கடவுள் :

முருகனுக்குரிய பல பெருமைகளுள் தலைசிறந்த ஒன்று, அவன் தமிழ்க் கடவுள் என்பது. முருகப்பெருமான், உலகங்கள் அனைத்துக்குமே ஒப்புயர்வற்ற பெருந் தலைவனாயினும், அவன் நமது தமிழ் கூறும் நல்லுலகத்துக்கே தனிச்சிறப்பாக உரிய தெய்வமாவான். எந் நாட்டிற்கும் உரிய இறைவனே தென்னாடுடைய சிவனாகத் திகழ்கின்றான் என மணிவாசகர் கூறக் காண்கின்றோம். அதுபோலவே, எல்லா உலகங்களுக்கும் நாடுகளுக்கும் உரிய முருகப்பெருமான், தமிழ் நாட்டிற்கே தனிச் சிறப்பாக உரிய தெய்வமாகத் திகழ்கின்றான் எனலாம்.

உலகில் மனிதன் முதன் முதல் தோன்றிய இடம் உலக நடுக்கோட்டுப் பகுதியே என்றும், அதிலும் குறிப்பாக நமது தமிழ் நாட்டின் குறிஞ்சி நிலப் பகுதியில்தான் முதன் முதல் மனிதன் தோன்றினான் என்றும், ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அதன்படி தமிழகத்தில் மலைநிலமாகிய குறிஞ்சித் திணையில் தோன்றிய மக்கட்குல மூதாதையர், உயர்ந்த மலை உச்சியிலிருந்து, நீலக் கடலின்மேல் காலைப் போதில் தோன்றும் செங்கதிரவனின் சிறந்த இயற்கைப் பேரழகைப் பல்கால் கண்டு கண்டு திளைத்து இன்புற்றனர் போலும்! அவ்வின்ப எழிற் காட்சியின் விளைவே, நமது தமிழகத்தில் குறிஞ்சி நிலப் பகுதியில் வாழ்ந்த நம் தமிழ் மூதாதையரின் வாழ்வில், முருகனின் வழிபாடு முகிழ்ப்பதற்குக் காரணமாயிற்று. எனவே தமிழர்களின் பழம் பெருங் கடவுள், 'குறிஞ்சிக்கிழவன்'

---

*"Our mental pictures of God are as varied as we are. The Ethiopeans make their Gods black and snub nosed; the Thracians say theirs have blue eyes and red hair...... A triangle, if only it had the power of speech, would say that God is eminently triangular, and a circle would say that the Divine Nature is eminently circular, and in this way each thing would ascribe its own attributes to God, while all else would appear to it deformed "

—Dr. S. RADHAKRISHNAN,
An Idealist View of Life.

எனப்படும் முருகனே என்று தெளியலாம்.

### தமிழ்க் கடவுள்

முருகன் தமிழ்க் கடவுள்: தமிழகத்துக் கடவுள் ; தமிழ்மக்கள் சாலவும் போற்றி வழிபடும் தனிப்பெருங் கடவுள்; தமிழ் மொழிக் குரிய கடவுள்; தமிழ் மொழியிற் சிவபெருமானுக்கும், தமிழ்மொழியை அகத்தியர்க்கும், பிறர்க்கும் அறிவுறுத் திய கடவுள். ஓங்காரம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளைச் சிவ பெருமானுக்குத் தமிழ் மொழியின் வாயிலாகவே, முருகப்பெருமான் உப தேசித்தருளினார்.

600 008.

“கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே”

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். “சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல் வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி காந்தனை ” எனவரும் கந்தர் அலங்காரச் செய்யுளால், முருகப் பெருமான் தமிழ் மொழியையும் நூல்களை யும் உலகிற் பரப்பினனாதல் உணரலாம். தலைச்சங்க காலத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும் புலவர்களாக வீற்றிருந்து, தமிழ் ஆராய்ந்தனர். அதனாலேயே, முருகனுக்குச் “சங்கத் தமிழின் தலை மைப் புலவன் ” எனவும் ஒரு பெயர் அமைந்தது.

“ சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ ”

எனக் குமரகுருபர அடிகளார் பாடுதல் இங்குக் கருதியுணர்தற்குரியது. தமிழ் நாட்டில் தமிழ்மொழியின்பால் அன்பும் பற்றும் ஆர்வமும் தொடர்பும் கொண் டிருந்தால்தான், கடவுளர்க்கும் கூடப் பெருமை ஏற்படுகின்றது. “கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழ் ஆராய்ந்தான் ”; “ இருந்து தமிழோடு இசைகேட்கும் இச்சையாற் காசு நித்தல் நல்கினான் ”; எளியரின் எளியனாகி ஒரு கால் அன்றி இருகால் இரவினில் தூது சென்றான். திருமால் “ பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டல் ” என்று போற்றிப் புகழப் பெறுகின்றார். இங்ஙனம் கடவுளரும் தமிழ்த் தொடர்பு பெற்ற வழியே, பெருமையுடையராகக் கருதிப் போற்றுவது தமிழ் மக்களின் இயல்பு. அந்நிலையில் முருகப்பெருமான் தமிழ் மொழியின் வடிவமாகவே அமைந்து திகழ்கின்றான் எனச் சான்றோர்கள் போற்றுகின்றனர்.

### தமிழ் வடிவினன்

தமிழ் மொழியின் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண்களாக வும், தமிழில் வல்லினம் மெல்லினம் இடையினம் என வழங்கும் இன எழுத் துக்கள் ஆறும் தனக்குத் திருமுகங் களாகவும், தமிழின்கண் உள்ள அகரம் முதலிய உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் தோள்களாகவும், தனி நிலை எனப்படும் நுண்ணிய ஓசையை யுடைய ஆய்த எழுத்தே, ஒப்புயர்வற்ற நிலையில் தனிச் சிறப்புற்றுத் திகழும் தனது வேற்படையாகவும் கொண்டு, தமிழ்த் தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவினனாக விளங்குகின்றான்.

“ கண் நிகர் மெய்யும், சென்னிக்
கணம் உறழ் இனத்தின் கூறும்,
திண்ணிய புயங்க ளேபோல்
திகழ்தரும் உயிரும், வேறென்
றெண்ணிடற் கரிய தாகும்
எஃகமும், இயலிற் காட்டும்
புண்ணிய முருகன் செய்ய
பொற்பதம் போற்றி வாழ்வாம் ”

முருகப்பெருமான் தமிழின்பால் கொண்டுள்ள காதலுக்கோர் எல்லையே இல்லை. வள்ளியம்மையின் இனிய சொற்களை முருகன் எப்போதும் தன் செவிகளுள் ஒன்றினுற் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்ருன். அத்தகைய முருகன், யாரேனும் ஓர் அடியவன், எங்கேனும் ஓர் இடத்தில், திருமுருகாற்றுப்படையை ஓதிப் பாராயணம் செய்வானுயின், வள்ளியம்மையின் இனிய சொற்களையும் கூடப் புறக்கணித்துவிட்டுத், தன் பன்னிரண்டு செவிகளையும் ஒருசேரச் சாய்த்து உற்றுக்கேட்டு உவகையுறுகின்ருனும். இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் சீகாளத்திப் புராணத்தில், நக்கீரச் சருக்கத்தில்,

"பொன்னவிர் சுணங்கு பூத்த
புணர்முலைக் கருங்கண் வள்ளி
கன்னலும் அமுதும் தேனும்
கைக்கும் இன் தீஞ்சொல் மாற்றித்,
தன்னிகர் புலவன் கூறும்
தமிழ்செவி தாழ்த்துக் கேளா,
அந்நிலை மனம் களிப்பான்
அறுமுகம் படைத்த கோமான்"

என்று அருளிச் செய்கின்ருர். வள்ளியம்மையின் இனிய சொற்களையும் கூடப் புறக்கணித்து விட்டுத் தன் பன்னிரண்டு செவிகளினுலும், அன்பர்கள் திருமுருகாற்றுப்படை ஓதுதலை முருகன் செவிமடுத்துக்கேட்டு மகிழ்கின்ருன் என்ருல், முருகனுக்குத் தமிழின்பால் உள்ள எல்லையற்ற பெருவிருப்பத்தினை யாம் என்னென்பேம்?

வைதாலும் வாழவைப்பான்

முருகன் தமிழ் மொழியை விரும்புதல் மட்டுமன்று; அவ்வினிய தமிழால் ஒருவர் தன்னை வைதாலும்கூட, அதுகேட்டு முருகன் மகிழ்கின்ருனும்! மகிழ்வது மட்டுமின்றி, அவர்களைச் சிறந்தநிலையில், செழிப்பு மிக்க நிலையில், வாழவும் செய்தருள்கின்ருனும். "மொய்தார் அணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பான்" என்று அருணகிரிநாதர், கந்தர் அலங்காரத்தில் பாடுகின்ருர். இது ஏதோ கவிதைக்காகவும், கற்பனைக்காகவும், மிகுத்துரைக்காகவும் பாடப்பட்டதன்று. முருகன் உண்மையிலேயே முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் மாட்சிமை உடையவனே யாவான், நற்றிணை என்னும் சங்கநூலில், பிரமசாரி என்னும் சங்ககாலப் புலவர் ஒருவர், வெறிவிலக்கல் என்னும் துறையில், "முருகனே! நீ கடவுளாக இருந்தாலும் இரு. உண்மையில் நீ ஒரு மடவனே (அறிவில்லாதவனே) ஆவாய்" என்னும் கருத்தமைய,

"... .. ... ... ... ...
நின் அணங் கன்மை அறிந்தும், அண்ணாந்து
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவுள் ஆயினும் ஆக!
மடவை மன்ற வாழிய முருகே!"

எனப் பாடியிருக்கின்ருர்! இப்பாடலும், இப்பாடலைப் பாடிய ஆசிரியரின் பெயரும் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதைக் காண்கின்ருேம். அங்ஙனம் பாடிய புலவரையும், பாடலையும், யாவரும் விரும்பிப் போற்றிப் புகழ்கின்றனரேயன்றி, ஒருவரும் இகழ்ந்துரைக்கக் காண்கிலோம். முருகன் எல்லாம் அறிந்தவனேயாகிலும், அவன் அறியாததும் ஒன்று உண்டு. தன்னுடைய அடியவர்கள் எத்தனை குறைகளும் பிழைகளும் உடையவராகிலும், அவர்களுக்குக் கருணை காட்டுவதேயன்றி, அவர்கள்மீது ஒருபோதும் கோபம் கொள்ள அவன் அறியானும்.

"மொழியும் அடியார்கள்
கோடி குறை கருதினுலும்
வேறு முனிய அறியாத
தேவர் பெருமாளே"

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ்! "ஆருத ஆனந்தத்து அடியார் செய்யும் அனுசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும் சீருத பெருமான்'' என்பது அப்பர் திருத்தாண்டகம்.

முருகன் ஒரு கவிஞன் :

ஒரு சமயம் ஓர் ஊரில் செந்தமிழ்ப் பெருங் கவிஞர் ஒருவர் இருந்தார். செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங் கிய அவர் மிகப்பெரிய சிவ பக்தராகவும் இருந்தார். அவர் சிவபிரானைத் தவிர வேறு எவரையும் புகழ்ந்துபாடாத இயல் பினராக இருந்தார். அவரிடம் அன்பர் ஒருவர் சென்று, முருகனைப் பற்றிய துதி நூல் ஒன்று பாடித்தருமாறு பணிவுடன் வேண்டிக் கொண்டார். அதற்கு அப் பெருங் கவிஞர் "சிவபெருமான் ஒரு வரையே யான் பாடுவேன், முருகனைப் பாட இசையேன், கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவதா?'' என்று கூறி மறுத்துவிட்டார். தமிழ்ப் பெருங் கவிஞ ராகிய அவரைத் தடுத்தாட்கொள்ள முருகப் பெருமான் திருவுள்ளம் கொண் டார். அக்கவிஞர் ஒருநாள் வேற்றூர் ஒன்றிற்குச் செல்ல நேர்ந்தது. செல்லும் வழியில் ஒரு பெருங் காட்டைக் கடந்து செல்ல வேண்டிய நிலை நேர்ந்தது. கவிஞர் தன்னந்தனியாக நடந்து சென்று கொண்டிருக்கின்றார். அப்போது முருகன் பயங்கரமான வழிப்பறி வேட்டு வக் கோலத்தில் அவர்முன் தோன்றி னான். நில் என்று அதட்டினான். உன்னி டம் எவ்வளவு பணம் உள்ளது? காட்டு என்று உரத்த குரலில் கூறி அதட்டி வெருட்டினான். அவனது பயங்கரமான நிலையைக் கண்ட அளவில், புலவர் அஞ்சி நடுநடுங்கினார். 'என்னிடம் பணம் ஏதும் இல்லை. நான் ஒரு கவிஞன். என்னை விட்டுவிடு' என்று கெஞ்சிப் பணிந்தார். 'நீ கவிஞனாயின், என்னைப் புகழ்ந்து ஒரு செய்யுள் பாடு. என் பெயர்முட்டை. பாடினால் உன்னை ஒன் றும் செய்யாமல் விட்டு விடுகின்றேன்' என்றான் வேடுவன். உயிர் தப்பினால் போதுமென்ற நிலையையுற்ற கவிஞர், அவனுடைய பெயராகிய முட்டை என் னும் சொல்லையமைத்து, "நற்றாய் இரங் கல்'' என்னும் அகப்பொருள் துறையில் பின்வரும் பாடலைப் பாடினார்.

''பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும்
கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே;—மின்
போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்கும் காடு''

என்பது அந்தச் செய்யுள். செய்யுளைக் கேட்ட வேடுவன் ஏளனமாகச் சிரித் தான். 'நீரும் ஒரு கவிஞரா? நீர் இப்போது பாடியதும் ஒரு செய்யுளா? என்று ஏளனமாக வினவினான். கவிஞ ருக்கு உள்ளமெல்லாம் கலங்கிற்று. எவரும் மதித்துப் புகழ்கின்ற தம்முடைய கவிதையை, கல்வியேதும் இல்லாத வேடுவன் இகழ்ந்து கூறுவதா என்று மனம் வருந்தினார். 'கவிஞரே! கள்ளிச் செடியும்கூடப் பற்றி எரிந்து கரிந்து பொறியாகப் பறக்கின்ற கொடிய பாலை நிலம் என்று பாடினீரே, அத்தகைய பாலை நிலத்தில் காட்டு வேலமரத்து முள்மாத்திரம் எரிந்து கரிந்து போகாமல், நடப்பவர்களின் காலில் தைக்கக்கூடிய வலிமையுடையதாக இருக்குமோ? இதனைச் சிறிதும் சிந்தியாது பொருத்த மின்றிப் பாடிவிட்டீரே' என்று வேடுவன் எள்ளி நகையாடினான்.

இந்நிலையில் கவிஞர் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மனம் புண் ணாயினார். மனம் தடுமாறிப் பெரிதும் வருந்தினார். வேடுவனாக வந்தவன் முருகன் அல்லனோ? தமிழ்ப் பெருங் கவிஞராகிய அவர், மனம் வருந்துதலைக்

கண்டு, தமிழ்க் கடவுளாகிய முருகன் மனம் பொறுப்பனோ? திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் பாடுவதுபோல, முருகன் "நோவ உரையான்; அன்பர் நோவக் கண்பார்த்திரான்" ஆதலின் கவிஞரை நோக்கி "ஐயா, நீர் வருந்தற்க. உம்முடைய பெயரை வைத்து உம்மைப் புகழ்ந்து யான் ஒரு செய்யுள் பாடு கின்றேன். கேளும்" என்று கூறினான் வேடுவனாக வந்த முருகன்!

"விழுந்ததுளி அந்தரத்தே வேம்என்றும்,
வீழின்
எழுந்து சுடர்ச்சுடும் என்றும்,-செழுங்
கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வனையும்
போயினளே,
பொய்யா மொழிப்பகைஞர் டோல்".

என்னும் செய்யுளைப் பாடினான். கவிஞர் கேட்டுக் கொண்டிருக்கும்போதே வேட்டுவன் மறைந்தான். முருகன் அவருக்குக் காட்சி கொடுத்து மகிழ்வித்தான். கவிஞர், கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவதா? எனச் செருக்குற்று வினவிய தம்மை ஆட்கொள்ளுவதற்காகவே, முருகப்பெருமான் வேடுவனாகத் தோன்றி, முட்டை என்னும் பெயரைக் கூறித் தன்னைப் புகழ்ந்து பாடுமாறு பணித்து ஆட்கொண்டருளினான் என மகிழ்ந்தார். முருகனின் கருணையைக் கண்டு வியந்து போற்றித் துதித்தார். முருகன், தன்னை இகழ்ந்து வைதாரையும் இனிது உவந்து காத்து வாழவைத்தருள்வான் என்பதற்கு, இவ்வரலாறு செவ்விய நல்ல சிறந்த சான்றாகும். இவ்வரலாறு ஏதோ வெறும் கற்பனை போலும் என்று எவரும், கருதி விடுதலாகாது. ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட அருணகிரி நாதர்,

" கற்றுவிற் காட்டிக் கரைதுறை
நற்றுயிற் காட்டிப் புகழ்கலை
கற்றூர்சொற் கேட்கத் தனிவழி வருவோனே (1)
" முற்பா டப்பா டற்று ருக்கோர்
முட்கா டற்கப் பொருள்ஈவாய் " (2)
" முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப்பெயர் செப்பிக் கவிபெறு
பெருமாளே" (3)

என்று தம்முடைய திருப்புகழ்ப் பாடல்கள் பலவற்றில், இவ்வரலாற்றை இனிது எடுத்துப் பாடியிருத்தல் காணலாம். முருகனின் பெருங் கருணைத் திறனும், செந்தமிழ்ப் பேரார்வமும் எத்தகையவை என்பதை, இத்தகைய செய்திகளால் நாம் யாவரும் தெளியலாம்.

பண்பு நலங்கள் :

இந்து சமயத்திற்குரிய வேதாகம உபநிடதங்கள் முதலியன எல்லாம், கடவுளைச் சத்து சித்து ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்புகளும் ஒருங்கியைந்த பொருளாகக் கூறும். அவற்றுள் சத்து என்பது சிவம்; சித்து என்பது திருவருளாகிய சக்தி; ஆனந்தம் என்பது முருகன். இவ்வுண்மையினையே சிவபிரான் கோயில்களில் எல்லாம் வைத்து வழிபடப்பெறும் சோமாஸ்கந்தமூர்த்தம் உணர்த்துகின்றது.

மேலை நாட்டு நாகரிகப் பண்பாடுகள் அனைத்திற்கும் சாலவும் அடிப்படை வகுத்தவர்கள். கிரேக்க நாட்டு மக்கள் என்பர். அக் கிரேக்க நாட்டு மக்கள் உண்மை (Truth), நன்மை (Goodness), அழகு (Beauty) என்னும் மூன்றையும் மிகச் சிறந்த பண்புகளாகப் போற்றுவர். அவற்றுள் உண்மையைச் சிவம் என்றும்; நன்மையைச் சக்தி என்றும்; அழகை முருகன் என்றும் நாம் கூறுதல் பொருந்தும். முருகன் என்னும் சொல்லுக்கு அழகு, இளமை, மணம், கடவுட்டன்மை

என்னும் பொருள்கள் இருத்தல், இங்கு நாம் கருதுதற்குரியது.

முருகன் அடியவர்களுக்கு ஞான குருவாக எழுந்தருள்கின்றான். பழநி ஆண்டவன் வடிவில் யோகியாக ஒளிர் கின்றான். வீரர்களுக்கெல்லாம் மிக்க பெரு வீரனாக விளங்குகின்றான். தேவர் களுக்கெல்லாம் தேவனாகத் திகழ்கின் றான். தவமுனிவர்க ளெல்லாம் முருகனையே தம் வழிபடு கடவுளாகக் கொள்ளுகின்றனர். கலைஞர்களுக்கும், புலவர்களுக்கும் அவன் கருணை புரிகின்றான்.

குழந்தைகளுக்குக் குழந்தை வேலன் ஆகவும், இளைஞர்களுக்குப் பாலசுப்பிர மணியன் ஆகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம் கொண்ட அண்ணல் ஆக வும், வீரர்களுக்குத் தேவசேனாதிபதி ஆகவும், மந்திரோபதேசம் பெற விரும்பி வழிபடும் அன்பர்களுக்குச் சுவாமிநாதன் ஆகவும், இல்லற நிலையினர்க்கு வள்ளி தெய்வயானை உடனுறை சுப்பிரமணிய சுவாமி ஆகவும், பற்றற்ற தூய ஞானத் துறவற நிலையினர்க்குப் பழநி யாண்டவர் ஆகவும் பிறவாறும் விளங்கி, அவரவர் களுக்கு ஏற்ற நிலைகளிற் பல்வேறு வகை களில், முருகப் பெருமான் அருள்புரிந்து காத்து வருகின்றான்.

**களவும் கற்பும் :**

தமிழிலுள்ள அகப் பொருள் இலக்கண நூல்கள் கூறும் கற்பு நெறி, களவுநெறி என்னும் இருவகை நெறி களையும், தெய்வயானையின் திருமணத் தாலும், வள்ளியம்மையின் திருமணத் தாலும் உலகுக்கு முறையே உணர்த்தி யருளினான் முருகன். வள்ளி அம்மையின் திருமணம், ஐம்புலன்களாகிய வேடர் களிடையே அகப்பட்டு உழன்று வரும் உயிர்களை, இறைவன் குருவாக வந்து தடுத்தாட் கொண்டருளும் தன்மை யினையே, தத்துவ முறையில் தகவுற உணர்த்துகின்றது. "பணியா? என வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனாக" முருகன் விளங்குதல், அவன் அடியார்களுக்கு எளியவனாகும் இனிய இயல்புடையவன் என்னும் உண்மையினையே, உருவக முகத்தால் உணர்த்துகின்றது.

**கந்தபுராணம் :**

முருகனின் வரலாறு கூறும் கந்த புராணம், உண்மையில் ஆராய்ந்துணர்ந் தால், ஒருவகையில் நமது சொந்த புராணமே யாகும். கந்தபுராணத்தில் வரும், சூரபதுமன் சிங்கமுகாசுரன் தாரகா சுரன் என்னும் மூவரும், முறையே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும் மலங்களைக் குறிப்பவரே யாவர். தாரகன் கன்மமலம், சிங்கமுகன் மாயா மலம், சூரபதுமன் ஆணவ மலம். கன்ம மலம் முதலில் அழியும். ஆதலில் தாரகா சுரன் முதலில் இறந்தான். மாயா மலம் அறிவை விளக்கும், ஒரோவழி மயக்க மும் செய்யும். அம்முறையில் சிங்கமுகா சுரன் நல்லியல்பும் தீயஇயல்பும் ஒரு சேரக் கொண்டிருந்தான். ஆணவமலம் ஆவாரக சக்தி, அதோ நியாமிகாசக்தி என்னும் இருதிற ஆற்றல்கள் உடையது. அவ்வாறே சூரபதுமனும் மனித உடலும் குதிரைத் தலையும் கொண்டு, சூரன், பதுமன் என இருவேறு உடல்கள் ஒன்றி நின்றான். ஆணவ மலம் ஆற்றல் கெடுமே யன்றி, என்றும் அழிவதில்லை என்பது சைவசித்தாந்தம். அம்முறையில். சூர பதுமன் தன் தீய இயல்புகள் அழிந்து சேவலும் மயிலுமாக முருகனுக்குத் தொண்டு பூண்டு என்றும் அழியாத பெரு நிலை பெற்றான். அஞ்ஞானத்தை

ஞானமே வெல்லும், சூரபதுமனுகிய அஞ்ஞானப் பிழம்பை, மெய்ஞ்ஞான மாகிய வேற்படை வென்றது. முருகனுக்கு வேல் ஞான சக்தி; வள்ளி அம்மை இச்சா சக்தி; தெய்வயானை கிரியா சக்தி. முருகனின் மயில், விந்து தத்துவம்; கோழி நாத தத்துவம் என்னும் உண்மைகளைக் கந்தபுராணம் கவினுற விளக்குகின்றது.

## ஆறுபடை வீடு

முருகன் திருப்பரங்குன்றம், திருச்சீரலை வாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களில் எழுந்தருளி விளங்குகின்றுன். முருகன் படை வீரர் களுக்கெல்லாம் தலைசிறந்த படைவீரன் ஆதலின், அவன் எழுந்தருளி விளங்கும் தலங்கள், படை வீடுகள் எனப் பெயர் பெற்றன. ஆறுபடை வீடுகளிலும் முறையே ஒளிவடிவம், அருள்வடிவம், தவவடிவம், மந்திரவடிவம், எளிமை வடிவம், வியாபகவடிவம் என்னும் நிலை களில், முருகன் விளங்கும் இயல்பினைத் திருமுருகாற்றுப் படை சிறப்புற விளக்கு கின்றது.

## தொகுப்புத் தெய்வம்

முருகனை வணங்கினுல், பல கடவுளரை வணங்கி அடையும் பயன் களை எல்லாம் நாம் ஒருங்கே பெறலாம். மைந்தனுக்குச் செய்யும் சிறப்பால், தந்தை தாயராகிய சிவபிரானும், உமா தேவியும், தம்பியைப் போற்றுதலால் தமையனுகிய விநாயகரும், மருகனை வழி படுதலால் மாமனுகிய திருமாலும், தலைவனை வணங்குதலால் தேவரும், முனிவரும் ஆகிய அனைவரும் மகிழ்ச்சி அடைவர். ஆதலின் முருகன் வழிபாடு மிக்க சிறப்புடையது. எல்லாக் கடவுள ரின் இயல்புகளும் தன்பால் ஒருங்கே கொண்ட முருகனைத் தொகுப்புத் தெய்வம் என்பர் பெரியோர். முருகன் பால் நாம் அருளை எளிதாகவும் விரை வாகவும் பெறலாம். 'மழக்கை இலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்' என மாணிக்க வாசகர் பாடியது, முருகன் திறத்தில் மிகவும் பொருந்துவதாகும்.

## வேளைக்காரன் :

தனது அன்பர்களாகிய அடியவர்களை உற்ற வேளையில் வந்து காக்கும் சிறப் பால், முருகன் 'வேளைக்காரன்' எனப் படுவான். வேளைக்காரர் என்னும் படையைச் சேர்ந்த சிறந்த வீரர்கள், எங்ஙனம் உற்ற வேளையில் உயிர் கொடுத்தும் தங்கள் அரசனைக் காப்பாற் றும் உறுதியும் கடமையும் உடையவரோ அங்ஙனம் தன் அடியவர்களைக் காத்த லில் உறுதியும் கடப்பாடும் பூண்டு கொண்டிருப்பவன் முருகன். அச்சிறப்பை வலியுறுத்தவே அருணகிரிநாதர் முருகனை 'வேளைக்காரன்' என வியந்து கூறித் துதித்துப் போற்றுவர்.

முருகன் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தால், எத்தகைய கொடியவர்களும் திருந்தி நலம் பெற்று உய்வர். சில தெய் வங்கள் தம்மை எதிர்த்த பகைவர்களை அறவே அழித்தொழித்ததாக நாம் நூல் களில் அறிகின்ருேம். ஆனுல், முருகனே தன்னை எதிர்த்து நின்ற கொடியவனுகிய சூரபதுமனையும் நல்லவனுக்கித் திருத்தி ஆட்கொண்டு காத்தருளினுர்.

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்ருல்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்ருே
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான் !

—கந்தபுராணம்

**கற்பகமரம் :**

முருகன் தன் அடியவர் வேண்டும் நலங்களை யெல்லாம், அவர்கள் வேண்டியவாறே விரும்பிக் கொடுத்தருளும் பெருந்தன்மை வாய்ந்தவன், கேட்டன எல்லாம் கொடுத்தருளும் மாட்சிமையால் அவனைக் கற்பக மரம் போல்பவன் எனக் கவிஞர்கள் புகழ்ந்து பாடுவர். வள்ளி தெய்வயானையரைக் கிளைகளாகக் கொண்டு, பல்லுயிர்க்கும் அருளைப் பூத்து, அவற்றின் பிறவியைக் காய்த்திட்டு, அன்பர்கள் எல்லோருக்கும் முத்திக் கனியை அளிக்கும் கற்பக மரமாக முருகன் விளங்குகின்றான்.

கல்லகம் குடைந்த செவ்வேற்
 கந்தன்ஓர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான
 வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க்கு அருளைப் பூத்துப்
 பவநெறி காய்த்திட்டு அன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
 இருங்கனி உதவும் என்றும்.

—கந்தபுராணம்.

**கலியுகத்தும் வரதன் :**

முருகன் கலியுக வரதன் என்பர். பாம்பன் குமர குருதாச சுவாமிகள், அங்ஙனம் கூறின் முருகன் கலியுகத்தில் மட்டுமே வரம் கொடுப்பவன் எனப் பொருள்பட்டுப் பிழையாய் முடியுமாதலின், எல்லா யுகங்களிலுமே அடியவர்களுக்கு வரங்களைத் தரும் இயல்புடைய முருகன், கொடியதாகிய கலியுகத்திலுங் கூடப் பேரருள் சுரந்து வேண்டும் வரங்களை விரைந்து கொடுக்கும் பெருமாட்சிமையுற்றுப் பிறங்குகின்றான் என்னும் கருத்தமையக் "கலியுகத்தும் வரதனும் கந்தன்" என்றே கூறுதல் வேண்டும் என்று ஒருகால் தம் மாணவர்களுக்குப் பணித்தருளினார் என்பர். இவ்வாற்றால் முருகனின் அருள் மாட்சிமையை நாம் பெரிதும் உணரலாம்.

முருகனை அன்புடன் வழிபட்டு, முருகா முருகா எனப் பலகாலும் கூறித் தியானிப்பவர்கள், என்றும் குறையாத பெருஞ்செல்வத்தைப் பெறுவார்கள்; அவர்களை ஒருபோதும் எத்தகைய துன்பமும் அணுகாது; அவர்களுக்கு எந்த ஒரு நோயும் வராது. அவர்கள் சுற்றமும் கிளையும் சூழ, உயர்ந்த இன்பங்களை நுகர்ந்து கொண்டு நீடூழி காலம் வாழ்வார்கள்.

முருகா என உனை ஓதும்
 தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்;
 வியாதி அடைந்து நையார்;
ஒருகால முந்துன்பம் எய்தார்;
 பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார்;
 சமரா புரிப் புண்ணியனே.

—திருப்போரூர்ச் சந்நிதிமுறை

வரைபுணர் குறிஞ்சி மன்னன்
 வரைபக எறிந்த செவ்வேல்
மூருகலர் அலங்கல் திண்டோள்
 முருகன் என் றவன் பொற் றண்டைத்
திருவடி மலர் இறைஞ்சில்
 தீவினைச் செல்லல் முற்றும்
பருதியங் கடவுட் கண்ட
 பனிஎன அகன்று போமால்! (1)

ஆறிரு தடந்தோள் அண்ணல்
 ஆறெழுத் தினையும் ஓதில்
வேறொரு பிணிபோம் என்கை
 வியப்பதோ? பிறவி என்னும்
மாறரும் அநாதி நோயும்
 மாறிவே தாக மங்கள்
கூறரும் இன்ப வீட்டிற்
 குடிபுகுந் திருப்பர் அன்றே (2

—சீகாளத்திப் புராணம்

# கந்தர் கலிவெண்பா

(கருத்துத் தொகுப்புச் சுருக்கம்)

முன்னுரை :

கந்தர் கலிவெண்பா என்னும் நூல், திருச்செந்தூர் முருகப்பெருமான் மீது, குமரகுருபர சுவாமிகள் பாடியருளியது என்று, பலரும் அறிவர். குமரகுருபரர் ஐந்து வயது வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்து, பின்பு திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலும், கல்வி நலனும், பாடும் திறமையும் பெற்ருர். அவர் முதன் முதலாகப் பாடிய நூல் கந்தர் கலிவெண்பாவாகும். இந்நூல் முருகன் அடியார்கள் அனைவராலும் பெரிதும் பாராயணம் செய்யப்பட்டுப் போற்றி வரப்பெறும் மாட்சிமை வாய்ந்தது. இதன்கண் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் சுருக்கித் தொகுத்து விளக்கப்பெற்றுள்ளன. முருகனின் திருவுருவச் சிறப்பும், சிறந்த அருட் பண்புகளும் நன்கினிது விவரிக்கப்பட்டுள்ளன. முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் முழுவதும், இதன்கண் ஒரு குறிப்பும் விடாமல் சுருக்கித் தரப் பெற்றிருக்கின்றது. இதன் இறுதிப் பகுதியில், முருகனிடத்தில் அடியார்கள் வேண்டிப் பெறுதற்குரிய பல நலன்களும் ஒருங்கினிது தொகுத்து உணர்த்தப்பட்டுள்ளன. அளவால் சிறியதாயினும் பொருள் நலத்தாலும், கலை நலத்தாலும், கந்தர் கலிவெண்பாவானது பெரும் சிறப்புடையதாய்க் கவின்மிக்குத் திகழ்கின்றது. இந்நூலின் கருத்துச் சுருக்கத்தை, ஈண்டு இயன்றவரை ஒரு சிறிது காண்போம்.

சிவபிரானும் முருகனும், தந்தையும் மைந்தனும் போல வைத்துக் கூறப்படுவரெனினும், அவர்கள் தம்முள் வேற்றுமை உடையவர்கள் அல்லர். சங்கரனே சண்முகன், ஐம்முகச் சிவனே அறுமுகச்சிவன் என்பது பெரியோர்கள் கருத்தாகலின், சைவ சித்தாந்த நூல்களில் சிவபிரானுக்கிய பதிப்பொருளுக்குக் கூறும் இயல்களும் செயல்களுமெல்லாம், ஈண்டு முருகன் மீது வைத்துக் கூறப்பெறுகின்றன.

சைவ சித்தாந்தம் :

முருகன், பிரமதேவனும், வேதங்களும், நாத தத்துவமும், நாதாந்தமும், போதாந்தமும் காண இயலாத மெய்ஞ்ஞான வடிவினன். முதல் நடு முடிவைக் கடந்தவன். என்றும் பேரின்பமாய்ப் பேரறிவாய் விளங்குபவன். இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன், பெயரும் குணமும் உருவமும் அற்று, எங்கும் நிறைந்து ஒளிரும் பரமசிவமாய் நிற்பவன்.

நம்முடைய அறிவிற்கு மேம்பட்டவனுய், படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களுக்கும் அப்பாற்பட்டவனுய், மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் நான்கு கரணங்களுக்கும் எட்டாதவனுய், தனது அருளினல், பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் ஐந்து வடிவங்கள் கொண்டு, எல்லா உயிர்கட்கும் பற்றுக்கோடு ஆகி, மேலான இன்பத்தைத் தருபவன் முருகனே. குறைவிலா நிறைவாய், என்றும் உள்ளவனுய், பிறத்தல் இறத்தல், நுகர்தல் என்பவைகள் இல்லாதவனுய், இவ்வுலகில் பலவகையான வியக்கத்தக்க இந்திர சாலச் செயல்களைச் செய்து, தான் மயங்காமல் பிறரை மயக்குபவன் : எதன்கண்ணும் சாராது சார்ந்து, கருவின்றி நின்ற கருவாய், உருவின்றி நின்று அருளே உருவாய் விளங்குபவன் முருகன். மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களால் வரும் இச்சை ஞானம் கிரியை என்னும் சக்திகளால், முறையே இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று நிலைகளை உடையவனாக அவன் திகழ்கின்ருன்.

தான் ஒருவனே மகேசன் உருத்திரன் திருமால் பிரமன் என்னும் உருவத்திருமேனிகள் நான்கும், சிவம் சத்தி நாதம் விந்து என்னும் அருவத் திருமேனிகள் நான்கும், சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி ஒன்றும் ஆகிய

ஒன்பதிலும், உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ற ஒரு திருமேனியைக் கொண்டு, ஆணவ மலத்தில் அழுந்தி, உலகியல் வாழ்வில் மயங்கிக் கிடக்கும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை உயிர்களுக்கும் முத்தியளித்தற்காக மலபரிபாகம் வரும்படி முருகன் திருக்கடைக்கண் நோக்கம் வழங்கி அருள்கின்றான்.

இவ்வாறு ஒன்பதுவகைத் திருமேனிகள் தாங்கி, விந்து மோகினி மான் என முறையே வழங்கப்பெறும் சுத்தமாயையின் தொடர்புற்றுப் பல கடவுளராகி, மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களையும் தனக்குரிய உறுப்புக்களாக முருகன் கொண்டுள்ளான்.

அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றம், தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு இலட்சம் கரு வேறுபாடு என்பவற்றுள், ஒன்றில், அனுபவித்துத் தீர்ப்பதற்குரிய வினைக்கு ஏற்பப் பிறவி எடுத்துக் காற்றாடியும் சகடக்காலும் போல உழலும்படி, உயிர்களின் பால் முருகன் திரோதான சத்தியைச் செலுத்தி அருள்கின்றான்.

இன்பமே நிறைந்த சுவர்க்கம், துன்பமே நிறைந்த கொடிய நரகம் என்பவற்றில், உயிர்கள் இன்ப துன்பங்கள் நுகருமாறு செய்தருள்பவன் முருகனே. அவ்வாற்றால் உயிர்களின் வினைகள் பக்குவப்பட்டுச் சிறிது நல்ல காலம் வந்ததும், ஏணிப்படிகள் போல அமைந்துள்ள புறப்புறம் புறம் அகப்புறம் என்னும் சமய நெறிகளில் அடைந்து ஈடுபாடு கொள்ளும்படி செய்து, பலவகை விரதங்கள், பிரம்மசரியம் கிரகஸ்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து, உயிர்களைப் படிப்படியே சரியை கிரியை யோகம் என்னும் சாதனங்களிற் செலுத்தி, சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்தி இன்பங்களை, உயிர்கள் பெறுமாறு செய்து உதவுபவன் முருகனே.

பின்னர் உயிர்களுக்கு மெய்யுணர்வாகிய ஞானம் மேலோங்கச் செய்து, மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நான்கு வகையான சத்திநிபாத நிலைகள் ஏற்படுதற்கு, இருவினையொப்பு மலபரிபாகம் என்பன நிகழுமாறு செய்து, அறிவுக்கு அறிவாகி, அதற்கும் எட்டாத நெறியில் விளங்கும் தனது மேலான நிலையை விடுத்து, கருணையே வடிவமாய் இவ்வுலகில் ஞானாசிரியனாகப் போந்து, நம்மை ஆட்கொண்டு அருள் புரிகின்றான் முருகன்.

தன்னுடைய திருநோக்கால் உயிரினங்களின் சஞ்சிதம் என்னும் பழவினையைத் தன் அருட்பார்வையால் போக்கி, தூல தேகத்தின் கருவிகள் அறுபதும், சூக்கும தேகக் கருவிகள் எட்டும், மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை துவாதசாந்தம் என்னும் ஏழுநிலங்களும், மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களும், உயிர்களின் பார்வையிலிருந்து நீங்கும்படி, அறியாமை என்னும் ஆணவமல மறைப்புத் திரையைக் கிழித்து, அறிவினால் காண்பதற்குரிய மெய்ஞ்ஞானக் கண்ணைக் காட்டியருள்பவன் முருகன்.

திருவடி ஞானமாகிய சிவஞானத்தால், பதி, பசு, பாசம். என்னும் மூன்றையும் செவ்விதின் அறியும்படி செய்து, எங்கும் தேங்கி நீக்கமற நிறைந்துள்ள பேரின்ப நிலையைக் காட்டி, போக்கு-வரவு, நினைப்பு-மறப்பு, பகல்-இரவு முதலிய வேறுபாடுகள் நிறைந்த விபரீத ஞானத்தை நீக்கி, உயிர்களுக்கு இறவாத இன்பம் மருவும்படி முருகன் செய்தருள்கின்றான்.

## முருகனின் திருவுருவம் :

கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூவகை அவத்தை நிலைகளையும் போக்கி, முத்தான்மாக்களுடைய கூட்டத்தில் சேர்த்து, பெரிய பரமுத்தியைத் தந்து, அகப்பற்று புறப்பற்றுக்கள் அற்ற இடமே தனது திருவடியாகவும், ஞானமே உருவாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் சக்திகள் திருக்கண்களாகவும், இப்பெரிய உலகமே கோயிலாகவும் நிற்கும் ஒப்பற்ற தனிச் சுடராகத் திகழ்பவன் முருகன். அவனது திருமுன்னிலையில் எல்லா உயிர்களும் வேறுபாடின்றிச் சமமாக விளங்கும்.

நவ மணிகளாலும் பசும்பொன்னாலும் செய்யப் பெற்று மின்னல் போன்று ஒளிவிடுகின்ற திருமுடிகளும்; ஆறு பிறைகளை வரிசையாக

வைத்தாற் போன்ற நெற்றிப் பொட்டழகும்; தாமரை மலர் போன்ற அழகிய பன்னிரண்டு விழிகளும், பல சூரியர்கள் ஒருங்கே ஒளி வீசினாற்போல விளங்கும் மகரக் குழைகளும்; புன்முறுவல் தவழும் உதடுகளும்: பிறவி வெப்பம் தீர்க்கும் இன்சொல்லும் உடையவன் முருகப்பெருமான்.

### ஆறுமுகங்கள் :

அவனுடைய ஆறுதிருமுகங்களில் சூரபது மனைத் தடிந்து பகைவர்களின் உயிரைப்போக்கி, அழியாத பேரின்ப வாழ்வைத் தருவது, ஒரு திருமுகம்; உயிர்களுக்கெல்லாம் அவற்றின் பிராரத்த கன்மங்களைப் போக்கி, அழியாத பேரின்ப வாழ்வையளிப்பது ஒரு திருமுகம்; வேதாகமங்கள் பலவற்றையும் ஐயமின்றி முற்றுப்பெறச் செய்வது ஒரு திருமுகம்; உயிர்களின் மல இருளைப் போக்கிக் கோடி சூரியர்களைப் போல ஒளிவீசுவது ஒரு திருமுகம், நேசமுடன் போகம் நுகரும் வள்ளி தெய்வயானை அம்மையர்கட்கு மோகம் தருவது ஒரு திருமுகம், அருள் வேட்கையோடு திருவடியைச் சார்ந்தாரைக் காப்பது ஒரு திருமுகம். இங்ஙனம் ஆறு திருமுகங்களும் கொண்டு விளங்குபவன் முருகன்.

### பன்னிரு கைகள் :

தேன் சொட்டும் கடப்ப மலர் மாலையும், மணம் மிக்க குரவ மலர் மாலையும் அணிந்த பன்னிரண்டு தோள்களை யுடையவன் முருகன். அவற்றுள் தேவர்களுக்கு அமிர்தத்தை அளிப்பது ஒன்று, தேவ மகளிரைத் தழுவி அணைப்பது ஒன்று, மழை பொழியச் செய்து உலக உயிர்களைக் காப்பது ஒன்று. பூமாலைகள் நெருங்க அணிந்திருப்பது ஒன்று, அடியவர்களை அஞ்சேல் என்று கூறி மார்பிலே வைத்தது ஒன்று, இடுப்பின் இடப்பக்கத்தில் வைத்திருப்பது ஒன்று, தொடையிற் சார்த்தியது ஒன்று; வீரவாளை அணிந்தது ஒன்று; மணி சேர்ந்தது ஒன்று; போரில் அங்குசம் பிடிப்பது ஒன்று; கேடயம் சுழற்றுவது ஒன்று; வாளேந்துவது ஒன்று. இத்தகைய பன்னிரண்டு திருக் கைகளை உடையவன் முருகன்.

### தெய்வ விளக்கு :

குடம் போன்ற தனங்களும், சிவந்த இதழ்களும், கொடி போன்ற மெல்லிய இடையும் உடைய வள்ளி தெய்வயானை என்னும் இருவரும் விரும்பித் தழுவும் அகன்ற மார்பும், பூப் போன்ற அழகிய பட்டாடையும், பொன்னாலமைந்த அரைஞாணும், கச்சையழகும், திரு அரையும், நாத தத்துவமாகிய வீரக்கழலும், பொற்கிண்கிணியும், பாதங்களில் அணிந்த சிலம்பும், ஒரு நூறாயிரம் உதய சூரியர்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவது போன்ற பேரழகு வாய்ந்த தெய்வீக வடிவமும், ஆகியவற்றை அகக் கண்ணால் கண்டு அன்பு செய்து வழிபடுவோர்க்கு ஆருயிராய், அவர்களின் இதய கமலத்தில் வீற்றிருக்கும் தெய்வீக விளக்கொளியைப் போன்றவன் முருகன்.

அகரம் உகரம் மகரம் நாதம் விந்து எனப் பெறும் ஐவகை ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழில்களை நடத்தும் பேருருவாய் நிற்பவன் முருகன். அவனுக்கு மந்திரமே இரத்தம்; பதமே மாமுடி, வன்னமே தோல், புவனமே உரோமம், தத்துவமே ஏழு தாதுக்கள், கலையே உறுப்புக்கள். இங்ஙனம் ஆறு அத்துவாக்களின் வடிவாய்க் காட்சியளிப்பவன் முருகன்.

பலகோடி அண்டங்கள் உருவாகவும், சராசரங்கள் உறுப்புக்களாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சத்திகள் அகக் கருவிகளாகவும் கொண்டு,வழிபடும் அன்பர்களுக்குச் சூக்கும ஐந்தொழில்களை ஏவி நடத்துபவன் முருகன். அவன் நிலம் நீர் தீ வளி விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் அட்டமூர்த்தம் கொண்டு விளங்குகின்றான். இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டுப் பகுதிகளை யுடைய அட்டாங்க யோகத்தின் முடிவில், ஞானத்தை அளிக்கும் பயனாக இருப்பவன் முருகன்.

### தசாங்கங்கள் :

அன்பர்கள் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற ஆனந்தமாகிய மலை; பேரின்ப வெள்ளமாகிய ஆறு, இன்பம்தரும் மேலுலகமாகிய நாடு, போக்கு வரவு இல்லாத உயர்ந்த அழகிய நகரம்; ஐந்தெழுத்து ஓதிச் செலுத்தும் குதிரை; மதம் தோய்ந்து களித்துத் துதிக்கையினால் ஐந்து மலங்களையும் காய்ந்த சிவஞானமாகிய யானை; அறிவும் அன்பும் கொண்டு தொடுத்த

மலர் மாலை, ஐந்தொழில் நடத்தும் உயர்ந்த கொடி; நவநாதமாகிய முரசு; புவனங்களை ஆக்கி இயக்கும் ஆணை ஆகிய தசாங்கங்கள் கொண்டவன் முருகன்.

இதுகாறும் முருகனின் அருமை பெருமைகளை விளக்கும் முறையில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள், கந்தர் கலிவெண்பாவில் சந்தமுற நன்கினிது சுருங்கக் கூறி விளக்கப்பெற்றன. (கண்ணிகள் 1 முதல் 74 வரையில்). [இனி, கண்ணிகள் 75 முதல் 108 வரையில், கந்த புராண வரலாறுகள் கவின் மிகச் சுருக்கித் தொகுத்துக் கூறப்படுகின்றன.]

## கந்தபுராணச் சுருக்கம்

கயிலாய மலையில் உமாதேவியுடன் சிவ பெருமான் எழுந்தருளியுள்ளான். ஒருநாள், அசுரர்களின் கொடுமையைத் தாங்காத தேவர்கள், சிவபெருமானிடம் சென்று தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்கின்றனர். சிவபிரான் அவர்களின் முறையீட்டைக் கேட்டுத் திருவுள்ளம் இரங்குகின்றான். தனக்கு இயல்பாக உரிய ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களுடன், கீழ்நோக்கிய அதோமுகம் என்னும் முகத்தையும் கொண்டு ஆறுமுகங்கள் உடையவனாய், ஆறுநெற்றிக் கண்களினின்றும் ஆறு தீப்பொறிகளை வெளியே விடுத்தான். அவைகள் எல்லா உலகங்களிலும் பரவித் தேவர்களுக்கு அச்சத்தை விளைவித்தன. அதனால் சிவபிரான் அவற்றைத் திருக்கையால் எடுத்து வாயு தேவனிடம் தந்தான். அவன் அதனைத் தாங்கலாற்றாமல் அக்கினி பகவானிடம் அளித்தான். அவனும் அதைத் தாங்க முடியாமல் குளிர்ந்த கங்கை யாற்றில் விட்டான். கங்கையும் தாங்கமுடியாமல், தனது மடியில் தாங்கிக் கரையிலுள்ள சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். அங்கு அப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்கள் ஆகிய அறுவரின் முலைப்பால் குடித்து விளையாடின. சிவபிரான் அக்குழந்தைகளை உமாதேவியாருக்குக் காட்டினான். தேவியார் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து அணைத்தாள். அதனால் அவைகள் ஒருருவம் ஆயின. அது கண்டு மகிழ்ந்து கந்தன் எனப் பெயரிட்டு, முகத்தில் அணைத்து உச்சி மோந்து திருமுலைப் பால் ஊட்டி, உமாதேவியார் சிவபிரான் இடத்தில் அக்குழந்தையை அளித்தாள்.

உமாதேவியாரின் சிலம்பிலிருந்து சிதறிய நவமணிகளினின்று, மாணிக்கவல்லி முத்துவல்லி புஷ்பராகவல்லி கோமேதகவல்லி வைடூரியவல்லி வைரவல்லி மரகதவல்லி பவளவல்லி இந்திரவல்லி என்னும் நவசக்திகள் தோன்றினர். அவர்கள், சிவபிரானை விருப்புடன் நோக்கிக் கருக்கொண்டனர். அதனால் அவர்களிடமிருந்து வீரவாகு வீரகேசரி வீரமகேந்திரர் வீரமகேச்சுவரர் வீரபுரந்தரர் வீரராட்சசர் வீரமார்த்தாண்டர் வீராந்தகர் வீரதீரர் என்னும் நவ வீரர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய வீரவாகுவை அழைத்து, நாரதமுனிவர் செய்த வேள்வியில் தோன்றி, உலகத்தையழித்து உலவி வரும் ஆட்டுக்கிடாயைக் கொண்டு வருக என்று முருகன் கட்டளையிட்டான். அங்ஙனமே வீரவாகு அதனைப் பிடித்துக் கொணர்ந்து விடுக்க, அதனை முருகன் எட்டுத் திக்குக்களிலும் செலுத்தி விளையாடினான்.

ஒருகால் பிரமன் கயிலைக்குச் சென்றபோது அகந்தையால் முருகனை வணங்காது சென்றான். முருகன் அவனை அதட்டி அழைத்து ‘நீ யார்? நீ செய்யும் தொழில் யாது?’ என வினவினான். அதற்கு அவன் ‘நான் பிரமதேவன், நான் செய்வது படைப்புத் தொழில்’ என்றான். படைப்புத் தொழிலை நீ எவ்வாறு செய்கின்றனை’ என முருகன் வினவ, ‘வேதங்களை ஓதிச் செய்கிறேன்’ என்றான் பிரமன். ‘வேதங்களை ஓதிக் காட்டு’ என முருகன் பணித்தான். பிரமன் வேதத்தை ஓதத் தலைப்பட்டு, முதலில் ‘ஓம்’ என்று கூறித் தொடங்கினான். முருகன் உடனே அவனை நிறுத்தி, ‘நீ இப்போது ஓதிய ஓம் என்பதன் பொருளைக் கூறுக’ எனப் பணித்தான். அவன் தெரியாது விழித்தான். ‘இதுதானும் அறியாத நினக்கு இத்துணைச் செருக்கா? நீ படைப்புத் தொழிலைச் செய்யுந் தன்மை யாங்ஙனம்?’ எனக் கடிந்துரைத்து, அவனைத் தலையிற் குட்டிச் சிறையில் இடுவித்தான்.

பிரமன் சிறைப்பட்டதனால் வருந்திய திருமால், சிவபிரானிடம் சென்று முறையிட்டார். சிவபிரான் நந்திதேவரை முருகன்

பால் உய்த்து, பிரமனைச் சிறையினின்று விடுவிக்கப் பணித்தார். முருகன் அதற்கு இசைந்திலன். சிவபிரான் நேரே போந்து முருகனைக் கண்டார். முருகன் சிவபிரானைப் பணிந்து, பிரமன் பிரணவப் பொருள் அறியாமையினுல் சிறைப்பட்டதனைக் கூறினுர். சிவபிரான், 'அற்றேல், பிரணவத்தின் பொருளை நீ எனக்குக் கூறவல்லையோ' என்ருர். முறைப்படி இருந்து கேட்பின் உரைப்பேன்' என்று முருகன் மொழிந்தருளினுன். சிவபிரானும் அதற்கு இசைய, முருகப் பெருமான் சிவனுர் மனங் குளிர, உபதேச மந்திரம் இரு செவிமீதிலும் பகர்தல் செய்தான்.

தேவர்களின் துன்பத்தைத் தீர்ப்பதற்காக முருகன் தாரகாசுரனை அழித்தான். அவனுக்குத் துணையாகப் போந்து மலையாக நின்ற கிரவுஞ்சன் என்னும் அசுரனையும், வீரவடிவேல் விடுத்து ஒழித்தான். கடல் அலை வீசும் திருச்செந்தூரில், கருணைவெள்ளம் போல உயர்ந்த பீடத்தில் வீற்றிருந்து, தேவேந்திரனுக்குத் தஞ்சமளித்தான். சூரபதுமனிடம் நல்லுரைகள் கூறிவரும்படி வீரவாகுவைத் தூதுவிடுத்தான். ஆனுலும் சூரபதுமன் தேவர்களைச் சிறைவிட மறுத்தமையால், தேர் யானை புரவி காலாள் என்னும் நான்கு வகையான படைகளையும் சினந்து கொண்டுசென்று, பானுகோபன், சிங்கமுகன், முதலிய அசுரர்களை வதைத்து, வெற்றிமாலையணிந்தான். அதுகண்டு எதிர்த்து வந்து தோற்று, மாமரமாகக் கடலில் ஒளிந்த சூரனை இரண்டு கூறுகளாகப் பிளந்தான். அவற்றில் ஒன்று மயிலாகவும், மற்றென்று கோழியாகவும் வடிவெடுத்து நின்றது. முருகன் மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டான்.

இவ்வாறு சூரபதுமனைத் தடிந்ததனுல், முருகன மும்மூர்த்திகளின் குறைகளைப் போக்கினுன். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தான். முருகன் அருளால் தேவர்கள் மகிழ்ந்தார்கள். தேவேந்திரன் தனக்கும் தேவர்களுக்கும் நலம்செய்த முருகனுக்குத் தன் நன்றியைப் புலப்படுத்த விரும்பினுன். அதனுல் தன் மகளாகிய தெய்வயானை யம்மையை முருகனுக்கு மணம் செய்து தர விரும்பி, ஏற்றுக் கொண்டருளுமாறு முருகனைப் பணிந்து வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளுக்கிசைந்து. தெய்வயானை யம்மையை முருகன் திருப்பரங்குன்றததில் மணம் புரிந்து கொண்டு மகிழ்வித்தான்.

திருமாலின் புதல்வியராகிய அமுதவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும் முருகனை மணக்க விரும்பித் தவம் புரிந்தனர். முருகன் பணித்தபடி அமுதவல்லி விண்ணுலகத்தில் தெய்வயானையாகத் தோன்றி முருகனை மணந்தனள். மற்றெருத்தியாகிய சுந்தரவல்லி மண்ணுலகத்தில் சிவமுனிவர் என்பவரின் அருட்பார்வையால் மானென்றின் வயிற்றில் கருவுற்று, வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் தோன்றி, வள்ளி எனப் பெயரிடப்பெற்று, நம்பிராசன் என்னும் வேடர் தலைவனுல் எடுத்து வளர்க்கப் பட்டு வந்தாள். தமிழ் நூல்கள் கூறும் கற்பு களவு என்னும் இருவகைத் திருமண முறைகளுள், கற்பு மணத்திற்குரிய எடுத்துக்காட்டாகத் தெய்வயானை அம்மையை மணந்த முருகன், களவு மணத்திற்கு இலக்கியமாகப் பலவகைத் திருவிளையாடல்களை நிகழ்த்தி வள்ளியம்மையை மணந்து கொண்டான்.

(இவையனைத்தும் கந்தபுராணம் கூறும் முருகனின் விரிவான வரலாற்றின் சுருக்கம். சுருங்கிய சில வரிகளில் கந்தபுராண வரலாறு முழுதினையும் முறைப்படத் தொகுத்து, ஒருங்கே தொடுத்து இனிது பாடியருளிய குமரகுருபரரின் கவிதைக் கலைநலமும், பக்தியுணர்வின் சிறப்பும் பெரிதும் பாராட்டுதற் குரியனவாகும்.)

## வேண்டுகோள் :

திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோருடல் பழமுதிர்சோலை என்னும் ஆறுபடை வீட்டுத் தலங்களையும் தரிசித்து, ஆறு எழுத்து மந்திரத்தைச் செபித்து, வழிபடும் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளிக் குடிகொள்ளும் முருகனே! திருச்சீரலைவாய் ஆகிய திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்து, எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் பாதுகாத்து அருள் புரியும் செவ்வேளே!

எண்ணில்லாத தொன்னெடுங் காலமாக அடைந்து வருகின்ற பிறவித் துன்பமும், காலமன்றி எதிர்பாராமல் நேரும் இறப்புத் துன்பமும் பலகோடி இடையூறுகளும், பலவகையான

பாவங்களும், பில்லி சூனியம் போன்ற ஏவல் வினைகளும், பாம்பு பிசாசு கொடிய பூதம், பெரியதீ, நீர்வெள்ளம், தீங்கு விளைவிக்கப் பகைவர்கள் விடும் படைக்கலங்கள், தீமை விளைவிக்கும் கொடிய நஞ்சு, கொடிய விலங்குகள் முதலியன எவையாயினும், எப்போது வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தில் அப்போதே நின்னுடைய பச்சை மயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோள்களும், அச்சம் அகற்றும் அயில்வேலும், கச்சைகட்டிய திரு அரையும், சிறிய மெல்லிய திருவடியும், அஞ்சேல் என்னும் திருக்கையும், அருள்பொழியும் பன்னிரண்டு திருவிழிகளும், ஒளிவீசுகின்ற அழகிய ஆறு திருமுடிகளும், எல்லாத் திசைகளிலும் எதிரே தோன்ற வெளிப்பட்டு, இடுக்கண்களையெல்லாம் பொடியாகச் செய்து, எல்லா வரங்களையும் தந்து, நீ எங்கள் உள்ளத்தில் புகுந்து உல்லாசமாகக் குடியிருத்தல் வேண்டும் !

எங்களுக்கு ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் திறமையையும், அட்டாவதானம் என்னும் அருஞ்செயல் புரியும் ஆற்றலையும், இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறுகள் அமைந்த பற்பல காவியங்களின் பயிற்சியையும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து இலக்கணங்களிலும் தேர்ச்சி நிரம்பிப் பழுத்த தமிழ்ப்புலமையையும் சிறப்புறக் கொடுத்தருள்க! இப்பிறவியிலுள்ள அகப்பற்று புறப்பற்றுகளாகிய இரண்டு வேதனைகளையும் அகற்றி, ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி, பசுபோதம் நீங்கி, ஒழுக்கம் வாய்ந்து, திருவருளின் சிறப்பை ஆராய்ந்து இன்புறுவதையே பொழுது போக்காகக் கொண்டுள்ள சிறந்த பழைய அடியார்களுடன் கூடும்படி செய்து, பேரின்பத்தை நிறைய நுகரச் செய்து, மணம் பொருந்திய சிவந்த தாமரை மலர்போன்ற நின் திருவடிகளைக் காட்டி ஆட்கொண்டு, அடியேங்களுக்கு முன்னின்று நீ அருள்புரிவாயாக !


முடிவுரை :

இங்ஙனம் பற்பல நலங்களும், அற்புதக் கவிதைச் சிறப்பும் அமைந்து பக்தியுணர்வை வளர்ப்பதற்குரிய பாராயணப் பனுவலாக விளங்கும் கந்தர் கலிவெண்பா என்னும் கவின் மிகு நூலை, நாம் அனைவரும் நாடோறும் ஓதி, முருகன் திருவருள் பெற்று உய்ய முயலுவோமாக !


—ஆசிரியர்




பழநித் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில்
கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள்.



சென்னைக் கோடம்பாக்கம் அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் நிர்வாக அதிகாரி குடியிருப்பு இல்லத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., தமிழ்வேள் திரு. பி. டி. ராஜன், மற்றும் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



சென்னைக் கோடம்பாக்கம் அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் நிர்வாக அதிகாரி குடியிருப்பு இல்லத் திறப்பு விழாவில், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., தமிழ்வேள் திரு. பி. டி. ராஜன், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



சென்னைக் கோடம்பாக்கம் அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் நிர்வாக அதிகாரி குடியிருப்பு இல்லத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A , B.L., I.A.S , தமிழ்வேள், திரு பி. டி. ராஜன், துணை ஆணையர் திரு. எ. வேங்கடாசலம், B.SC., B.L., முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவின், யாகசாலையில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. பு. மனோகரன், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., மதுரைத் துணை ஆணையர் திரு. ம. அ. முருகேசன், அறங்காவலர் திரு வி. வி. சி. ஆர். எம். கந்தசுவாமி, துணை ஆணையர் திரு. வி. சௌ. கோதண்டபாணி, ஆகியபெருமக்கள் அமர்ந்திருந்து, வேள்விகளைக் கூர்ந்து கவனித்தல். (2—9—73).

# தமிழ் இன்பம்

"முத்தமிழ்க் காவலர்''
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

பழநியில் அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலில் நடைபெறுகின்ற திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிலே, 'தமிழ் இன்பம்' என்ற பொருள்பற்றிப் பேசும்படி அன்பர்கள் என்னைக் கேட்டுக் கொண்டுள்ளனர். முருகன் தமிழின்பால் பெரு விருப்புடையவன்; தமிழை ஆராய்ந்தவன்; சங்கத் தமிழின் தலைமைப்புலவன் என்று குமரகுருபரர் முதலிய தமிழ்ப் பெருஞ் சான்றோர்களால் போற்றப் பெறுபவன். ஆதலின், இங்குத் தமிழின்பம் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவது மிக்க சிறப்பும் பொருத்தமுமேயாகும்.

இசைத்தமிழ் வேறு, தமிழிசை வேறு. அது போல, இன்பத்தமிழ் வேறு, தமிழ் இன்பம் வேறு. தமிழால் பெறுகின்ற சிறந்த இன்பம் தமிழ் இன்பம், எனலாம். தமிழ்வேறு, இன்பம்வேறு அல்ல. தமிழே இன்பம்; இன்பமே தமிழ் எனக் கூறுதலும் பொருந்தும். "இன் தமிழ் இயற்கை இன்பம்'' என்று சீவக சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கதேவர் குறிப்பிட்டு அருளியிருக்கும் தொடர், தமிழ் இன்பத்தின் சிறப்பைத் தகவுற உணர்த்துவதாகும்.

## தமிழின் சிறப்பு

உலகத்தில் எத்தனையோ பல சமயங்கள் இருக்கின்றன. அவைகளுள் இந்து மதம், சைனமதம், பௌத்தமதம், இசுலாமியமதம் கிறித்துவமதம் என்பனவே, பெரும்பான்மையாக விளங்கி வருகின்ற சமயங்களாகும். இவைகள் அனைத்தும் நம் ஆசியாக் கண்டத்திலேயே தோன்றியனவாகும். வேறு கண்டங்களில் இச்சமயங்களுள் எவையும் தோன்றவில்லை. எனவே அக்கண்டங்களெல்லாம் வெறும் உப்புக் கண்டங்களும், ஒப்புக்குக் கண்டங்களுமேயாகும் எனலாம். உலகப் பெருஞ்சமயங்கள் அனைத்துமே நம் இந்தியாவில், அதிலும் சிறப்பாக நமது தமிழ்நாட்டில் இருந்து வருகின்றன. உலகில் வேறு எந்த மொழியிலும், இச்சமயங்கள் எல்லாவற்றிற்குமுரிய இலக்கியங்களைக் காண்பதரிது. நமது தமிழ்மொழி ஒன்றில்மட்டும்தான், சைவம் வைணவம் சாத்தம் சௌரம் காணபத்தியம் கௌமாரம் என்னும் பாகுபாடுகளையுடைய இந்துமதம்–சைனமதம் – பௌத்தமதம்-கிறித்தவமதம்-இசுலாமியமதம் ஆகியவற்றிற்குரிய இலக்கியங்கள் தனித் தனியே உள்ளன. சைன சமயத்திற்குத் திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியும், பௌத்த சமயத்திற்குச் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையும், கிறித்துவ மதத்திற்கு வீரமாமுனிவர் பாடிய தேம்பாவணியும், கிருஷ்ணபிள்ளை என்பவர் இயற்றிய இரட்சணிய யாத்திரிகமும்; இசுலாமிய மதத்திற்கு உமறுப்புலவர் பாடிய சீறுப்

*கேட்டு எழுதியவர் : ஆசிரியர்

புராணமும் பிறவும் தமிழில் சிறந்த தமிழ் இலக்கியங்களாக அமைந்துள்ளன. இங்ஙனம் பல்வேறு சமயங்களுக்கும் உரிய இலக்கியங்களை எல்லாம் ஒரு சேரப்பெற்றிருக்கும் சிறப்பு, நம் தமிழ் மொழி ஒன்றற்கே உரியதாகும்.

### நான்கு பேருண்மைகள்

இதுமட்டுமல்ல, நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நான்கு சிறந்த பேருண்மைகளைக் கண்டறிந்து, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகத் தெளிவாக வலியுறுத்தி அறிவுறுத்தியிருக்கின்றனர். அந்நான்கு சிறந்த உண்மைகளை, வேறுஎந்த நாட்டினரும் இவ்வளவு தெளிவாக வலியுறுத்திக் கூறியிருப்பதாகத் தெரியவில்லை.

(1) ஒன்றே குலம்.
(2) ஒருவனே தேவன்.
(3) யாதும் ஊரே.
(4) யாவரும் கேளிர்.

என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே, நம் பண்டைத் தமிழ் முன்னோர்கள் கூறியருளிய உண்மைகள், இன்றும் எவராலும் மறுக்கப்படாத நிலையில் உள்ளன. இந்நான்கு உண்மைகளும், எல்லா நாட்டினரும், எல்லா மொழியினரும் ஏற்று உடன்பட்டுப் போற்றிக் கொண்டு மகிழத்தக்கனவாக விளங்கி வருகின்றன. தமிழ் மக்களின் பேரறிவு, பெருந்தகைமை, பரந்துவிரிந்த மனப்பான்மை, சிறந்துயர்ந்த பண்பாடு, நாகரிகப் பண்பாட்டு வாழ்க்கைநலன், என்பவற்றையெல்லாம் விளக்கிக் காட்ட வல்லனவாக, இந் நான்கு பேருண்மைகளும் சிறந்து திகழ்கின்றன. இவற்றை எண்ணும்போது நம் உள்ளமெல்லாம் தமிழ் இன்பத்தில் மூழ்கித் திளைத்துப் பெருமிதம் கொண்டு மகிழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

### ஐந்திணைப் பகுப்பு

தமிழன் இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்தியவன். தமிழன் உலகின் இயற்கையமைப்பை ஆராய்ந்து அறிந்து நிலம் ஐந்து எனப்பாகுபாடு செய்தான். தமிழன் ஆராய்ந்து பாகுபாடு செய்த குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து நிலங்களுக்கு வேருக, இவற்றில் அடங்காத ஆருவது நிலம் என்ற ஒன்றை, இதுவரையில் எந்நாட்டினரும் கண்டறிந்து கூறமுடியவில்லை. நம்முடைய சங்கத்தமிழ் இலக்கியங்களில், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணை வளங்களைப் பற்றி விளக்கிப் பாடும் அழகிய இனிய அரிய பாடல்கள் பலப்பல உள்ளன. இத்துணைப் பழமையும் இனிமையும் அருமையும் பெருமையும் மிக்க பாடல்கள், தமிழில் மிகுதியாக அமைந்திருப்பது போல, வேறு எம்மொழியிலும் காண்பது அரிது. இம்முறையில் ஆராய்ந்து சிந்தித்தாலும், நம் உள்ளத்தில் தமிழ் இன்பம் பொங்கித் ததும்பிப் பெருகுதல் திண்ணம்.

### நாற்றிசைக் காற்று

நமது தமிழ்நாட்டைத் "தமிழ் கூறும் நல்லுலகம்" என்று நம் பெரியோர்கள் போற்றிச் சிறப்பித்துப் புகழ்ந்துள்ளனர். சில நாடுகளில் வெயிலின் வெப்பம் மிகுதியாக இருக்கும். சில நாடுகளில் குளிர் மிகுதியாக இருக்கும். சில நாடுகளில் அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படும். பிற சில நாடுகளிலோ எரிமலைகளும், பாலைநிலப் பகுதிகளும் இருக்கும். இயற்கை வளங்கள் அமையாத நாடுகள் எத்தனையோ பல உண்டு. நமது தமிழ்நாடு அத்தகைய குறைபாடுகள் ஏதுமின்றி, இயற்கை வளமெல்லாம் இனிது அமையப்பெற்றது. தமிழன் எதையும் துருவி ஆராய்ந்து,

கண்டெடுத்துத் தொகைப்படுத்தி, வகைப் படுத்தி, முறைப்படுத்திப், பெயர்ப்படுத்திச் செயற்படுத்துதலில் வல்லவன். காற்றானது கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு ஆகிய நான்கு திசைகளிலும் இருந்து வீசுதலைக் கண்டறிந்து, அவற்றிற்குத் தனித்தனியே பெயரமைத்து வழங்கி வருபவன் தமிழன்! பலநாடுகளின் இயற்கை அமைப்புக்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால், அவற்றில் பலவற்றிற்கு இரண்டொரு திசைகளிலிருந்து மட்டுமே காற்று வீசும் நிலையிருக்கக் காணலாம். தமிழகத்தின் அமைப்புத் தான் நான்கு திசைகளிலிருந்தும் காற்று வீசும் வாய்ப்பு வசதிகளைப் பெற்றுள்ளது. எனவேதான் தமிழன் கிழக்குத் திசைக் காற்றுக்குக் கொண்டல் என்றும், மேற்குத் திசைக் காற்றுக்குக் கோடை என்றும், வடக்குத் திசைக் காற்றிற்கு வாடை என்றும், தெற்குத் திசைக் காற்றுக்குத் தென்றல் என்றும், தனித்தனிப் பெயர்கள் அமைத்து, அவற்றின் இயல்புகளையும், ஆங்காங்கே தமிழ் இலக்கியங்களில் விளக்கிப் பாடியிருக்கின்றான். இதனை எல்லாம் எண்ணி எண்ணி மகிழ்வதும், இலக்கியத் தமிழ் இன்பத் திறனேயாகும்.

### முத்தமிழ் :

வேறு மொழிகளுக்கு இல்லாமல், தமிழ்மொழி ஒன்றற்கேயுரிய சிறப்புக்கள் பலவற்றில், தனிப்பெருஞ் சிறப்பு ஒன்றுண்டு. நம் தமிழ்மொழி ஒன்றில் தான் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என முத்தமிழ்கள் அமைந்துள்ளன. வேறு எந்த மொழியும், இத்தகைய அமைப்பைப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. மனிதன் முதலில் ஒன்றை எண்ணுகின்றான். அவ் எண்ணத்தைத் துணிந்துவெளியிடுகின்றான். பின்னர் அதனைச் செயற்படுத்துகின்றான். எண்ணம் துணிவு செயல் என்னும் மூன்றும், ஒன்றினை ஒன்று பற்றுக் கோடாகக் கொண்டு தொடர்ந்து நிகழ்கின்றன. மனிதன் மனத்தால் எண்ணுகின்றான், மொழியால் துணிந்து வெளியிடுகின்றான், மெய்யால் செயற்படுத்துகின்றான். இதுவே இயற்கைக்கு இயைந்த இனிய நெறிமுறை. இவ்வடிப் படையிலேயே, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் தோன்றியுள்ளன. மனத்தினின்று இயற்றமிழும், மொழியினின்று இசைத்தமிழும், மெய்ப்பாட்டினின்று நாடகத்தமிழும் தோன்றியுள்ளன.

### முத்தமிழ்க் காப்பியம் :

இம் முத்தமிழுக்கும் உரிய சிறப்பு இலக்கியமாக நம் தமிழில் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. அதனாலேயே அதனை 'முத்தமிழ்க்காப்பியம்' என்று நாம் போற்றி வருகின்றோம். தமிழுக்கும் மூன்று என்னும் எண்ணுக்கும் ஏதோ ஒரு பெருந் தொடர்பு இருப்பதாகத் தெரிகின்றது. தமிழ் முத்தமிழாக விளங்குதல்போல, முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தின் அமைப்பும் பெரும்பாலும் மும்மூன்றாகவே அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் காண்டங்கள் மூன்று.

"அரைசியல் பிழைத்தோர்க்கு
  அறம்கூற் றாவதும்,
உரைசால் பத்தினிக்கு
  உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந்து,
  ஊட்டும் என்பதும்
சூழ்வினைச் சிலம்பு
  காரணம் ஆகச்
சிலப்பதி காரம்
  என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர்
  பாட்டுடைச் செய்யுள்."

எனச் சிலப்பதிகாரத்தால், இளங்கோ வடிகள், நமக்கு அறிவுறுத்த முற்பட்ட கருத்துக்களும் மூன்று. அதன்கண் வரும் அரசர்களும், சோழன் பாண்டியன் சேரன் என மூவர் ஆவர். அவர்க்குரிய தலைநகரங்களும் முறையே புகார் மதுரை வஞ்சி என மூன்று. இத்தலைநகர்களின் பெயர்களிலுள்ள எழுத்துக்களும் மூன்று. சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்தோர் மூவர். திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை, பேரறிஞர் உ. வே. சாமிநாத ஐயர், பாகனேரிகாசிவிசுவநாதன் செட்டியார். சிலப்பதிகார உரையாசிரியர்களும் மூவர்: அரும்பதவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார், நாவலர் நாட்டார்ஐயா. இவ்வா றெல்லாம் கூட எண்ணி எண்ணி மகிழ்தலும் ஒருவகையில் தலைசிறந்த தமிழ் இன்பமாகும்.

ஐம்பெரும் பண்புகள் :

தமிழில் பண்டைக் காலத்தில் இலக்கியங்கள் எண்ணில்லாதன பல இருந்தன. அவைகளெல்லாம் காலப் போக்கினுலும், கடல்கோளினுலும், ஆற்றுப் பெருக்காலும், நம் அறிவின்மை யாலும் அழிந்தொழிந்து போயின. இப் போது நமக்குப் பழந்தமிழ் இலக்கியங்க ளாகப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் முப்பத்தாறு (36) நூல்கள் மட்டும்தான், கிடைத்திருக்கின்றன. அவற்றுள்ளும் எத்தனையோ பல பாடல்கள் கிடைக்கா மல் போய்விட்டன. இம் முப்பத்தாறு நூல்களின் கருத்துக்களைத் தழுவியே, பிற்கால இலக்கியங்கள் அத்தனையும் தோன்றியிருக்கின்றன. இப்போது தோன்றும், இனிமேல் தோன்றவிருக்கும் நூல்களுக்கும் கூட, இவைகள்தான் அடிப்படையாகும். தொன்றுதொட்டு இதுவரையில் தோன்றியுள்ள, எல்லாத் தமிழ் இலக்கியங்களிலும் ஊடுருவி நிற் கும் கருத்துக்களை எல்லாம், தொகுத்து ஆராய்ந்து சாரமாகப் பிழிந்தெடுத்தால், அவைகளையெல்லாம் ஐந்து கூறுகளுள் அடக்கிவிடலாம்.

1. காதல்.
2. வீரம்.
3. கொடை.
4. ஒழுக்கம்.
5. இறைவழிபாடு.

இவ் ஐந்து கூறுகளையே தமிழ் இலக் கியங்கள் அனைத்தும், ஒவ்வொரு வகை யில் சிறப்புற விளக்கிக்கொண்டிருக்கக் காண்கின்ரேம். தமிழ் இலக்கியங்கள் மட்டுமேயல்லாமல், உலக இலக்கியங் கள் அனைத்தும்கூடப் பெரும்பாலும் இவ் ஐந்து கூறுகளிலேயே அடங்கும் என்பதில் ஐயமில்லை. மனிதகுல வாழ் வில் காதல் வீரம் கொடை ஒழுக்கம் இறைவழிபாடு என்னும் ஐந்துமே மிக்க சிறப்பிடம் பெறுகின்றன. இவ் ஐந்து பண்பு நலங்களும் நிறைந்து சிறந்து விளங்கும் வாழ்க்கையே, மிகமேலான சிறந்த நல்ல பயன்மிக்க வாழ்வாகும். அதனுல்தான் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும், இவ் ஐந்தையும் பற்றிச் செவ்விதின் அமைந்து திகழ்கின்றன. எனவே இவ் ஐந்தையும் பற்றி, இங்கு ஒரு சிறிது இயன்ற அளவில் தனித் தனியே சிந்தித்துத் தமிழ் இன்பத்தில் திளைப்பது, பொருத்தமும் சிறப்பும் ஆகும்.

(1) காதல் : நமது தமிழ் இலக்கியங் களில் காதல் சிறப்பிடம் பெற்றுள்ளது. சங்ககால இலக்கியங்களுள் நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு கலித்தொகை அகநானூறு என்னும் இலக்கியங்கள் அனைத்தும், முழுக்க முழுக்கக் காதலைப்

பற்றியனவாகவே அமைந்திருக்கக் காண்கின்றோம். இது தமிழுக்கே உரிய ஒருபெரும் சிறப்பியல்பு. பிறமொழிகளில் புறத்தே உள்ள பொருள்களையும் செய்திகளையும் பற்றியே, மிகுதியான நூல்கள் இருக்கும். அகத்தே பிறர் அறியாமல் நிகழும் ஆழ்ந்த உள்ளுணர்ச்சிகளை அழகுற வெளியிடும் திறன் தமிழிற்போலப் பிறமொழிகளில் அமையவில்லை எனலாம். காதல் என்னும் இயற்கைத் தெய்விக உணர்ச்சியினை, நம் தமிழ் முன்னோர்கள் திறன் தெரிந்து, தேர்ந்து செவ்விதிற் போற்றியுள்ளனர். உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகவும், தெய்வப் புலவராகவும் திகழும் திருவள்ளுவர், தமது திருக்குறளில் இன்பத்துப்பாலில், காதல் உணர்ச்சிகளைக் கலைநலம் கனிய இணையற்ற முறையில் அற்புதக் கற்பனையும் அழகும் மிகப் பொற்புற விளக்குகின்றார்.

(அ) ஒரு தலைவன் போர்மேலும் பொருள் மேலும் சென்று பிரிந்திருந்து பின் திரும்பி வருகின்றான். அவனைத் தலைவி 'இது காறும் என்னை நீர் நினைத்தீரா!' என்று வினவினாள். அதற்கு அவன் ' ஆம் நினைத்தேன் ' என்றான். அதனைக் கேட்ட அளவிலேயே, அவனது காதல் தலைவி, ஊடல் கொண்டு சினந்து அவனைப் புல்ல மறுத்தாள், தலைவன் திடுக்குற்று அவளின் ஊடலுக்குக் காரணம் என்னெனப் பரிந்து இரந்து. வினவினான். 'நினைத்தேன் என்றீர்களே, மறந்த பின்னன்றோ நினைப்பு வரும்? என்னை மறந்துதானே இருந்தீர்கள்!' என்று ஊடிப் புலம்பினாள்.

" உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் ?
என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள் "

(ஆ) தலைவன் தலைவியுடன் பேசிக் கொண்டிருக்கின்றான். அப்போது அவனுக்குத் தும்மல் வந்தது. ஒருவருக்குத் தும்மல் வந்தால், அருகில் இருப்பவர் நீடினிது வாழ்க என்று அவரை வாழ்த்துவது பண்டைய மரபு. அம்முறையில் தலைவன் தும்மியபோது தலைவி வாழ்த்தினாள். வாழ்த்திவிட்டு உடனே அழத் தொடங்கினாள். தலைவனுக்குக் காரணம் தெரியவில்லை. ஏன் அழுகிறாய்? எனப் பரிந்து பணிந்து அன்புடன் வினவினான் தலைவன். 'என்னைத் தவிர வேறு யாரோ சில பெண்கள் தங்களை நினைக்கின்றார்கள் போலும்! அதனால் அன்றோ தங்களுக்குத் தும்மல் வருகின்றது. அவர்களுள் யார் நினைத்துத் தங்களுக்குத் தும்மல் ஏற்பட்டது' என்று வினவி, மீண்டும் ஊடல் கொண்டு அழத் தொடங்கி விட்டாள் தலைவி.

" வழுத்தினாள் தும்மினேன் ஆக
அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் ? என்று "

(இ) இதனால் தலைவன் மற்றொரு முறை தனக்குத் தும்மல் வந்தபோது, தும்மாமல் அடக்க முயன்றான். தும்மினால் அன்றோ தலைவி ஊடல் கொள்ளப் போகிறாள் ; தும்மலை அடக்கிக் கொண்டால், ஊடல் கொள்ள வாய்ப்பு நேராதன்றோ என்று தலைவன் நினைத்தான். ஆனால் தும்மலை அடக்கியதையே காரணமாகக் கொண்டு, தலைவி ஊடல் கொண்டாள். பெரிதும் அழத் தொடங்கி விட்டாள். 'என்னைத் தவிர வேறு யாரோ ஒரு பெண் தங்களை நினைக்கின்றாள். அஃது எனக்குத் தெரிந்து விடப் போகிறது என்று நினைத்து, அதனை எனக்கு மறைப்பதற்காகத்தான் தும்மலை நீர் அடக்கிக் கொள்ளுகின்றீர்' என்று சொல்லித் தலைவி மேலும் சினந்து புலந்தாள்.

"தும்முச் செறுப்ப அழுதாள் ;
நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ ? என்று"

(ஈ) அப்போது தலைவன் 'இப்படியெல்லாம் என் மீது ஐயுறாதே. இப்பிறவியில் இவ்வுடலில் உயிர் உள்ள அளவும், யான் உன்னை எப்போதும் பிரியவே மாட்டேன்' என்று கூறித், தலைவியின் ஊடலைத் தணிக்க முயன்றான். 'இப்பிறவியில் பிரியமாட்டேன் என்கிறீர்களே! அங்ஙனமாயின் அடுத்து வரும் பிறவிகளிலெல்லாம் என்னைக் கைவிட்டு விடுவீர்களா? வேறு பெண்களை மணந்து கொள்ளுவீர்களா ?' என்று கேட்டுத் தலைவி தன் கண்களில் இருந்து நீரைப் பெருக்கினாள்.

"இம்மைப் பிறப்பில் பிரியலம்
என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்"

இவ்வாறெல்லாம் தமிழ் மக்களின் காதலின்ப வாழ்வின் உணர்ச்சிகளைத் திருவள்ளுவர் பெருமான், எத்தனையோ பல வகைகளில் தமது திருக்குறளில் அழகொழுகத் தீட்டி விழுமிய முறையில் விளக்குகின்றார்.

(2) வீரம்: தமிழர்களின் பண்புகளில் தலைசிறந்ததொன்று வீரம். தமிழர்களின் வீரத்தினை 'அருந்தமிழ் ஆற்றல்' என்பர் இளங்கோவடிகள். வீரம் என்பது வெறும் உடல் வலிமையன்று. உள்ளத்தின் திண்மையும், ஒழுக்கத்தின் நேர்மையும், உயர்ந்த குறிக்கோளுக்காக உயிர் விடுகையும் பிறவுமே வீரம் எனத் தமிழர் போற்றிவந்தனர். ஒருசமயம் சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும், சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கும் போர் நிகழ்ந்தது. அப்போது கரிகாற்பெருவளத்தான் எறிந்த அம்பு ஒன்று சேரலாதனின் மார்பிற் பாய்ந்து முதுகின் வழியே வெளிப்பட்டது. அதனால் சேரலாதனுக்கு மார்பிலும் முதுகிலும் புண் ஏற்பட்டது. முதுகில் உள்ள புண்ணைக் கண்டு, எங்கே சிலர் போரில் புறமுதுகு காட்டியதாகத் தன்னை எண்ணிவிடுவார்களோ என்று அஞ்சி நாணமுற்று, சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தான். அவ்வாறே கரிகாற் பெருவளத்தானும் பெரிதும் நாணமுற்று வருந்தினான். ஏன் கரிகாற் பெருவளத்தான் நாணமுற்று வருந்தினான்? வஞ்சனையாற் சேரலாதனின் முதுகில் அம்பெறிந்தான் போலும் என்று, எவரேனும் தன்னைத் தவறாக எண்ணி விடுவார்களோ என்று கரிகாலன் பெரிதும் பழிக்கு அஞ்சி நாணினான். போரில் புற முதுகு காட்டாத பண்பும், புற முதுகு காட்டி ஓடுபவர் மீது அம்பெறியாத பண்பும், தமிழர்களின் வீரத்தன்மைக்குத் தலைசிறந்த சான்றுகளாகும்! புறநானூற்றில் இத்தகைய வீரச் செயல்கள் பலவற்றைக் காணலாம்.

(3) கொடை: உலக மக்கள் வெவ்வேறு வகைகளில் இன்பங்களைத் தேடுவர், அடைவர். திருவள்ளுவர் பிறர் காணாத ஒருவகையான புதிய இன்பத்தை நமக்கு உணர்ந்து காட்டுகின்றார். பிறருக்கு ஒன்றைக்கொடுத்து, அவர்களை இன்பம் அடையச் செய்து, அவ்வின்பத்தைக் கண்டு நாம் அடைகின்ற இன்பம் ஒன்று உண்டு. அது ஈடு இணையற்ற இன்பம் என்று, திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

அவ்வின்பத்தை "ஈத்துவக்கும் இன்பம்" என்று திருவள்ளுவர் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். ஓர் ஊரில் ஒரு பெருஞ்செல்வன் இருந்தான் அவன் பலருக்கும் பலவகையில் உதவிகள் செய்து வந்தான். அவன் இறந்தபோது ஊர்மக்கள்

அனைவரும் சுடுகாடு வரை சென்று, அவனது மறைவிற்காக வருந்தி அழுதனர். அதே ஊரில் ஒரு கருமி இருந்தான். அவன் எவருக்கும் எதையும் கொடுத்ததில்லை. எச்சிற் கையாலும் காக்கை ஓட்டமாட்டான். அங்ஙனம் ஈங்கையும் விதிராத அக்கருமி இறந்த போது, ஊரவர் எவரும் அவனுக்காகச் சிறிதும் வருந்தவில்லை. ஆனால் திருவள்ளுவரோ, அவனுடன் சுடுகாடு வரை சென்று அவனுக்காக இரங்கி வருந்திப் புலம்புகின்றார். ஐயோ, இவன் இவ்வளவு செல்வம் உடையவனாக இருந்தும், அச்செல்வத்தில் ஒரு சிறிதளவேனும் பிறருக்கு ஈந்து, 'ஈத்துவக்கும் இன்பம்' என்பது ஒன்று உண்டு என்பது கூட அறிந்து கொள்ளாமல், வீணே இறந்தொழிந்தானே என்று திருவள்ளுவர் பெரிதும் வருந்திப் புலம்பினர்.

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்? தாம் உடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்".

ஈத்துவக்கும் இன்பத்தினை நன்றாக அறிந்து, அதில் திளைத்தவர்கள் தமிழ் மக்கள். சங்க காலத்தில் விளங்கிய பேகன் பாரி காரி ஓரி ஆய் அதிகன் நள்ளி என்னும் வள்ளல்களின் வரலாற்றால் தமிழர்களின் கொடைத் திறத்தினை நாம் இனிதுணரலாம். இரத்தலின் இழிவை உணர்ந்தவர்களே, ஈதலின் சிறப்பை உணர்ந்தவர்கள் ஆவார்கள். இல்லையென்று சொல்லி ஒருவர்பால் சென்று இரத்தல் மிகவும் இழிவு. அதைவிட மிகவும் இழிவு, இல்லை என்று சொல்லி வந்து இரப்பவனுக்கு, நாமும் இல்லை என்றே பல்லிளித்துச் சொல்லுதல். 'ஏற்பது இகழ்ச்சி' 'ஐயம்இட்டு உண்' என்பவை, தம்முள் முரண்படுவதாகச் சிலர் கருதுவர். ஏற்பவன், கொடுப்பவன் என்ற இருவருக்குக் கூறியதாக இவற்றைக் கொள்ளுதல் பிழை. இவை இரண்டுமே தனித்தனி ஒவ்வொருவருக்கும் கூறிய அறிவுரையாகும். எவரும் இரத்தல் கூடாது, பிறருக்குக் கொடுப்பவராக இருத்தல் வேண்டும் என்பதே, இவற்றின் கருத்து.

"ஈஎன இரத்தல் இழிந்தன்று, அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

எனவரும் புறநானூற்று வரிகள், உலக இலக்கியங்களிலேயே பொன்னெழுத்தால் பொறிக்கத்தக்க பொருள் பொதிந்த சிறந்த வரிகளாகும். இறந்து போதலைக் காட்டிலும், ஒருவனுக்குத் துன்பம் தருவது பிறிதொன்றில்லை. இறப்புத் துன்பம் அத்துணைக் கொடுமையானது. அத்தகைய கொடிய இறப்புத்துன்பமும் கூட, நம்மிடம் வந்து ஒருவன் ஒன்றைக் கேட்கும்போது நம்மாற் கொடுக்க இயலாத நிலை நேருமானால், அப்போது இனியதாகிவிடுமாம்.

"சாதலின் இன்னாத தில்லை;
இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்பது, திருவள்ளுவர் கண்டுகூறும் முடிவு. இவற்றினால் எல்லாம் தமிழர்களின் கொடைத்திறன் புலப்படுதல் காணலாம்.

(4) ஒழுக்கம்: தமிழர்கள் ஒழுக்கத்தில் இயல்பாகவே தலைசிறந்தவர்கள். தமிழ் இலக்கியங்களைப்போல, ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்களை வேறு எங்கணும் கண்டல் இயலாது. "ஒழுக்கம் விழுப்பம் தரலான்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்று திருவள்ளுவர் நமக்குப் பணித்தருள்கின்றார். ஒழுக்கம்தான் மனிதனை மனிதனாகவும், மனிதனைத் தேவனாகவும் விளங்கும்படி செய்கின்றது. ஒருசிலர் உடலால் மனிதர்களாக இருப்பார்கள். பண்பால், ஒழுக்கத்தால், மனிதர்களாக இருக்க மாட்டார்கள். ஓர் ஊரில் ஒரு பிறவிக் குருடன் இருந்தான். இரவில் அவன் தன்தலையில் ஒரு பெரும் மண்ணகலில் விளக்கை ஏற்றிக்கொண்டு சென்றான். அவனைக் காண்பவர்கள் 'பகலிலேயே உனக்குக் கண்தெரியாதே, இரவில் இந்த விளக்கினால் எங்கேகண் தெரியப் போகிறது' என்று ஏளனம் செய்தார்கள். அதற்கு அவன் 'எனக்குக் கண் தெரிவததற்காக நான் இந்த விளக்கை ஏற்றிக் கொள்ளவில்லை; எங்கே நீங்கள் கண்தெரியாமல் இரவில் என்மீது வந்து மோதிக்கொள்கின்றீர்களோ என்றுதான் உங்களுக்குக் கண் தெரிவதற்காக, என் தலையில் விளக்கை ஏற்றிக்கொண்டு நடக்கிறேன்' என்று சொல்வானாம். இம் மாதிரியே கிரேக்க நாட்டில் ஒருபெரியார் பகலிலேயே ஒரு விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு, வருவோர் போவோர்களுக்கு அருகில்சென்று ஏறிட்டுப் பார்ப்பாராம். அப்போது அவர்கள் பட்டப் பகலில் விளக்கை ஏற்றிக் கொண்டு யாரைத் தேடுகின்றீர்கள் என்று கேட்பார்களாம். அதற்கு அப் பெரியார் 'மனிதர்களைப் போலப் பலர் போகிறார்கள். இவர்களில் உண்மையான மனிதர் எவரேனும் அகப்படுவரா?என்று தேடிக்கொண்டு இருக்கிறேன்' என்பாராம். இதன் கருத்து என்னவென்றால், வடிவால் பலர் மனிதர்களைப் போலக் காணப்படுகின்றனரே தவிர, ஒழுக்கத்தால் உண்மையிலேயே மனிதராகத் திகழ்பவர், மிக மிக அரியராய் எங்கோ ஒருசிலர்தான் இருப்பர் என்பதாகும்.

"உறுப்பொத்தல் மக்கள்ஒப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு''

திருக்குறள் போன்ற ஒழுக்கநூல், தமிழர்களாகிய நமக்குக் கிடைத்திருப்பது ஒரு சிறந்த பெரும் பேறாகும். ஒரு குலத்துக்கு ஒரு நீதியாகக் கூறுகின்ற பிற நூல்களைப் போல் அல்லாமல், எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டினர்க்கும், ஏற்ற அடிப்படை உண்மைகளையும், ஒழுக்கங்களையுமே வகுத்துரைக்கும் திருக்குறளின் அருமை பெருமைகள், அளவிடற்பாலன அல்ல. உயிருக்காக மானத்தைத் துறக்கலாம் என்பது சிலர் கொள்கை. ஆனால் உயிர் பெரிதன்று, மானமே பெரிது, மானத்திற்காக உயிரைவிடுதல் வேண்டும், உயிருக்காக மானத்தைத் துறத்தல் மிகவும் இழிவு என்பது தமிழர் பண்பாடு.

'இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்''

என்பது திருக்குறள். இதற்குப் பரிமேலழகர் 'இறப்ப வருவழி இளி வந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூல் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையினையும் சீர்தூக்கி ஆராய்ந்து, தம் குடிப்பிறப்புத் தாழ வரும் செயல்களைச் செய்யற்க என்பதாம்'' என்று வரைந்துள்ள உரைவிளக்கம், தமிழர் பண்பாட்டின் சிறப்பினை அறிந்து உள்ளவாறு எழுதிய பெருமாட்சிமையுடையதாகும். இன்னோரன்னயவை, தமிழர்களின் ஒழுக்கத்தின் மேன்மையினை மலையிலக்கென விளக்குவனவாகும்.

(5) இறைவழிபாடு : தமிழ் மொழியிற் போல இறைவழிபாட்டு நூல்களை ஏராளமாகப்பெற்றுள்ள மொழி, உலக

நாடுகளுள்ளே வேறு எதுவும் இல்லை எனத் துணிந்து கூறலாம். தமிழர்க ளாகிய நம்முடைய தேவார திருவாசகத் திருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும். பட்டினத்தார் தாயுமா னூர் பதினெண்சித்தர் முதலிய சான்றோர் பாடல்களும், அருணகிரி நாதரின் திருப் புகழ், இராமலிங்க அடிகளின் திரு வருட்பாப் போன்ற இறைவழி பாட்டுப் பக்தி இலக்கியங்களும் போல, வேறு எம்மொழியிலும் காண்டல் இயலாது என்பதுஉண்மை; வெறும் புகழ்ச்சியன்று. இவை ஒவ்வொன்றும் தனித்தனியே கடலென விரிந்து பரந்து விளங்கு கின்றன. ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுமையும் முயன்றாலும், இவைகளுள் ஒவ்வொன்றையேனும் முழுமையாகப் பயின்று முடிவு காண்டல் என்பது, மிகவும் அரிது எனலாம்.

இறைவனை அறிவதிலும் அநுபவிப்ப திலும், இறையருள் அநுபவத்தை அழகிய இனிய அரும்பெரும் கவிதைக ளாக வடித்துத் தருதலிலும், தமிழ்மொழி தனக்கு ஈடும் எடுப்புமின்றித் தலைசிறந் தோங்கித் திகழ்கின்றது. உள்ளத்தை உருக்கும் திறனில் திருவாசகத்திற்கு நிகரான நூல் எதுவும் இல்லை. தேவாரத் திருமுறைகளுக்கும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களுக்கும் இணை யான பக்தி ஞானப் பனுவல்கள் ஏதும் வேறு மொழிகளில் இல்லை.

“ ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார் ”

எனத் தாயுமானவர் புகழ்ந்து போற்றிய அருணகிரிநாதர், அருளியதிருப்புகழுக்கு நிகரான சந்தப்பாடல்கள் எங்கேனும் உண்டோ? திருப்புகழ் என்றால் சந்தம்; திருக்குறள் என்றால் இன்பம் என்று சுருங்கச் சொல்லலாம். திருப்புகழின் அருமைபெருமைகளை முருகன் அடியார் கள் அனைவரும் அறிவர். இங்ஙனமே, எளிய இனிய தெளிவான தீந்தமிழ் நடை யில் அமைந்துள்ள, திருவருட்பாப் பாடல்களின் சிறப்பும் அளவிடற்பால தன்று.

‘ மாசில் வீணையும் மாலை மதியமும்,
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே ”

என்பது, திருநாவுக்கரசர் என்னும் அப்பர்பெருமான் திருப்பாடல். எளிய இனிய சிறுசிறு சொற்களால் அமைந் துள்ள இவ்வழகிய இனிய சிறிய செய்யுள், இறையருள் அநுபவத்தின் இயல்பினை எவ்வளவு திட்ப நுட்பமாகத் தீட்டிக் காட்டுகின்றது! மாசில் வீணை காதுக்கும், மாலை மதியம் கண்ணுக்கும், வீசு தென்றல் மூக்கிற்கும், வீங்கிள வேனில் மெய்யிற்கும், மூசுவண்டறை பொய்கை நாவிற்கும் ஆக ஐம்பொறி களுக்கும் இன்பம் தருதல்போல, இறையருட்டிறமும் ஐம்பொறிகளுக்கும் இன்பம் தரவல்லது என்பதனை, அப்பர் பெருமான் இதன்கண் அழகுறச் சுட்டி யிருத்தல் காணலாம்.

பட்டினத்தார் திருவையாற்றுக்குச் செல்லுகின்றார். ஐந்து ஆறுகள் பாயும் திருவையாற்றுக்குச் சென்ற பட்டினத் தார், ஐயாறப்பரிடம் ஐவருக்கு ஆறுதல் அளிக்கும்படி பணிந்து வேண்டிக் கொள்ளுகின்றார்.


‘ மண்ணும் தணலாற
வானும் புகையாற
எண்ணரிய தாயர் இளைப்பாறப்
பண்ணும் அயன்
கையாற உன்அடியேன் காலாற
வும் கண்பார்!
ஐயா திருவையாறு!”

என்பது பட்டினத்தார் அருளிய அழகிய பாடலில் ஒன்று. இதன் சொற்சுவையும் பொருட்சுவையும் எவர் உள்ளத்தையும் கவரவல்லன.

முடிவுரை :

இங்ஙனம் எத்தனை எத்தனையோ ஆயிரக்கணக்கான அழகிய பாடல்கள் தமிழ் மொழியின்கண் அமைந்துள்ளன. இவைகளையெல்லாம் ஒருசிறிதேனும் ஊன்றிக் கற்று உணர முற்பட்டால், நாம் நம் வாழ்வில் தமிழ் இன்பம் நுகர்ந்து திளைக்கலாம். “இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்” என்ற நிலையைப் பெறலாம். எல்லாம் வல்ல முருகன் திருவருளால், நாம் அனைவரும் தமிழின்பத்தில் திளைத்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக!

—ஆசிரியர்



பழநித் திருக்குட நன்னீராட்டுப் பெரு விழாவில், மலைமீது இமைக்கப் பெற்றிருந்த யாகசாலையின் அழகிய தோற்றம்.

# நானும் தானும்

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.,

நீதிபதி உயர்நீதி மன்றம், சென்னை.

தக்காளி விதை துக்கிணி போல் இருக்கும்; மிக மிகச் சிறியது. ஆனால், அதை மண்ணிலே விதைத்து, நீர் பாய்ச்சிக்கொண்டே இருந்தோமானால், அது செடியாக வளர்ந்து, பூத்துக் குலை குலையாகக் காய்க்கத் தொடங்கி விடுகிறது. காயும் பூவும் செடியும் அந்தச் சின்னஞ் சிறிய வித்துக்குள்ளிருந்தா வந்தன ?

மண்ணுக்குள் இருக்கும் உப்பையும் நீரையும் தக்காளிச்செடியின் வேர் இழுத்துக்கொள்கிறது. ஆகாயத்திலிருந்து சில வாயுக்களைச் செடியின் இலைகள் வாங்கி உட்கொள்ளுகின்றன. இந்தப் பரிவர்த்தனையால், தக்காளிக்கு இலாபம்; அது பருத்துப் பெருகுகிறது. சடப்பொருள்களுக்கும் இலாபம்; அவை உயிர்பெற்று மேல் நிலையை அடைகின்றன. முன்னம் உயிரற்றிருந்த கல்லும் மண்ணும் காற்றும் நீரும் இப்போது தக்காளியோடு இரண்டறக் கலந்து, தக்காளியாகவே மாறி விட்டன. இப்படியாக, சடப்பொருள்களுக்குத் தீட்சை கொடுத்துக் கைதூக்கிவிடுகிறது தக்காளி.

இந்த வித்தையைப் பார்த்தார் ஒரு ஞானி. உயிரற்ற தண்ணீரும் காற்றும், உயிருள்ள தக்காளி விதையைப் பார்த்து, "எங்களையும் உன்னோடு சேர்த்துக்கொள்; எங்களுக்கும் உயிர்ப்பிச்சை கொடு" என்று கேட்பதுபோல் தோன்றின. ஊனுக்குள்ளே (அதாவது சடப்பொருள்களுக்குள்ளே) உயிரை நாடும் ஆசையும் முனைப்பையும் வைத்தவன் யார்? இறைவனே தான். அந்த ஆசைக்குள்ளே இறைவனல்லவா இருந்து இயங்குகிறான் என்று கண்டார் ஞானி. இந்த முடிவுக்கு வந்த ஞானி இறைவனைப் பார்த்துப் பாடுகிறார்;

"ஊன்தேடும் உயிரேயோ!"

மற்றொரு காட்சி ஞானியின் இதயத்திலே உருவாகிறது. டைபாய்ட் காய்ச்சலிலே இருபத்தொரு நாள் கஷ்டப்பட்ட நோயாளி ஒருவன்; செத்துப்பிழைத்தவன். அவனுக்கு மறுபடியும் மூன்று வாரம் காய்ச்சல் அடிக்கிறது. உருக்குலைந்து, பாயோடு பாயாய், வாலுந்தோலுமாய்க் கிடக்கிறான். கண் பஞ்சடைந்துவிட்டது; உற்றார் உறவினரைக் கூட இனங்கண்டு கொள்ள முடியவில்லை. இசை நுணுக்கங்களை ஆய்ந்து அநுபவித்த அவனுடைய காது அடைத்துச் செவிடாகிவிட்டது. மற்ற இந்திரியங்களும் மேற்படி, மேற்படிதான்.

இந்த நிலையில் இருக்கும் நோயாளிக்குத் தக்காளி சூப்பை மருத்துவர்கள் கொடுக்கிறார்கள். கால் கரண்டி, அரைக்கரண்டியாக, கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய உடல் தேறி வருகிறது. பத்துநாட்களில், நண்பர்களை இனங்கண்டு கொள்ளத் தொடங்குகிறான்; 'வாருங்கள்' என்று உணர்வோடு வரவேற்கிறான்; சங்கராபரணராகத்தைக் கேட்டு, "சபாஷ்" போட ஆரம்பிக்கிறான். என்ன விந்தை இது! அன்று உயிர் மாத்திரம் ஒடிக்கொண்டிருந்த அவனுடைய உடம்புக்குள்ளே, இன்று உணர்வு எப்படி வந்து தொத்திக் கொண்டது?

யோசனை செய்து பார்க்கிறார் ஞானி; தக்காளி சூப் அந்த மனித தத்துவத்தோடு கலந்து, கண்ணுக்கு ஒளியும், காதுக்கு ஒலியும், மனசுக்கு உணர்வையும் கொடுத்துவிட்டது. அப்படியானால், உணர்வற்ற தக்காளி உணர்வு பெற்றுவிட்டது என்றுதானே சொல்ல வேண்டும்! எப்படிக் கல்லும் மண்ணும் நீரும் காற்றும் தக்காளியை அண்டி உயிர்ப்பிச்சை பெற்றனவோ, அப்படியே தக்காளியும், மனிதனை நோக்கித் தவமிருந்து, உணர்வுப் பிச்சையைப் பெற்றுவிட்டது. உயிர் மாத்திரமுள்ள தக்காளி, இப்போது உணர்வு பெற்றுச் சங்கராபரணத்தை அனுபவிக்கக் கற்றுக்

கொண்டது. அதற்கு உணர்வுத் தேட்டத்தைக் கொடுத்தவன் யார்? இறைவனேதான்.

இப்பொழுது தெரிந்துவிட்டது ஞானிக்கு' இந்தத் தேட்டத்துக்குள் இறைவன் இருக்கிறுன் என்று பாடுகிறுர்.

"ஊன்தேடும் உயிரேயோ,
உயிர்தேடும் உணர்வேயோ!"

ஊன் உயிரைத் தேடிப் பெற்ற பிறகும், உயிர் உணர்வைத் தேடிப் பெற்ற பிறகும், தேட்டம் விட்டபாடாக இல்லை; மண் தக்காளியாகி, தக்காளி மனிதனுன பிறகும், மனிதன் அதிமனிதனுக விரும்புகிறுன். உணர்வைத் தீட்டித் தீட்டி, அண்டத்தையும் பிண்டத்தையும் ஆராய்ச்சி செய்கிறுன்; கலைகளை ஆய்கிறுன்; ஞான நூல்களை (மறைகளை)த் தேடியலைகிறுன்.

உணர்விலே தெளிவுபெற்ற மக்களை 'வானவர்கள்' என்று அழைத்தார்கள் நம் முன்னேர்கள். மறைந்து கிடக்கும் உண்மைகளை, உணர்வு என்ற பாதாளக்கரண்டி போட்டுத் துழாவுகிறுர்களே, அவர்களுடைய தேட்டத்தில்தான் இறைவன் குடியிருக்கிறுன்:

"வான் தேடும் மறையேயோ!"

ஆனுல், அந்தமறைகளோ செம்பொருளாகிய இறைவனைத் தேடித் தேடி அலைகின்றன. அவ்வாறு தேடச் செய்தவனும் இறைவனே.

"மறைதேடும் பொருளேயோ!"

இப்படியாக, ஞானியின் காட்சியிலே, ஒரு முடிவற்ற ஓட்டப்பந்தயம், தேட்டப்பந்தயம், நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பந்தயத்திலே பேரண்டமே கலந்து கொள்ளுகிறது. இறைவனும் கலந்து கொள்ளுகிறுன்.

"கள்ளனைப் பிடி, பிடி" என்று கத்திக்கொண்டு ஓடுகிறது மக்கள் கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுமத்தியில் இருந்துகொண்டு, "விடாதே, பிடி" என்று கள்ளனும் கத்திக்கொண்டு ஓடுகிறுன். இதையும் பார்த்து அனுபவிக்கிறுர்;

"தான்தேட, ஜகமெலாம்
உடன்தேட"

என்று பாடுகிறுர். இந்தக் காட்சியிலே உள்ளத்தைப் பதித்து வைத்துக் கொண்ட ஞானிக்கு ஒரு பேருண்மை பளிச்சென்று புலப்படுகிறது.

"இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஓடி இளைத்தேனே. 'நான்' (ஆணவம்) என்றும், 'தான்' (இறைவன்) என்றும் நினைத்துக் கொண்டல்லவா நான் ஓடுகிறேன்? என்ன மடமை இது! எனக்குள் இருந்துகொண்டு தேட வைப்பவன் அவன் அல்லவா? நான், 'தானை'த் தேடுவதா? நான்வேறு, தான் வேறு?

"...தன்னைத்தான்,
நான்தேடி நான்காண
நான் ஆரோ, தான் ஆரோ"!

என்று முடிவு கட்டுகிறுர்.

டார்வினுடைய பரிணும நெறி, வாழ்க்கையின் குறுகிய அம்சம் ஒன்றைத்தான் விளக்குகிறது. ஆனுல், ஞானியின் பரிணும நெறியோ மண்ணையும் விண்ணையும் ஆரத் தழுவிப் பரிபூரணத்தையே விளக்கிவிடுகிறது. பாடல் முழுவதையும் பார்த்தால் இந்த உண்மை தெளிவாகும்.

ஊன்தேடும் உயிரேயோ,
உயிர்தேடும் உணர்வேயோ,
வான்தேடும் மறையேயோ,
மறைதேடும் பொருளேயோ,
தான்தேட, ஜகமெலாம்
உடன்தேட, தன்னைத்தான்
நான்தேடி, நான்காண
நான் ஆரோ, தான்ஆரோ!"

இதே உண்மையை எக்ஹார்ட் (Eckhart) என்ற ஜெர்மன் ஞானியும் சொல்லுகிறுர், இறைவனை வணங்கிக் கொண்டிருந்தபோது, இந்தத் தெளிவு அவருக்கு ஏற்பட்டது. "இறைவா, நான் உன்னை வணங்குகிறேன்? இல்லை, நீயே உன்னை வணங்கிக் கொள்ளுகிறுய்" (Am I worshipping Thee, my Lord? No, Thou art worshipping Thyself) என்று சொன்னுர்; இலைச்சுப் போன உரைநடையிலே சொன்னுர்.

உள்ளுணர்வோடு உண்மையைக் காணும் போதெல்லாம், அதைப் பாட்டிலே பாடித் தெள்ளேணம் கொட்டுவதே நம் முன்னேர்கள் மரபு. இந்த விஷயத்தைத் திருமூலர் எப்படி அநுபவிக்கிறுர் என்று பார்ப்போம் "நான்" வேறு, "தான்" வேறு என்று தவருக நினைத்துக் கொண்டு இறைவனைத் தேட ஆரம்பித்தார்

திருமூலர். தேடிக்கொண்டிருக்கும் போது, உள்ளிருக்கும் இறைவன், "நான் என்றும் தான் என்றும் இரண்டில்லை" என்பதை அவருக்கு உணர்த்திவிட்டான். அந்தக் கணத்திலேயே, 'நான்' என்ற நினைப்பு அவரை விட்டு ஒழிந்தது.

"நான் என்றும் தான்என்றும்
நாடினேன், நாடலும்
நான்என்று தான்என்று
இரண்டில்லை என்பதை
'நான்' என்ற ஞான
முதல்வனே நல்கினன்
நான்என்று நானும்
நினைப்பொழிந் தேனே"

என்று வியந்து பாடுகிறார்.

'நான்' என்ற வில்லங்கம் அற்ற பிறகு, வணங்குவதற்கு ஆள் கிடைக்கவில்லை திருமூலருக்கு.

"நான் வரைவற்றபின், யாரை வரைவது?
நான் அவன் ஆனபின், யாரை நினைவது?"

என்று சொல்லிக் கொட்டம் அடிக்கிறார்.

பார்ப்பவன் வேறு, பார்க்கப்படும் பொருள் வேறு என்ற துவைத நிலையிலே, கடவுள் வழிபாட்டுக்கு இடம் இருக்கிறது; இந்த நிலையில், தவமும் தியானமும் அர்ச்சனையும் செய்துகொண்டே இருக்கலாம், இரண்டு தத்துவமும் ஒன்றித்துவிட்டால் தவம் ஏது? தியானம் ஏது? அர்ச்சனை ஏது?

ஆணவ மயக்கத்தை இழந்து, பரம்பொருளோடு இரண்டும் ஒன்றும் அறக் கலந்த பிறகு திருமூலருக்கு இந்த நிலை ஏற்படுகிறது.

"தன்னையே அர்ச்சிக்கத்
தான் இருந்தானே"

என்று கூத்தாடுகிறார். இதுவே பேரின்ப நிலை. 'நான்' அற்றுத் 'தான்' ஆகும் நிலை.



பாலமுருகன்



# வாழ்த்துப் பேருரை

தமிழக முதல்வர்,
மாண்புமிகு டாக்டர், 'தமிழ்வேள்'
கலைஞர் அவர்கள்.

[தமிழக ஆலய ஊழியர்கள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாடு, சென்னைத் திருமயிலையில் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற போது, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் நிகழ்த்திய "வாழ்த்துப் பேருரை", இங்குத் தொகுத்து வெளியிடப் பெறுகின்றது (3-9-73).

—ஆசிரியர்]

அன்பார்ந்த மாநாட்டுத் தலைவர் அருமை நண்பர் தேவேந்திரன் அவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அருமை நண்பர் கண்ணப்பன் அவர்களே, தமிழரசுக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களே, தவத்திரு அடிகளார் அவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் சகோதரர் அரங்கண்ணல் அவர்களே, நாடாளுமன்ற—சட்டப் பேரவை—மேலவை உறுப்பினர்களே, ஆணையர் அவர்களே, ஆலயத்தில் பணியாற்றுகின்ற அருமைப் பெரியோர்களே, நண்பர்களே!

## சிக்கல்கள் தீர்ந்த சிறப்பு மாநாடு:

சிறப்புமிகுந்த இந்த மாநாடு, சென்னை மாநகரத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டை ஆலய ஊழியர்களின் இரண்டாவது மாநில மாநாடு என்று நீங்கள் தலைப்பிட்டு அழைக்கின்றீர்கள். முதல் மாநில மாநாடு எங்கே நடைபெற்றதென்று கேட்டேன். "சிக்கலில்" நடைபெற்றது என்று சொன்னார்கள். முதல்மாநாடு சிக்கலிலே நடைபெற்று, இப்பொழுது "சிக்கல்கள்" பல தீர்க்கப்பட்டுச் சென்னையிலே இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## பலதுறை மக்களுடன் தொடர்பு:

ஆலயப் பணியாளர்களுடைய மாநாட்டிலே நான் முதலமைச்சர் என்கின்ற முறையிலே கலந்து கொள்கிறேன் என்று நீங்கள் கருதினாலும், தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு துறையினுடைய கோரிக்கை அல்லது அவர்களது தொடர்புடைய பல்வேறு விவகாரங்கள் ஆகிய இவைகளில், நான் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பே தொடர்பு உடையவனாக இருந்திருக்கிறேன் என்பதை, நீங்கள் பலரும்

நன்ருக அறிந்திருக்கக்கூடும். நான் கர்வத்தோடோ அல்லது இறுமாப்புடனே, ஆணவத்தோடோ இதைக் கூறுவதாக, மேடையிலே இருப்பவர்களும், எதிரே வீற்றிருக்கிற நீங்களும், நாளைக்குப் பத்திரிகைகளிலே பேச்சைப் படிக்கின்ற மற்றவர்களும் கருதிக் கொள்ளக்கூடாது என்பதற்காகச் சிலவற்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

தொழிலாளர்களுடைய பிரச்சினைக்காக நான் இன்றைக்குப் பேசுகிறேன். அவர்களுடைய பிரச்சினைகளை நான் தீர்த்து வைக்கிறேன் என்ருல், நான் தொழிலாளர்களுக்காகப் போராடிய அரசியல் வரலாறு எனக்கு உண்டு. பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய போராட்டத்திற்கு எதிர்க் கட்சியிலிருந்தபோது நான் தலைமை யேற்றிருக்கிறேன். அதைப் போலவே தஞ்சையிலே எஸ். எம். டி. பஸ் தொழிலாளர்களுடைய போராட்டத்திற்கு, நான் தலைமையேற்று அந்தப் போராட்டத்தில் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறேன்.

தொழிலாளர்களிடையே அடுத்த பிரிவாகக் கருதப்படுகின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் எனக்கும் தொடர்பு உண்டா என்ருல், நான் அரசுப் பொறுப்பை ஏற்ற பிறகல்ல, முன்பே அந்தத் தொடர்பு உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக, நான் வெற்றிபெற்ற குளித்தலைத் தொகுதியில் 1958-ஆம் ஆண்டு நடைபெற்ற நங்கவரம் போராட்டத்தில், விவசாயத் தொழிலாளர்களுக்காக அன்றைக்கிருந்த அமைச்சர்கள் புரிந்துகொள்ளாமலிருந்த கையீடுவாரம் மாட்டீடுவாரம் என்கின்ற அந்தப் பெரிய பிரச்சினையில், நங்கவரம் விவசாயத்தொழிலாளர்கள் போராட்டத்திற்குத் தலைமை வகித்து, விவசாயத் தொழிலாளர்களிடத்திலே நான் தொடர்பு கொண்டவனுக இருக்கிறேன்.

மாணவர்களுக்காக நான் இன்றைக்குப் பொறுப்பிலே இருந்து பேசுகின்றேன். என்ருலும், மாணவர்களுக்காக எதிர்க்கட்சித் தரப்பிலே இருந்து பேசினேன். அக்காரணத்திற்காகப் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையிலே 62 நாட்களுக்கு மேல் தனிமைச் சிறையிலே மாணவர்களுக்காகத் தவம் கிடந்தவன் நான்.

எழுத்தாளர்களுக்காகப் பேசுகின்ற உரிமையும் எனக்கு உண்டு. நான் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே எழுத்தாளன் என்பதை நீங்களெல்லாம் உணர்வீர்கள். நல்ல எழுத்தாளர்களாக இங்கு வீற்றிருக்கின்ற நம்முடைய சிலம்புச் செல்வர் போன்றவர்களும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்றே நான் கருதுகிறேன்.

நடிகர்களுக்காகப் பேசுவதற்கும் எனக்கு உரிமை உண்டு. என்னுடைய கழகத்தினுடைய வளர்ச்சிக்காக, கழகத்திற்கு நிதி சேர்ப்பதற்காக, நூற்றுக்கணக்கான நாடகங்களில் நடித்து, நடிகர்களுக்காகப் பேசுகின்ற உரிமையையும் நான் பெற்றிருக்கின்றேன்.

நெசவாளர்களுக்காகப் பேசுகின்ற உரிமையை நான் அமைச்சரான பிறகு பெற்றேனு என்ருல், 1952-ஆம் ஆண்டிலேயே கைத்தறித் துணிகளைத் தோளிலும் தலையிலும் சுமந்து விற்க வேண்டும் என்று அண்ணு கட்டளையிட்டபோது, அந்தக் காரியத்தைச் செய்தவர்களில் நானும் ஒருவனுக இருந்து, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை எல்லாம் அன்றைக்கே விற்றுக் காட்டி, கைத்தறித் துணிக்குச் சந்தையிலே இருந்த மந்தத்தைப் போக்குவதற்குப் பணியாற்றியவன் என்ற முறையில், நெசவாளர்களைப்

பற்றிப் பேசுகின்ற உரிமையை நான் அன்றைக்கும் படைத்திருந்தேன். இன்றைக்கும் படைத்திருக்கின்றேன்.

பின் தங்கிய மக்களுக்காக நான் வாதாடுகிறேன் பேசுகிறேன் என்ருல், அதற்கும் எனக்கு உரிமை உண்டு. நானே பின் தங்கிய சமுதாயத்தில் பிறந்தவன். நான் அரிசன மக்களுக்காகப் பேசுகிறேன். அவர்களுக்காக வாதாடுகிறேன் என்ருல், நான் அரிசன வகுப்பிலேயே சம்பந்தம் வைத்திருப்பவன். ஆகவே அந்த உரிமையும் எனக்கு உண்டு.

இவ்வளவும் சரி. கோயில் சிப்பந்திகளுக்காகப் பேச எனக்கு என்ன உரிமை என்ருல், நான் ஒரு கோயில் சிப்பந்தியின் மகன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். ஆகவே நான் இந்த மாநாட்டில், ஒருமுதலமைச்சர் என்கின்ற முறையில் உங்களுடைய கோரிக்கைகளைப் புரிந்துகொள்வதைவிட, 40 அல்லது 45 ஆண்டு காலத்திற்கு முன்பு நான் பிறந்த திருவாரூருக்கு அருகில் திருக்குவளை என்ற கிராமத்திலுள்ள கோயிலில் வேலைபார்த்த, ஒரு சிப்பந்தியினுடைய மகன் என்கின்ற முறையில், கோயில் சிப்பந்திகளுக்காக வாதாடுவதில், அவர்களுடைய கோரிக்கைகளை உள்ளத்திலே பதிய வைத்துக்கொள்வதில், நான் அதிக உரிமை படைத்தவனுக இருக்கிறேன் என்பதை, உங்களிடத்திலே சொல்லிக் கொள்வது, எனக்குப் பெருமையே தவிர வேறல்ல.

அறநிலையத் துறைக்குத் தனியமைச்சர்;

நீங்கள் இந்த ஆட்சிகாலத்திலேதான், அறநிலையத்துக்காக ஒரு தனி அமைச்சரைக் காணுகிறீர்கள். 1967-க்கு முன்ப நடைபெற்ற ஆட்சிக் காலத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு தலைப்புகளிலே மானியங்களைப் பற்றிப் பேசுவோம். விவசாய மானியம், 2 நாளைக்கு விவாதம் நடைபெறும். அரிசன மானியம், 2 நாளைக்கு நடைபெறும். தொழில் மானியம் 1 நாளைக்கு நடைபெறும். ஆனுல் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த நாங்களெல்லாம் தேடித் தேடிப் பார்த்தோம். ஆலயங்கள் என்று சில இருக்கின்றனவே, அதற்காக அறநிலையத்துறை என்று ஒன்று இருக்கின்றதே, அதைப்பற்றி என்றைக்கு மானியம் வரும்? என்றைக்குப் பேசலாமென்று நாங்களெல்லாம் தேடித் தேடிப் பார்த்தோம். அப்படி ஒரு மானியம் உண்டு. ஆனுல் அந்த மானியம் 'மிசிலேனியஸ்' என்று சொல்லப்படுகின்ற பல்வகைத் தலைப்புகளில் ஒன்ருக அடங்கி, சில்லரைச் செய்திகள் பேசப்படுகின்ற நேரத்தில் பேசப்படுகின்ற ஒன்ருகும்.

ஒரு காலத்திலே நம்முடையதமிழ்ப் பாட்டுக்கள்கூட, சில்லரைகள் என்ற வகையிலேயே அடங்கியதை நாடு மறந்திடவில்லை. தமிழிசை இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு, தமிழ்ப் பாடல்கள் சில்லரைகள் அல்லது உருப்படிகள் என்கின்ற அந்தப் பட்டியலிலே தான் அடங்கும். ஒரு நல்ல சங்கீதக் கச்சேரியிலே போய்க் கச்சேரி கேட்க உட்கார்ந்தால், எல்லாமொழிகளிலும் பாடித் தீர்த்துவிட்டுக் கடைசியாகத் தான் பாகவதர் சில்லரை பாட ஆரம்பிப்பார். அந்தச் சில்லரைதான் தமிழ்ப் பாட்டாக ஒரு காலத்திலே இருந்தது.

அதைப்போலத்தான் இந்த அறநிலையத்துறை, சில்லரைகள் பட்டியலில் இருந்தது மட்டுமல்ல, அந்தச் சில்லரைப்

பட்டியலும் அப்போது நம்முடைய முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கையிலே இருந்தது. நான் அறநிலையத் துறையைப் பற்றிச் சில செய்திகள் பேசவேண்டும். அதை எப் போது பேசலாம் என்று நான் அமைச்சர் களைக் கேட்பேன். அன்றைய சட்டப் பேரவையினுடைய தலைவரைக் கேட் பேன். அவர்கள் யோசித்துப் பார்த்து, 'மிஸ்ஸிலேனியஸ்' என்று ஒன்று வரும், அதிலே பேசிவிடுங்கள் என்று சொல்லு வார்கள். அதில் பல்வகைப் பிரச்சினை களைப் பேசுகின்ற நேரத்தில், இதைப் பற்றிப் பேச ஒன்று இரண்டு நிமிடம் அல்லது மூன்று நிமிடந்தான் கிடைக் கும். நான் அதைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு முறை பேசினேன். எதிர்க் கட்சியிலே துணைத்தலைவராக இருந்த போது பேசினேன் :

"இன்றைக்கிருக்கின்ற திருத்தலங்கள் பலவற்றில் பழுது அடைந்துவிட்ட தேர் களை எல்லாம் ஏலம் போடுகிறீர்கள். அப்படி ஏலம் போடுகின்ற தேர்களை ஏலம் எடுப்பதற்கென்றே, சில வியாபாரி கள் தென் பிராந்தியத்திலிருந்து வருகிறார் கள். ஏலம் எடுப்பதற்குயார் யார் எந்த எந்தத் தேரை எடுப்பது என்று கட்டுப் பாடாக ஏலம் எடுக்க வருகிறார்கள். அவர்கள் பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு தேரை ஏலம் எடுத்து, அதைப் பம்பாயிலே இருப்பவர்களிடத்திலே ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு விற்கிறார்கள். அந்தத் தேரிலே இருக்கின்ற பழமை யான சிற்பங்களையெல்லாம் தனித் தனியே உடைத்தெடுத்து, அதை ஐம்பது லட்சம் ரூபாய்க்கு வெளிநாட்டா னிடம் விற்றுப் பம்பாய்க்காரன் கொழுத்துக்கொண்டிருக்கிறான். ஆகவே தமிழ்நாட்டுச் சிற்பங்கள், தேர்களிலே உள்ள சிற்பங்கள், பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் ரூபா ஏலத்திற்கு விடப் பட்டு, அவைகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கே லட்சக் கணக்கில் வியாபாரம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டுத் தேர்களுக்கு ஏற்படுகின்ற இந்தக் கதியை நீங்கள் தடுத்து நிறுத்தி யாக வேண்டும். தேர்களை ஏலம் போடு கின்ற முறையை நிறுத்தியாக வேண்டும்" என்று, நான் கேட்டுக் கொண்டும் அவர்கள் நிறுத்தவில்லை. அவர்கள் சாடையாக அறிவித்து விட்டார்கள். நீ சொல்லுகிற எதையும் நாங்கள் கேட்க முடியாது, நீ சொல்லு வதை நீயே வந்து செய்து கொள் என்கிற வகையிலே, அவர்கள் அன்றைக்கு எங்களுக்கு ஆணையிட்டு விட்டார்கள்.

நீங்கள் பத்திரிகையிலே ஒரு செய்தி படித்திருப்பீர்கள். மூன்று மாதத்திற்கு முன்பு ஒரு குறும்புத்தனமான செய்தி. கும்பகோணத்திலே இருக்கும் தேரை ஏலம் போடப்போகிறார்கள் என்று. உடனடியாக நமது அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் அது தவறான தகவல், அதை யாரும் ஏலம் போடப் போவதில்லை என்று அறிவித்தார்கள். நீங்கள் அதனைச் செய்தித்தாள்களில் படித்திருக்கக் கூடும். ஆகவே தமிழ் நாட்டிலே இருக்கின்ற தொன்மை வாய்ந்த சிற்பங் கள், கலை நுணுக்கங்கள் ஆகியவைகள் ஆலயங் களிலே இருந்தாலும், அல்லது ஆலயச் சார்புடைய திருத்தேர்களிலிருந்தாலும், அவை கள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் என்கின்ற திடமான உறுதியான எண்ணமுள்ள அரசு, இந்த அரசு என்பதால்தான், இன்றைய தினம் இன்று இங்கிருக்கின்ற பக்தர்களுடைய கொள்கைகளுக்கும், எங்களுடைய கொள்கைகளுக்கும் சில மாறுபாடுகள் வேறுபாடுகள் இருந்தாலும்கூட, அந்தக் கொள்கைகளை எங்கள் அளவில்

வைத்துக் கொள்கின்றோம். எந்தக் கொள்கையானாலும், அதை இன்னொருவரின் உள்ளத்திலே போய்த் திணிக்கிற முறையை நாங்கள் என்றைக்கும் ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல. நாங்கள் திணிப்பதைஏற்றுக்கொள்ளாதகாரணத்தினால்தான்,இந்திதிணிக்கப்பட்டபோது கூட, அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னோம். ஆகவே திணிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்பவர்கள் அல்ல. ஆகவே எங்களுடைய கொள்கைகளைப் பிறர் ஏற்றுக்கொண்டு தான் தீரவேண்டும் என்று, திணிக்கிற முயற்சியில் ஈடுபடுகின்றவர்களல்ல நாங்கள். அக்காரணத்திலே தான், எத்தனையோ ஆண்டுகாலமாக ஓடாமல் இருந்த திருவாரூர்த்தேர், இந்த ஆட்சியிலே ஓட ஆரம்பித்தது. உங்களுக்குத் தெரியும்.

**கலைச் செல்வங்களைக் காப்போம்**

சட்டசபையிலே ஒருவர் கேட்டார். நான் ஒரு பழைய பாடல் எழுதியிருந்தேன், 1942-ல். “ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையிலே, தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராசா ”என்று, அதில் எழுதியிருந்தேன். இதை ஞாபகம் வைத்துக் கொண்டிருந்த ஒரு நண்பர் சட்டசபையிலே என்னைப் பார்த்துக் கேட்டார். “ஏர் ஓட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே, தேர் ஓட்டம் ஏன் உனக்குத் தியாகராசா?” என்று, அன்று பாட்டு எழுதிய கருணாநிதி அவர்களே, இன்று நீரே அந்தத்தேரை ஓட்டுகிறீரே? நியாயமா? என்று கேட்டார். சரிதானா? முன்னுக்குப் பின் முரணல்லவா? என்று கேட்டார். இல்லை, சரிதான் என்றேன். எப்படி என்று கேட்டார். நான் எழுதிய பாட்டில், “ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையிலே...தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராசா” என்றுதான் கேட்டேன். இப்போது ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கவில்லை, ஆகவே தேரோட்டம் இருக்கட்டும் என்று அனுமதித்துவிட்டேன் என்று நான் சட்டசபையிலே எடுத்துச் சொன்னேன். ஆகவே இன்றைக்கு ஆலயங்களிலே சென்று தொழுவோர், பக்தி பிரவாகத்திலே ஈடுபடுவோர், ஆலயங்கள் பக்தி வளர்க்கின்ற சாதனங்களாக இருக்கவேண்டுமென்று விரும்புவோர், அவர்கள் யாவருக்கும் இடையூறாக இந்த அரசு இருக்காது என்பதற்கு, ஆயிரமாயிரம் எடுத்துக்காட்டுகளை இன்றைக்கு நாட்டிலே நீங்கள் காணுகின்றீர்கள்.

ஆலயங்களில் இருக்கின்ற ஆண்டவனுடைய விக்கிரகங்களை,ஆலயங்களிலே இருக்கின்ற கலைச் செல்வங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணுகின்ற அதே நேரத்தில், நம்முடைய நண்பர் இராமநாதன் இங்கே பேசும்போது குறிப்பிட்டதுபோல், அந்தப் பணிக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறவர்களுடைய வாழ்வும் பரிமளிக்க வேண்டும், ஒளிபெற்றதாக இருக்க வேண்டும் என்று நாங்கள் பெரிதும் விரும்புகின்றோம். அந்த அடிப்படையிலேதான், இந்த அரசு ஆலயத்திலே பணிபுரிகின்ற நண்பர்கள், அவர்கள் அருச்சகர்களாக இருந்தாலும், அல்லது அவர்கள் எழுத்தர்களாக இருந்தாலும், அல்லது அவர்கள் அங்கு வேறு பல சிப்பந்திகளாக இருந்தாலும், அவர்களின் பிரச்சினைகளையெல்லாம் கவனிக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பணியாற்றுகின்றோம். அந்த அடிப்படையிலே பல நல்ல அறிவிப்புக்களையெல்லாம், கடந்த காலத்திலே நம்முடைய இந்தத் துறையினுடைய அமைச்சர், அருமை நண்பர் கண்ணப்பன் அவர்களுடைய வாயிலாக

வெளியிட்டிருப்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். நான் முதலிலே எடுத்துச் சொன்னதைப்போல், அறநிலையத் துறைக்கென்று ஒரு தனி அமைச்சரும், அதைத் தனித்துறையாகப் பிரித்து அதனுடைய வரவுசெலவுத் திட்டங்களை நிர்வகிக்கின்ற அந்தத் தன்மையும், 1969-க்குப் பிறகுதான் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றன என்பது, குறிப்பிடத் தக்க ஒரு அம்சமாகும்.

மதவாதியை அழைத்த பெருமை :

உலகத்திலேயே ஜனநாயகத்தினுடைய தொட்டில் என்று வழங்கப் படுகின்ற இங்கிலாந்து நாட்டிலேதான் பிரபுக்களுடைய சபையிலே அங்கம் வகிப்பதற்கு, ஆங்கிலிக்கன் அவையில் இருந்த ஒரு மதவாதியைப் பிரதிநிதியாக வரவேற்று, அவருடைய கருத்தையும் கேட்கின்ற வழக்கத்தை முதன்முதலாக உருவாக்கினார்கள். இன்றைக்கிருக்கிற நம்முடைய மேல்சபை பிரபுக்கள் சபையாக இல்லாவிட்டாலும், அந்த மேல் சபையிலே இன்றைக்கு ஒரு மதவாதியை, காவி உடை அணிந்தவரை, உள்ளே வா என்று அழைத்த பெருமையும், இந்த அரசுக்கு உண்டென்று சொன்னால் அதை யாரும் மறுப்பாரில்லை.

இங்கு சிவபிருந்தாதேவி அம்மையார் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மெரினா கடற்கரையில் உட்கார்ந்து, இவர்கள் நாட்டைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று. அப்படித் தான், ஒருநாள் மெரினா கடற்கரையில் உட்கார்ந்து நாங்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது, மேல்சபையில் இப்பொழுது காலியாக இருக்கின்ற இடத்துக்கு யாரை நியமிக்கலாம் என்று சிந்தித்தோம். நீண்ட நேரச் சிந்தனைக்குப் பிறகு நான் எனது அமைச்சரவை நண்பர்களைக் கேட்டேன். இப்படிச் செய்தால் என்ன? என்றேன். எப்படி என்று கேட்டார்கள். நம்முடைய அடிகளாரை மேல்சபைக்கு அழைத்துவிட்டால் என்ன? என்றேன். ஒப்புக் கொள்வாரா என்று கேட்டார்கள். நானும் எப்படியாவது ஒப்புக் கொள்ள வைக்கிறேன் என்ற உறுதியை, அமைச்சரவை நண்பர்களுக்கு அளித்துவிட்டு, அவரோடு தொடர்பு கொண்டேன். வேறு பல நண்பர்களையும் தொடர்பு கொள்ளச் சொல்லி, அவரை எப்படியும் மேலவைக்கு அழைத்து வந்துவிட வேண்டும் என்கின்ற பிடிவாதத்திலே வெற்றிபெற்றேன். ஏனென்றால் சிலபேர் கொஞ்சம் விலகியிருந்தால் இடையிலே சில கருத்துமோதல்கள் ஏற்படும். இடையிலே இருப்பவர்கள் சிலபேர் இருக்கிறார்களே, அந்தக் கருத்து மோதல்களை வளர்ப்பதில் சமர்த்தர்கள். அவர்களுக்கு இடமில்லாதவகையில் செய்தோம். ஒரு சிலரால் இது ஏதோ ஒரு நாஸ்திகக் கட்சியினுடைய ஆட்சி என்றெல்லாம் சொல்லப்படுகின்ற நேரத்தில், ஒருவேளை நாங்களே தடம் தவறிச் சென்றாலும், நீங்கள் செல்லக்கூடாது என்று சுட்டிக்காட்ட, நம்முடைய அடிகளாரைப்போல், அதைப்போலவே ஆழ்ந்த பக்திபடைத்த நம்முடைய சிலம்புச் செல்வரைப்போல், சிலபேர் இருக்க வேண்டும் என்று விரும்பினோம். “இடிப் பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப் பார் இலானும் கெடும்” என்ற குறளை நாங்கள் படித்தவர்கள் மாத்திரம் அல்ல. உணர்ந்து வைத்திருப்பவர்கள். எங்களை இடித்துச் சொல்லுபவர்கள் வேண்டும்; தட்டிக் கேட்பவர்கள் வேண்டும்; அதே நேரத்திலே குழியிலே தள்ளுவோர் கூடாது. “பெரியாரைத் துணைக் கோடல்” என்ற அதிகாரத்தில்,

திருவள்ளுவர் எழுதியிருக்கின்ற "இடிப் பாரை இல்லாத ஏமராமன்னன் கெடுப் பார் இலானும் கெடும்'' என்கின்ற அந்தக் குறளை மனத்திலே வைத்துத் தான் நாங்கள் தவறு செய்கின்ற நேரத் தில் சுட்டிக்காட்டச் சிலபேர் தேவை என்கின்ற வகையிலே, சிலம்புச் செல்வ ரைப் போன்றவர்கள், அடிகளாரைப் போன்றவர்கள் எல்லாம் மேலவையில் இருக்கவேண்டுமென்று, நாங்கள் விரும்பினோம். எங்களுடைய விருப் பத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே அவர்கள் இன்றைக்கு அந்தப் பொறுப் புக்களை ஏற்றுத் தேவையான அறிவுரை களை எங்களுக்குக் கூறிக் கொண்டிருக் கிறார்கள்.

நான் இந்த மண்டபத்தைப் பார்க் கிறேன். இங்கு வந்து அமர்ந்ததும், நீங்கள் இந்த மண்டபத்தினைப் பார்க் கிறீர்களே, அந்தக் கூட்டங்களுக்கும் இந்தக் கூட்டத்துக்கும் என்ன வித்தியாசம்? சொல்ல முடியுமா என்று, அடிகளார் என்பால் ஒரு விடுகவி போட்டார். நான் சொன்னேன் இதிலே பெரும்பான்மையோர் வைதிக வடிவங் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இது ஒரு வித்தியாசம் என்று சொன்னேன். இன்னொன்று தெரிகிறதா என்று கேட்டார். என்ன என்றேன். எந்தவித மான சாதிபேதமும் இல்லாமல் அனைவரும் ஒன்றாக அமர்ந்திருக்கிறார் களே, இந்தக் காட்சியை நீங்கள் பார்க்கவில்லையா என்று கேட்டார். நான் உடனே அவருக்குச் சொன்னேன். மாநாட்டுத் தலைவர் யார் தெரியுமா? தம்பி தேவேந்திரன், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று நான் சொன்னேன். சிலர் குறிப்பிட்டார்கள். நம்முடைய சகோதரர் அரங்கண்ணல், தலைமை நிலையமே திருவாரூர் தான் என்று குறிப்பிட்டார். அவர்களுடைய அழைப்பிதழிலே போடப்பட்டிருக்கிற கோயிலே கூடத் திருவாரூர்க் கீழக் கோபுரம்தான். அதைத்தான் அழைப்பிதழிலே கூடப் போட்டிருக் கிறார்கள்.

## திருவாரூரும் தேவேந்திரனும்

திருவாரூருக்கும் தேவேந்திரனுக்கும் கூட அதிகத் தொடர்பு உண்டு. இப் பொழுது கூட ஆண்டுதோறும் தேவேந்திரன் ... இந்தத் தேவேந்திரன் அல்ல.. தேவலோகத்துத் தேவேந்திர னுடைய சிலை, திருவாரூர்க் கோயிலைச் சுற்றிக் கொண்டுவரும். ஆனால் கோயிலுக்குள்ளே இன்றைக்கும் அதை அழைக்காமல், கொஞ்சம் தூரத்தில் நிறுத்தி வைத்துத் தியாகராச சாமியைத் தரிசனம் செய்துவிட்டுப் போக அந்தச் சிலையை அனுமதிப்பார்கள். இன்றைக் கும் இந்த விழா நடைபெறுகிறது. அதிலே சமத்துவம் இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்ந்து, தெய்விகப் பேரவையின் சார்பாக முடி வெடுக்கவேண்டியவர் அடிகளார் அவர் கள். அதை அவருக்கு விட்டு விடு கின்றேன். ஏன் இந்த நிலைமை என்றால், திருவாரூரிலே இருக்கிற தியாகராசர் தேவேந்திரனால் பூசிக்கப்பட்டவர். அப்படியா என்று என்னைக் கேட்காதீர் கள். புராணம் அப்படிச் சொல்லுகிறது.

தேவேந்திரனுக்கு ஒரு சமயம் போர்க் களத்தில் பூலோகத்திலே உள்ள ஓர் அரசனுடைய துணை தேவைப்பட்டது. அந்த அரசனது பெயர் முசுகுந்த சோழச் சக்கரவர்த்தி. அவர் திருவாரூரை ஆண்டு வந்தவர். தேவேந்திரன் முசுகுந்தனைத் துணைக்கு அழைத்தான். துணைக்கு அழைத்து வெற்றியும் பெற்றான். வெற்றி பெற்ற

வுடன் தேவேந்திரன் முசுகுந்த சோழச் சக்கரவர்த்தியைப் பார்த்து, ஏதாவது பரிசாகக் கொடுத்து விட்டுப் போயிருக்க லாம். ஆனால் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு, நீ செய்த உதவிக்கு எது வேண்டுமானாலும் கேள் தருகிறேன் என்று தேவேந்திரன் சொல்லிவிட்டான். இப்பொழுது என்ன வேண்டுமானாலும் கேட்பேன், தா என்று கேட்கின்ற தேவேந்திரனை இங்கு நாம் பார்க் கின்றோம். ஆனால் அந்தத் தேவேந்திரன் என்னவேண்டுமானாலும் கேள் தரு கின்றேன் என்று முசுகுந்த சோழச் சக்கரவர்த்தியிடம் சொல்லிவிட்டான். முசுகுந்தன் திருவாரூர்க்காரர் அல்லவா? ஆகவே, நீ வைத்துப் பூசித்துக் கொண்டிருக்கிற தியாகராசப் பெருமானை எனக்குத் தா என்று கேட்டு விட்டார். அடுத்தவாரம் வா தருகிறேன் என்று தேவேந்திரன் சொல்லி விட்டான்.

இதற்கிடையில் தேவேந்திரன் கெட்டிக்காரத்தனமாக, அதே தியாகராச சுவாமி சிலையைப்போல, ஆறு சிலைகளைச் செய்து, அந்த ஆறு சிலைகளையும் முசுகுந்தனுக்கு நேராக வைத்து, உனக்கு விருப்பமான தியாகராசரை எடுத்துக் கொண்டு போ என்று சொன்னான். அதற்குக் காரணம் அந்த சுவர்ணத்தால் செய்யப்பட்ட, தங்கத்தால் அமைந்த, தேவேந்திரன் வணங்கிக் கொண்டிருக் கின்ற தியாகராசாவை விட்டுவிட்டு, ஆறிலே ஒன்றை எடுத்துக்கொண்டு போய்விட மாட்டானா என்றதொரு நம்பிக்கை. ஆனால் தியாகராசாவுக்குத் தேவேந்திரன் தன்னை மறந்து எதை வேண்டுமானாலும் கேள் என்று அவசரத் தில் சொல்லிவிட்டானே, ஆகவே தேவேந்திரனைத் தண்டிக்கவேண்டு மென்கின்ற ஆசையால், முசுகுந்தசோழச் சக்கரவர்த்தியினுடைய கனவிலே தோன்றி, நான் ஒரு வண்டு உரு வெடுத்து எந்தச் சிலையிலே உட்காரு கிறேனோ, அதைக்கேள் என்று அவர் சொல்லிவிட்டாராம். முசுகுந்தன் வந்தான். தேவேந்திரன் ஆறு தியாக ராசாக்களையும் வைத்தான். முசுகுந்தன் தியாகராசாக்களை உற்று நோக்கினான். முதல்நாள் ஆண்டவன் இட்ட கட்டளைப் படி அவர் ஒரு வண்டு உருவமெடுத்து வந்து, உண்மையான தியாகராசர் சிலை யின் மீது உட்கார்ந்தார். உடனே முசுகுந்தன் இந்தத் தியாகராசாதான் எனக்கு வேண்டுமென்று கேட்டான். தேவேந்திரன் வேதனைதாங்க முடியாமல் இதையும் எடுத்துக்கொள், எல்லாவற்றை யும் எடுத்துக்கொள் என்று ஏழு தியாக ராசாக்களையும் கொடுத்துவிட்டான். திருவாரூர்க்காரன் பரந்த நோக்கம் படைத்தவன். ஆகவே முசுகுந்தன் அவை ஏழையும் ஒரே இடத்தில் வைக்காமல், திருவாரூர் திருநள்ளாறு திருநாகைக்காரோணம் திருக்காருயில் திருக்கோளிலி திருவாய்மூர் திருமறைக் காடு என்னும் ஏழு தலங்களில் வைத்துப் பூசித்தான் என்பது கதை.

ஆகவே, திருவாரூருக்கும் தேவேந் திரனுக்கும் எவ்வளவும் தொடர்பு இருக் கின்றது பாருங்கள். அன்றைக்கு ஏற் பட்ட தண்டனைதான். 'நீ வந்து வணங்க உரிமையுண்டு. ஆண்டுக்கு ஒருமுறை வந்து வணங்கு. ஆனால் நீச வடிவத்தில் வந்து வணங்கவேண்டும்' என்பது தண்டனை. அந்தக் காரணத்தினாலே தான், இன்றும் தேவேந்திரன் கோயிலுக் குள்ளே நுழையாமல் வெளியில் நிற் கிறான். அந்தச் சிலையைக் கொண்டு வந்து கோபுரவாசலுக்கு எதிரே, ஒரு பர்லாங்கு தூரத்திற்கு அப்பால் நிறுத்தி வைத்து, வணங்கச் செய்கின்ற விழாவை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

தண்டனைக்காலம் ஒரு சில ஆண்டு களுக்குள் முடிந்துவிடும். முடிந்தால், பின்பு கொலை செய்தவனுக்குக்கூட விடுதலை கிடைத்துவிடுகிறது. எத்தனையோ பல நூற்றாண்டுக் காலம் ஆகியிருக்கின்ற காரணத்தால், நம்முடைய அடிகளார் போன்றவர்கள், சிலம்புச் செல்வர் போன்றவர்கள், தேவேந்திரனுக்குக் கிடைத்த தண்டனையைத் தளர்த்தி, இனிமேல் உள்ளேபோய்த் தியாகராசரை வணங்கு கின்ற அந்த உரிமையை அவனுக்கு வழங்க ஆவன செய்யவேண்டும். ஏனென்றால் கடவுள் பெயராலேயே இன்னும் தீண்டாமைத் தத்துவம் இருக்குமேயானால், அது நல்லதல்ல. ஆலயங்களில் நாம் ஏற்படுத்துகின்ற இந்தச் சமத்துவ உணர்ச்சிதான் சமுதாயத்திலே பரவிட வழிவிடுப்பதாக அமையும்.

**சமத்துவ நோக்கம்**

ஆகவே அந்த வகையிலே இன்றைக்கு இந்தச் சமுதாயத்திலே ஒரு மதத்தை மார்க்கத்தை அல்லது சைவத்தை வைணவத்தை உருவாக்கவேண்டும், அல்லது நிலைபெறச் செய்ய வேண்டும். அந்தக் கொள்கை கோட்பாடுகள் சமுதாய நீதியைக்காப்பாற்றச், சமுதாயக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றப் பயன் படத்தக்கவை என்று கருதுகின்ற மத வாதிகள் யாரானாலும், சமத்துவ நோக்கத்திலே ஆண்டவன் படைப்பிலே எல்லோரும் மனிதர்கள் தான் என்கின்ற அந்த உண்மையை உணரச் செய்கின்ற பணியிலே ஈடுபட்டாகவேண்டும்.

அந்தக் காரணத்தினாலேதான் தமிழக அரசு, அறங்காவலர்களிலே கூட அரிசன சமுதாயத்தைச்சேர்ந்த ஒருவர் கட்டாய மாக இருந்திட வேண்டும் என்கின்ற சட்டத்தைச் செய்திருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் அருச்சனை செய் கின்ற தகுதியினைப் பெறுகின்றவன், எந்தக் குலத்திலே பிறந்தவனாக இருந் தாலும், அவன் ஆண்டவனை வணங்கத் தகுதி படைத்தவன் என்கின்ற சட்டத்தையும் இந்த அரசு செய்தது. அதையும் நீங்கள் உணர்வீர்கள். இவை களை மாத்திரம் அல்ல. இந்த சமுதாயச் சீர்திருத்தங்களோடு குடிமக்களின் வயிற்றையும் கவனிக்கிறது. ஒரு அரசு மனிதனுடைய இதயத்தையும் புனிதப் படுத்த வேண்டும், அவனுடைய மூளையையும் சுத்தப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் அவனுடைய வயிற்றை யும் காலியாக வைத்திருக்க அரசு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவேதான், அவனுடைய வயிற்றுப் பாட்டைக் கவனிப்பதற்காகத்தான், இந்த அரசு அண்மையிலே பல ஊதிய விகிதங்களை யெல்லாம் உயர்த்தியது.

**ஊதிய உயர்வு :**

அப்படி உயர்த்தியதில் குறிப்பாக, இங்குக் கூடியிருக்கின்ற இந்த மயிலாப்பூர்ப் பகுதியிலே உள்ள கபாலீசுவரர் ஆலயத்திலே மாத்திரம், 100 ரூபா மாத ஊதியம் பெற்ற எழுத்தர் கள் தற்போது 164 ரூபா மாத ஊதியம் பெறுகிறார்கள். 198 ரூபா மாத ஊதியம் பெற்ற ஓதுவார்கள், தற்போது 250 ரூபா அதாவது 52 ரூபா அதிகமாக ஊதியம் பெறுகிறார்கள். 215 ரூபா ஊதியம் பெற்ற நாதசுர வித்வான், தற்போது 35 ரூபா அதிகமாக 250 ரூபா மாத ஊதியம் பெறுகிறார். 109 ரூபா மாத ஊதியமாகப் பெற்ற கடைநிலை ஊழியர் தற்பொழுது 144 ரூபா, அதாவது அதிகமாக 35 ரூபா, இந்தக் கபாலீசுவரர் ஆலயத்திலே மாத்திரம் ஊதியமாகப் பெறுகிறார்கள்.

இங்கே அமைச்சர் அவர்களும், நம்முடைய சிலம்புச் செல்வரும், அடிகளாரும், மற்ற சட்டப்பேரவை உறுப்பினர்களும், தலைவரும் எடுத்துக்காட்டியதைப் போல், ஏறத்தாழ 67 இலட்ச ரூபாய்க்கு மேல் இன்றைக்கு ஆலய ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் தருவதற்காக, இந்த அரசு இந்தத் துறைக்கு அனுமதித்துள்ளது. இதன் மூலம் ஆலய ஊழியர்களுக்கு 67 இலட்ச ரூபா அதிகமாக ஊதியம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இது கோரிக்கையே இல்லாத மாநாடு என்று, என்னை முதலிலே அழைத்தார்கள். பாராட்ட மாத்திரம் தான், நன்றி சொல்ல மாத்திரம்தான், வரவேற்க மாத்திரம்தான், வாழ்த்துவதற்கு மாத்திரம்தான் என்று சொல்லி அழைத்தார்கள். எனக்குத் தெரியும். எல்லா மாநாடுகளிலும் இப்படித்தான் அழைக்கிறார்கள். நேற்றையதினம்கூட, நம்முடைய திருவாரூர் நண்பர் விசயராகவன் அவர்கள், என்னிடத்திலே வந்து தயங்கித் தயங்கி ஒரு பட்டியலைக் கொடுத்தார். என்ன என்று கேட்டேன். மாநாடு என்றார். இதற்கு முன்பு என்னை மாநாட்டிற்குத் தேவேந்திரன் அழைத்த போதும், இந்தப் பணியாளர்களுடைய மாநிலத் தலைவராக இருக்கின்ற தென்னன் அழைத்தபோதும், (தென்னன் என்றால், திருவாரூரில் இன்னொரு தென்னன் இருக்கிறார், அவரல்ல, இவர் வேறு தென்னன்), நான் அவர்களிடத்தில் கோரிக்கை உண்டா என்று கேட்டேன். இல்லை என்றுதான் சொன்னார்கள். ஆனாலும் ஏதாவது இருக்கும் என்ற எண்ணம் எனக்கு உண்டு. ஆகவே நம்முடைய அறநிலைய அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். ஒரு பத்துப் பதினைந்து கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்று என்னிடத்திலே சொன்னார். நம்முடைய அரங்கண்ணல் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நிரந்தரமாக இந்தப் பதவிகள் இருந்திட வேண்டும் என்று சொன்னார்கள். நான் இருக்கிற பதவியே, நிரந்தரமான பதவியில்லை, ஆனால் நாங்கள் நிரந்தரமாகப் பதவியிலே இல்லை என்பதற்காக, உங்களையெல்லாம் நிரந்தரமற்றவர்களாக ஆக்கிவிடக் கூடாதென்பதை உணருகிறேன். அதே நேரத்தில் அடிகளார் அவர்களும், சிலம்புச் செல்வர் அவர்களும் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளக் கூடிய இதை, எதிர்காலத்திலே சிந்தித்து விவாதித்து ஆராய்ந்து ஏற்ற முடிவைச் செய்திட வேண்டும். ஏனென்றால் எல்லா ஆலயங்களும் ஒரே நிலையில் இல்லை

**கோயில்கள் சிறப்பாகப் பராமரிக்கப்படும்:**

இராசராச சோழன் கட்டினான் தஞ்சா ஊரிலே இருக்கிற பெருவுடையார் கோயிலை. ஆனால் அந்தக் கோயிலுக்கு எள்ளளவு சொத்தும் இல்லை. அந்த வம்சத்திலே வந்த சோழமன்னன் தான் கட்டினான் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலை. முகிலைமுட்டுகின்ற கோபுரத்தைக் காண்கின்றோம். ஆனால் அங்கு இடிந்து பாழாகக் கிடக்கின்ற கோட்டை கொத்தளங்களையும் காண்கின்றோம். அங்கு நிர்மாணிக்கப்பட்டு இருக்கின்ற விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வதற்குத் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றுவதற்கும் ஆளில்லாத நிலைமையைக் காணுகின்றோம். அந்த இராசராசேச்சுவரமானாலும், கங்கைகொண்ட சோழபுரமானாலும், தமிழக அரசு கையிலே மாத்திரம் இருந்திருந்தால், அந்தக்கோயில்களுக்குச் சொத்தோ நிலமோ எதுவும் இல்லாவிட்டாலும், தமிழக

அரசு அந்தக் கோயில்களைப் பராமரித்து வந்திருக்கும். ஆனால் இன்றைக்கு, அந்தக் கங்கைகொண்ட சோழபுரமும், தஞ்சை இராசராசேச்சுவரமும் மத்திய அரசினுடைய கையிலே இருக்கின்றன. அவைகள் தமிழக அரசின் கைக்கு வர வேண்டுமென்று கேட்கிறோம். கேட்டால், இவர்களுடைய கைக்கு அக்கோயில்கள் வந்தால், அங்குப் பூசையே நடக்காது என்று சில பேர்கள் சொல்லுகிறார்கள். பூசை நடக்காமலிருந்த கோயில்களில் எல்லாம், இன்று ஆறுகாலபூசை நடப்பதைப் பார்க்கின்றோம் இந்த அரசில். அரைப்பட்டினி கிடந்த ஆண்டவர்கள் எல்லாம், இன்று அதிரசமும்வடையும் சாப்பிடுகிற காட்சியைப் பார்க்கின்றோம். இந்த ஆட்சியில்! கங்கைகொண்ட சோழபுரமும், இராசராசேச்சுவரமும், தமிழக அரசின் கைக்கு வந்தால், அவைகள் மேலும் இடிக்கப்பட்டு விடுமா? இல்லை. அவற்றை வளர்க்கவும் வளப்படுத்தவும், இன்னும் பல்லாயிரம் ஆண்டு காலத்திற்கு நினைவுச் சின்னமாக உறுதிப்படுத்தவும் வலுப்படுத்தவும், இந்த அரசு தன்னாலான காரியத்தைச் செய்திருக்கும்.

இன்றைக்குத் தமிழகத்திலே பல்வேறு ஆலயங்கள் ஒரே நிலையான சொத்து வசதிகளைப் படைத்தனவாக இல்லை. சில ஐம்பதினாயிரம் ரூபா வருமானம் உள்ளகோயில்கள்; இரண்டு லட்ச ரூபா வருமானம் உள்ள ஆலயங்கள்; பத்தாயிரம் ரூபா வருமானம் உள்ள ஆலயங்கள்; என்றெல்லாம் இருக்கின்ற நேரத்தில், நாம் ஒரே நிதானமாக ஊதியத்தை வைத்து ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்குவது, அப்படி நிரந்தரமாக்கிய ஊழியர்களை ஒரு ஆலயத்திலிருந்து இன்னொரு ஆலயத்திற்கு மாற்றுவது என்பது, எளிதான காரியம் அல்ல. ஐம்பதாயிரம் ரூபா வருமானமுள்ள கோயிலில் 250 ரூபா சம்பளம் வாங்குகிறவோர் ஊழியரைப் பத்தாயிரம் ரூபா வருமானமுள்ள ஒரு கோயிலுக்கு மாற்றினால், அங்கே நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பளம் 150 ரூபா ஆக இருக்குமானால், அவர் இடர்ப்படநேரிடும். ஆகவே இவைகளையெல்லாம் சமப்படுத்தும் ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டாகவேண்டும். அது அவ்வளவு துரிதமாக அவசரமாக ஆலோசிக்காமல் நடத்தி முடித்து விடுகின்ற காரியம் அல்ல. ஆகவே அவைகளை யெல்லாம் நாம் செம்மைப்படுத்தி அமைக்கவேண்டும். இன்றைக்கு அந்த எண்ணத்தை இங்கே அரங்கண்ணல் அவர்கள் வெளியிட்டார்கள். அதை அடிகளாரும், சிலம்புச் செல்வரும், மற்றவர்களும் எதிரொலித்தார்கள். அந்த எண்ணத்தைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்துவதற்குக் கொஞ்சம் நாளைக் குறிப்பிட்டு, அதற்குப் பிறகு நிச்சயமாகச் செயல்படுத்துவோம் என்பதை மாத்திரம், நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வேலை நிறுத்தம் கூடாது :

இன்னொன்று முக்கியமாக நம்முடைய சிலம்புச் செல்வர் சொன்னார். யூனியன், சங்கம் என்று அமைத்தாலே, அதனுடைய மிக முக்கியமான வேலைத் திட்டங்களிலே ஒன்று வேலை நிறுத்தம் தான். பெயர் வேலைத்திட்டம் ஆனால் செய்வதோ வேலை நிறுத்தம். இதுதான் அதனுடைய வேலைத்திட்டங்களில் ஒன்றாக இருக்கும். நீங்கள் சங்கம் வைத்துக்கொள்ளுங்கள், ஆட்சேபனையில்லை. சில மடாதிபதிகள் கூடப் பயப்படுகிறார்கள். சில ஆலய நிர்வாகிகள் கூடப் பயப்படுகிறார்கள். அலுவலர்கள் மாத்திரம் அல்லாமல், ஆலயத்

திலே கூட்டுவோர் பெருக்குவோர் சாதாரண சிப்பந்திகள் மெய்க்காவலர் என்றெல்லாம் பலர் இருக்கின்றனர், அவர்கள் எல்லாம் இந்தச் சங்கத்திலே இணைக்கப்பட்டு விட்டால், திடீரென்று ஒரு வேலைநிறுத்தமென்றால், பிறகு ஆலய வழிபாடே இல்லாமல் கூடப் போய்விடும் என்கிற அச்சம், அவர்களுக்கு ஏற்படுவதிலே நியாயமிருக்கிறது, என்பதை, நான் நிச்சயம் உணர்கிறேன். ஆகவேதான் சங்கம் இருக்கட்டும். எந்தச் சங்கத்திற்கும் சட்டதிட்டங்கள் எழுதப்படுவதுண்டு, நான் தலைவரையும், சிறப்புத் தலைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். மாநிலத் தலைவரையும்கேட்டுக் கொள்ளுகிறேன். நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆலயப் பணியாளராக இருக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களுடைய சங்க நோக்கத்திலே, மிக முக்கியமான முதல் நோக்கமாக இருக்கவேண்டியது, நம்முடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள எந்தக் காலத்திலும் வேலைநிறுத்தத்திலே ஈடுபடுவதில்லை என்பதை மர்த்திரம் உங்களுடைய முக்கியமான குறிக்கோளாக வைத்துக் கொள்வீர்களேயானால், பிறகு எந்தச்சட்ட திட்டங்களை வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளுங்கள். என்னென்ன தேவையென்றாலும் கேளுங்கள்.

வேலை நிறுத்தமென்றால் ஆலய வழிபாடு நின்றுவிடும். ஏதோ ஆலையிலே தொழில் நிற்கிறது. ஒரு நாளைக்கு உற்பத்தி குறைகிறது. அது பொருளாதாரப் பிரச்சினை. ஆலயம் மூடப்பட்டால் ஆத்மீகப் பிரச்சினை. இந்த அரசுக்கு ஆத்மீகப் பிரச்சினையிலே என்ன அவ்வளவு அக்கரை என்று யாராவது கேட்பீர்களேயானால், எனக்கு அக்கரை இருக்கிறதோ இல்லையோ, ஆத்மீகப் பிரச்சினையிலே நாட்டமுள்ளவர்களிடத்திலே எனக்கு அக்கரை இருக்கிறது. ஆகவே தான் சொல்லுகிறேன், அந்தப் பிரச்சினையிலே கைவைக்கிறநேரத்திலே தான் சாக்கிரதையாக இருக்கவேண்டும்

உலகம் முழுவதும் மாறி, உலகம் முழுவதும் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டு, அதன்படி நடைபெறவேண்டுமென்று அந்த அரசு ஆணையிடுகிற நேரத்திலே, நாம் அவைகளை ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கலாம். ஆகவே மற்றவர்களுடைய எண்ணங்களைப் புண் படுத்துகின்ற அந்த எண்ணத்தை, அந்தக் கொள்கையை, எங்களுக்கு எங்களை ஆளாக்கிய எங்கள் அண்ணன் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் கற்றுத்தரவில்லை. **“பண்படுத்து, யாரையும் புண்படுத்தாதே”** இதுதான் நாங்கள் அவரிடத்திலே கற்ற பாடம்.

ஆகவே அந்த அடிப்படையிலே சொல்லுகிறேன். எவ்வளவு பெரிய தீவிரமான சங்கம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சங்கத்தில் முதல் திட்டமாக எந்தக் காரணத்திற்காகவும் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவதில்லை என்பதைத் திட்டவட்டமாக அமைத்துக் கொள்ளுங்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் என்ன ஆகும்? திருவிழாவுக்குச் சாமி தூக்கிக் கொண்டு போகிற நேரத்தில். அதைத் தூக்கிக் கொண்டு போகாமல், நாலுபேர் கீழே இறக்கிவைத்துவிட்டுப் போய் விட்டால், உற்சவமூர்த்திநடுத்தெருவிலே விடப்படுவார். இந்த நிலைமை ஏற்படும். அதைப் பார்த்துப் பதைக்கின்ற நாலு பக்தர்கள் நாமாவது தூக்கிக்கொண்டு

போய் ஆலயத்திலே சேர்ப்போம் என்று தூக்க ஆரம்பித்தால், நாங்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது நீங்கள் யார் கருங்காலிகள் என்பார்கள். பக்தர் என்ற பட்டம் போய்க் கருங்காலி என்ற பட்டம் வந்து, அங்கே ஒரு பெரிய அமளி ஏற் படும். சட்டம் ஒழுங்கு அமைதி கெடும். ஆகவே இதிலே நீங்கள் மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நீங்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவ தில்லை என்று, உங்களுடைய முதல் குறிக்கோளை எழுதினால்தான், இந்தச் சங்கத்தை இந்த அரசு ஏற்றுக் கொள் ளும் என்பதைக்கூட, நான் இங்குத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோரிக்கை ஏற்பு அறிவிப்புகள் :

நீங்கள் ஒரு பத்துப் பதினைந்து கோரிக்கைகளை வைத்திருக்கிறீர்கள். அவைகளை நானும், அமைச்சர் கண்ணப்பன் அவர்களும் ஆராய்ந் தோம். உங்களுடைய தலைவர்களிடத் தில் அதுபற்றிப் பேசினோம். நீங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தவில்லை. நண்பர் இராமநாதன் பேசும்போது, புலவர் சாத்தனூர் தன்னுடைய வறுமை யைச் சொன்னதும், குமணவள்ளல் அவர்களுக்கு வாரி வழங்கினார் என்று சொன்னார். குமணவள்ளல் வாரி வழங்க வில்லை. என்ன சொன்னார் தெரியுமா? “அந்த நாள் வந்திலை அருங் கவிப் புலவோய், இந்தநாள் வந்து நீ நொந்து எனை அடைந்தாய், தலைதனைக் கொடு போய்த் தம்பிகைக்கொடுத்து விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களைகவே” என்று சொல்லக்கூடிய அளவிலேதான் குமணவள்ளல் இருந்தார். ஆனால் இப்பொழுது அந்த அளவில் நான் இல்லை. அதை வைத்துக்கொண்டுதான் இராமநாதன் என்னைக் குமணனாக வருணித்தார். நாட்டிலேயுள்ள குமண னாக வருணித்தால் மகிழ்ச்சி. காட்டிலே இருக்கிற குமணனாக வருணித்தால், “தலைதனைக் கொடு போய்த் தம்பி கைக் கொடுத்து விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களைகவே” என்றுதான் நான் சொல்ல வேண்டியிருக்கும். ஆகவே நாட்டில் இருக்கிற குமணனாக அவர் என்னை வருணித்தது உண்மையானால், இயன்றதை இந்த அரசின் மூலமாகச் செய்ய நான் கடமைப்பட்டிருக் கின்றேன்.

உங்கள் கோரிக்கைகளுக்காக இந்த மாநாடு கூட்டப்படவில்லை என்று மாநாட்டுத் தலைவர் சொன்னபோதும் கை தட்டினீர்கள். சில நண்பர்கள் சில கோரிக்கைகளைச் சொல்லி, இதையெல் லாம் முதலமைச்சர் நிறைவேற்றுவார் என்று சொன்னபோதும் கைதட்டினீர் கள். எனக்கு இந்த இரண்டு கைதட்ட லுக்கான வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்த போதி லும் நாங்களாக யோசித்து வந்த முடிவு கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்

(1) உங்களுடைய கோரிக்கைகளிலே ஒன்றாக, ஆலய ஊழியர்களுக்கு வருங் காலச் சேமிப்பு நலநிதி ஒரு இலட்சத் துக்கு மேல் வருவாய் உள்ள ஆலயங் கட்கு மட்டும் பொருந்தும் எனச் சட்டத் திலே இருப்பதை மாற்றி, 10,000 ரூபா வரை வருமானம் வரும் ஆலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் வருங்கால சேமிப்பு நலநிதி பொருந்தும் வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டிருக்கிறீர்கள். இந்தக் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்

கொள்ளுகிறேன். இதனுல் 7000 ஆலயப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள் என்ற விவரத்தையும் இங்கே கூறிக் கொள்கிறேன்.

(2) அடுத்து, ஆலய அலுவலக ஊழியர்களுக்கு விடுப்பு நாட்களை, அரசு ஊழியர்களுக்கு ஒத்தமாதிரி அமுலாக்கும்படியும், ஆலயப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கேற்ற மருத்துவ உதவியை ஆலய நிதியிலிருந்து அளிக்கும்படியும் அரசைக் கேட்டுக் கொள்ளுகிருேம் என்ற கோரிக்கை. இதிலே ஒரு திருத்தத்தோடே சொல்ல விரும்புகிறேன். தற்போது உள்ள விதிகளின்படி மொத்தத்தில் 50 நாட்கள்வரை ஈட்டுவிடுப்பு சேமித்துக் கொள்ளலாம் என்பதற்குப் பதில் 25 நாட்கள் மேலும் அதிகப்படுத்தப்பட்டு 75 நாட்கள்வரை ஈட்டிய விடுப்பு சேமித்துக் கொள்ளலாம் என்ற மாற்றத்தோடு இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

(3) அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் வெகுவாகப் பெருகிக் கொண்டே யிருப்பதால், அரசாங்கத்திலே இருந்து ஓய்வுபெறும் அதிகாரிகளை மீண்டும் ஆலயப்பணிக்குப் பதவிக்கு அமர்த்தக்கூடாதென்று அரசு ஆணையிட்டும் அமர்த்தியிருப்பதை இனி அமர்த்தாதிருக்குமாறு, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களையும், ஆணையர் அவர்களையும் இந்தச் சங்கம் கேட்டுக் கொள்கிறது என்ற கோரிக்கை. இந்தக் கோரிக்கை எந்த வகையிலே ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ருல், தற்போதுள்ள விதிகளின்படி ஆலயப்பணியில் நியமனம் பெற ஒருநபர் 25 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் என்றும் 60 வயதில் ஓய்வுபெறவேண்டும் என்றும் உள்ளதை மாற்றி, 25 வயதுக்கு மேற்பட்டவர்களையும், 45 வயதுக்குப்பட்டவர்களையும் மாத்திரம் நியமனம் செய்யலாம் என்ற திருத்தத்தோடு இது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்படிக் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஐம்பத்தி ஏழு அல்லது அறுபது வயது முடிந்து அரசாங்கத்திலே ஓய்வுபெற்று வருகிறவர்களை நிச்சயமாக வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியாது. ஆகவே 25, 45 என்கின்ற வரையறைக்குள்ளே இந்த நியமனம் இருக்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) ஆலய ஊழியர்களுக்கு ஆயுள்காப்பீட்டுத் தொகையினை நிரந்தரச் சேமிப்புத் தொகையாக ஆலயங்கள் மூலம் சேமித்து, வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது கொடுக்க வசதி செய்யுமாறு அரசாங்கத்தைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது. இந்த கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(5) மற்ருெரு முக்கியமான கோரிக்கை. நிலவுடமைச் சட்டத்திலிருந்து ஆலயங்களுக்கு விலக்களிக்கப் பரிசீலிப்பதாகக் கூறியதைச் சட்டபூர்வமாக ஆக்கி, அனைத்து ஆலய ஊழியர்களைக் காப்பாற்றி வாழ்வளிக்கும்படி தமிழ்நாடு ஆலய ஊழியர்களின் சங்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்தத் தீர்மானத்தைப்பற்றி ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன். ஊழியர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பது இந்த அரசின் அக்கரை. உழுபவனுக்கு நிலம் சொந்தமென்பது, உத்தமர் காந்தியடிகள் வகுத்த உத்தமமான கொள்கை. அந்தக் கொள்கை நடைமுறைப் படுத்தப்படுகிற நேரத்தில், உழுபவர்களை விடக் கேவலமாயிருக்கின்ற ஊழியர்களை

யும் நாம் மறந்து விடுவதற்கில்லை. ஆகவே தான், நான் அண்மையிலே 3 அல்லது 4 மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணகிரியிலே நடைபெற்ற ஒரு கூட்டத்திலே, ஆலய ஊழியர்கள் பாதிக்கப் படாத அளவுக்கு, ஆலயங்களுடைய பணிகள் பாதிக்கப்படாத அளவுக்கு, ஆலய வழிபாடுகள் பாதிககப்படாத அளவுக்கு, நிலவுடைமைச்சட்டம் நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். அந்த உறுதியைமீண்டும் இங்கே நினைவு படுத்துகிறேன் என்பதையும் கூறிக் கொள்ளுகின்றேன். "அழுத பிள்ளைதான் பால்குடிக்கும்'' என்று, காட்டூர் இராமையா அவர்கள் சொல்ல, உடனே அம்மையார் அவர்களோ அழுத பிள்ளைக்கு எப்படி எப்படி யெல்லாம் தாய் பால்கொடுப்பாள் என்று சொன்னார்கள். பிள்ளைகள் அழாமலே இவ்வளவு பால் கொடுக்கப்பட்டிருக் கிறது. இதற்கு மேலே கொடுத்தால் அசீரணம் ஏற்படும். வயிற்றிலே மந்தம் வரும்; தொடர்ந்து மாந்தம் வரும்; ஆகவே வழங்குகிற பாலை இதோடு நிறுத்திக் கொண்டு விடைபெறுகிறேன்

வணக்கம்.

---



தஞ்சை மாவட்டம், சீர்காழி நாங்கூர் கிராமத்தில் அருள்மிகு மதங்கீசுவர சுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழா நிகழ்ந்தபோது, ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., துணை ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, உதவி ஆணையர் திரு. ஆர். அர்ச்சுனன், திருப்பணிக் குழுத் தலைவர் திரு. இ. எஸ். கணபதி முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

# தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் மாநாட்டுச் சிறப்புரை

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள்,

அறநிலைய அமைச்சர்



பேரன்புமிக்க இந்த மாநாட்டினுடைய தலைவர் அருமைத் தம்பி தேவேந்திரன் அவர்களே, தமிழக முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்களே, தவத்திரு அடிகளார் அவர்களே, இங்கே சிறப்பாக வருகை தந்து இருக்கின்ற சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களே! நண்பர்களே ! தாய்மார்களே ! உங்கள் அனைவருக்கும் என் பணிவன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ்நாடு ஆலய ஊழியர்களின் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டினை, இன்றைய தினம் மிகச் சிறப்பான முறையில் காலையிலிருந்து நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், உங்களுக்கெல்லாம் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும் அளவில், சிறப்பாக வருகை தந்து கலந்து கொண்டிருக்கின்றார்கள். சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டம் தமிழகச் சட்ட சபையிலே நடந்து முடிந்த பின்னால், இந்த மாநாட்டினை உடனடியாக நடத்த வேண்டுமென்று, உங்கள் தலைவர் தம்பி தேவேந்திரன் அவர்கள், நம்முடைய கலைஞர் அவர்களிடத்திலே கேட்டிருந்தார். இன்றைய தினம் அதனை நடத்துகின்ற வாய்ப்பினை நாம் பெற்றிருக்கின்றோம்.

இங்கே பேசிய நண்பர்கள் அனைவரும், நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்களும், சிலம்புச்செல்வர் அவர்களும், உங்களுடைய சிறப்பான பணிகளைப் பாராட்டிப் பேசினார்கள். எதிர்காலத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய கடமை உணர்வுகளை, உங்களது உள்ளத்திலே இருத்திக் கொள்கின்ற வகையில், நல்ல பல யோசனைகளையெல்லாம் உங்களிடத்தில் சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிலுள்ள பழமையான ஆலயங்களையெல்லாம் பாதுகாக்க வேண்டும், காப்பாற்றவேண்டும் என்ற அக்கறையினால்தான் கோடிக்கணக்கான

ரூபாயை நாம் செலவிட்டு வருகிறோம். என்றாலும் இவ் ஆலயங்களையெல்லாம் மிகவும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, ஆலய ஊழியர்களின் கையில்தான் இருக்கின்றது என்பதை, யாரும் மறுக்க முடியாது. அத்தகைய ஓர் உணர்வு உங்கள் உள்ளத்தில் ஏற்படுகிறவகையில், அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு மாநிலங்களிலுள்ள ஆலயங்களை எல்லாம் சுற்றிப் பார்த்து வருகின்றவர்கள், தமிழ் நாட்டிலுள்ள கோயில்களைப் பார்த்ததற்குப் பின்னால்தான், கோயில்களை இவ்வளவு தூய்மையாக நாம் வைத்திருப்பதைப் பார்த்து, அத்தனைபேரும் நம்மைப் பாராட்டுகின்றனர். அதேபோலத் தமிழகத்திலே இருக்கின்ற ஆலய ஊழியர்கள் எல்லாம் மிகவும் அன்போடும் பண்போடும் நடந்து கொள்ளுகின்றார்கள் என்று, அவர்கள் எங்களைச் சந்தித்து நன்றி தெரிவிக்கின்றனர். அந்த நன்றி அத்தனையும், தமிழகத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான ஊழியர்களான உங்களைத்தான் சேரும் என்று, சொல்லிக்கொள்வதில் நாங்கள் பெருமைப் படுகிறோம்.

தமிழ்நாட்டுக் கோயில்களிலுள்ள பெருமையையும் பண்பாட்டையும், இந்தியர் மட்டுமல்லாமல், வெளிநாட்டவர்களும் கூட வந்து புகழ்ந்து பாராட்டுகின்றனர் என்று சொன்னால், அத்தனைச் சிறப்புகளும் தமிழ் நாட்டிலுள்ள கோயில் ஊழியர்களாகிய உங்களைத்தான் சேரும். தமிழ்நாட்டுக் கோயில்களின் பெருமையைக் கட்டிக் காப்பாற்றி, அறநிலையத்துறையின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது என்று சொல்லி அனைவராலும் பாராட்டப்படும் அளவுக்கு, தமிழ்நாட்டுக்கு ஒரு சிறப்பான பெயரும் புகழும் ஏற்பட்டுள்ளன என்றால், அது ஏதோ அமைச்சர்களுக்கோ, கோயிலில் இருக்கின்ற அதிகாரிகளுக்கோ சொந்தமானதல்ல; அந்தக் கோயிலிலே பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான ஊழியர்களாகிய உங்களுக்கே சொந்தம் என்பதை, இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டு ஆகவேண்டும்.

இத்தகைய சிறப்பான முறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களான உங்களுடைய கோரிக்கை, இன்றைக்கு நேற்றைக்கல்ல, இந்த ஆலயங்கள் தோன்றிய காலம் முதல் இருந்து வருகின்றது என்றுகூடச் சொல்லலாம். எங்கோ ஒரு குக்கிராமத்தில் இருக்கின்ற கோயில், ஒரு ஆண்டுக்கு 1000 ரூ. வருமானம், 500 ரூ. வருமானம் வரக்கூடிய கோயில், 5000 ரூபா. வருமானம் வரக்கூடிய கோயில், இவைகளையெல்லாம் பொறுத்தவரை மாதம் ஒன்றுக்கு 15 ரூ. 20 ரூ. சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கக் கூடியவர்கள், அதேபோல இலட்சக் கணக்கான ரூபா வருமானம் வரக்கூடிய கோயிலாக இருந்தாலும், அங்கேயும் தங்களது ஊதியத்தைத்தேவையான அளவுக்குப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையிலே இருக்கக் கூடியவர்கள், இப்படிபட்டவர்களுடைய கோரிக்கைகளெல்லாம் நீண்ட நெடுங்காலம் கவனிக்கப் படாமல் இருந்து வந்திருக்கின்றன. ஆலய ஊழியர்கள் நீண்டநெடுங் காலமாக அவதிப் பட்டுக் கொண்டு வருகின்றார்கள். அவர்களுக்கென்று சம்பள உயர்வே கிடையாது. உடனடியாக இந்தக் காரியத்தை அரசாங்கத்தின் சார்பிலே செய்யவேண்டும் என்று அடிகளார் அவர்கள் மேலவையிற் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எழுந்திருந்து, அந்தக் கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று சட்ட மன்றப் பேரவையிலே தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு அரசினுடைய இந்து அறநிலையத் துறையின் வரவுசெலவுத் திட்டத்தைச் சட்டசபையிலே வைத்துப் படிப்பதற்கு முன்னால் ஊழியர்களின் கோரிக்கைகளை முதலில், அறிவித்துவிட்டு, தமிழ்நாட்டிலே 50000-க்கு மேல் இருக்கின்ற ஆலய ஊழியர்களுக்கு 73-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலேயிருந்து சம்பள உயர்வு கொடுக்கப்படும். அதனாலே அரசாங்கத்திற்கு, கோயில்களுக்கு 67 இலட்சம் ரூபாய்க்கு மேலாக அதிகமாகச் செலவாகும். இந்தப் பொறுப்பினை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுகிறது என்று, நமது டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதைச் சட்டப் பேரவையிலே அறிவித்ததற்குப் பின்னால்தான், அறநிலையத்துறை நிர்வாகத்தின் வரவுசெலவுத் திட்டத்தைக்கூட, அங்கே நாம் ஆரம்பித்து வைத்தோம். அந்த அளவுக்கு ஆலய ஊழியர்களிடத்தில் எங்களுக்கு அக்கறை உண்டு.

சமுதாயத்தின் அடிப்படையிலே இருக்கின்ற மக்களினுடைய வாழ்க்கைமுன்னேறவேண்டும். அவர்களின் குறைகள் முழுதாகத் தீர்க்கப்பட வில்லை என்றாலும், நம்மால் முடிந்த அளவிற்குத் தீர்க்கவேண்டும் என்ற முறையிலேதான், அன்றைய தினம் சட்டசபையிலேகூட, உங் களுடைய கோரிக்கைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையிலே அதை அறிவிக்கச் சொன் னார்கள். நீங்கள் அத்தனைபேரும் எதிர்பார்த்த அளவிற்கு, சிலபேர் எதிர்பாராத அளவுக்குக்கூட அந்தப் புரட்சிகரமான திட்டத்தை, நீண்ட காலமாகத் தாமதிக்கப்பட்டு வைத்திருந்த அந்தக் காரியத்தை, சட்டசபையிலே நாங்கள் சீக்கிரம் தெரிவித்தோம். அத்தகைய மாபெரும் காரியம் மட்டுமல்லாது, எதிர்காலத்திலே இந்த ஆலய ஊழியர்களுக்குப் பாதுகாப்பான சட்டங்கள் தீட்டப்பட்டாக வேண்டும். அவர் களுக்குத் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் உழைக்கின்ற நேரத்திலும், எந்த நேரத்திலும் சங்கடங்கள் இருக்கக்கூடாது என்றெல்லாம் அரசாங்கம் உணர்ந்திருக்கின்றது.

கோரிக்கை இல்லாத மாநாடு என்று நம்மு டைய தம்பி தேவேந்திரன் குறிப்பிட்டாலும், உங்களுடைய அந்தக் கோரிக்கைகளை உங் களிடம் சொல்லியிருக்கிறார்களோ இல்லையோ, என்னிடத்திலே இரண்டு மாதங்களுக்கு முன் னாலேயே இந்த கோரிக்கைப் பட்டியலைத் தந்து இவைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டார்கள். அதன்படி ஆலய ஊழி யர்களுக்கு ஏற்கனவே நீண்ட காலமாகத் தாமதித்து வைக்கப்பட்டிருந்த கோரிக்கை கள் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று நீங்கள் சொன்னதற்குப் பின்னால்தான், இது நன்றி தெரிவிக்கின்ற மாநாடாக அமைந்தது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அந்த அளவுக்கு உங்களுக்கு இருக்கின்ற குறைகளை, சங்கடங் களைப் போக்கவேண்டும் என்பதில், உங்களு டைய தலைவர் அவர்கள் ஆழ்ந்த அக்கரை யோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை, நாங்கள் மிக நன்றாக அறிவோம்.

இங்கே நீங்கள் எங்களைப் பாராட்டுகின்றீர்கள் என்றாலும், உங்கள் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவிப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கின் றோம். நம்முடைய கலைஞர் அவர்கள் கோரிக் கை எதுவுமே இருக்கக்கூடாது என்று உள்ளத் திலே நினைத்தாலும், கோரிக்கை எதுவுமே நீங்கள் தராவிட்டாலும், அவர்களே உங்கள் கோரிக்கைகளை எல்லாம் நன்றாக உணர்ந்திருக் கிறார்கள். ஆதலால் அவர்களுடைய நன்றிப் பேச்சு உங்கள் குறைகளையெல்லாம் களைகின்ற வார்த்தைகளாக இருக்குமென்று நான் நிச்சய மாக நம்புகின்றேன். அந்த அளவுக்கு நான் மட்டுமேயன்றி, நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் உங்கள் குறைகளை அறிந்து, அவைகளைத் தீர்ப்பதில் மிகுந்த அக்கரை கொண்டு இருக்கின்றார்கள்.

நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர் கள், இந்து அறநிலையத்துறை பற்றிப்பேசுகின்ற எந்த நேரத்திலும், ஊழியர்களைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பதில்லை. தீவிரமான நிலச் சட்டம் தமிழ்நாட்டிலே கொண்டு வரப்பட்ட நேரத்திலேயும்கூட, ஆலயங்கள் அழியாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உறுதியான கருத்தினை நம்முடைய முதல்வர் அவர்கள் சட்ட சபையில் தெரிவித்தார்கள். மேலும் அவர்கள் தஞ்சை மாவட்டத்துக்கு வந்திருந்த போது, நீங்களெல்லாம் அவரைச் சந்தித்து, ஆலய ஊழியர்கள் நிலச்சட்டத்தால் பாதிக்கப் படுவார்கள், கோயில் சொத்துக்குத் தகுந்த பாதுகாப்பு வேண்டும் என்று எடுத்துச் சொன்ன நேரத்தில், ஆலய ஊழியர்களாகிய உங்களின் கோரிக்கையை நம்முடைய கலைஞர் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு, பல் லாயிரக்கணக்கான ஆலய ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள் ஆதலின், இந்த நிலச் சட்டத்தை எப்படி திருத்தவேண்டும் என்று நாங்கள் மறுபரிசிலனை செய்வோம் என்று அன்றைய பொதுக் கூட்டத்திலேயே அறி வித்துவிட்டு வந்தார்கள்.

உங்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்று, உங்களுடைய ஊதிய விகிதத்தை எல்லாம் கேட்டு, அவைகளை எதிர்காலத்திலே எவ்வாறு செய்து முடிக்கவேண்டுமோ அவ்வாறு செய்து முடிப்பதற்கு, நம்முடைய முதல்வர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இவ்வாறு ஏழை எளியவர்களினுடைய உள்ளங் களைப் புரிந்திருக்கின்ற காரணத்தினால்தான்

இந்த மாநாட்டிலே, பல்வேறு அலுவல்களுக்கு இடையிலும். அவர்கள் கலந்துகொண்டு, உங்களுக்கு நல்ல அறிவுரைகளையெல்லாம் வழங்க இருக்கின்றார்கள். அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி, எதிர்காலத்தில் நம்முடைய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் உலகத்துக்கெல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்கக் கூடிய, இந்தக்கோயில்களைக் காப்பாற்றக்கூடிய பொறுப்பினை, நீங்கள் வகித்துக் கொண்டிருக்கின்றீர்கள். அந்தப் பொறுப்பும் சிறப்பும் மேலும் மேலும் வளருகின்ற வகையில், மேலும் மேலும் அத்தனைபேரும் பார்த்துப் பாராட்டுகின்ற வகையில் அறநிலையத் துறைக்குப் புகழையும் பெருமையையும் நீங்கள் சேர்த்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு முடித்துக் கொள்கின்றேன்.

வணக்கம்.

# செய்திச் சுருக்கம்

(1) தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம்: இதன் இரண்டாவது மாநில மாநாடு, சென்னை மயிலை அருள்மிகு கற்பகாம்பாள் திருமணமண்டபத்தில், 3—9—73 அன்று மிகச் சிறப்புற நடைபெற்றது, அன்று காலை 9 மணியளவில் மயிலை அருள்மிகு கபாலீசுவரர் கோயிலில் இருந்து ஆலய ஊழியர்களின் ஊர்வலம் புறப்பட்டது. காலை 10 மணியளவில் மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில், தீர்மானங்கள் குறித்து ஆய்வு நிகழ்ந்தது. உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிச் சிறப்பித்தனர். அன்றுமாலை 4 மணியளவில் மாநிலமாநாடு துவங்கி நடைபெற்றது.

மாநிலத் தலைவர் திரு. இரா. தென்னன் அவர்கள் வரவேற்புரை நவின்றார். மாநிலப் பொதுச் செயலாளர் திரு. கோ. இராமகிருஷ்ணன் அவர்கள் சங்க அறிக்கை வாசித்தார். சங்கத்தின் சிறப்புத் தலைவர் திருமிகு தம்பி தேவேந்திரன் எம். எல். ஏ., அவர்கள் தலைமையுரை ஆற்றினர். அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மு. கண்ணப்பர் அவர்கள் மாநாட்டினைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினர்கள். அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ. பி.எல்., ஐ.ஏ.எஸ்., அவர்கள், இரண்டாவது மாநில மாநாட்டின் சிறப்பு மலரை வெளியிட்டார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார், எம்.எல்.சி. அவர்கள் ஆசியுரை வழங்கினர்கள். தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்த்துப் பேருரை நிகழ்த்தினர்கள்.

மேலவைத் துணைத்தலைவர் சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், குடிசைமாற்று வாரியத்தலைவர் திரு. இராம. அரங்கண்ணல், திரு. எம். கந்தசாமி, பி.ஏ.பி.எல்.எம்.எல்.ஏ, திரு. சி. காவேரிமணியம், பி.எஸ்ஸி, பி.எல். எம்.எல்.ஏ., திரு. பி. பத்மநாதன், எம்.எல்.ஏ., திரு. கோவை இராமநாதன், எம்.எல்.ஏ., திரு. கு. இராசவேலு, எம்.ஏ.பி.எல் (அறங்காவலர் குழுத்தலைவர், திருவரங்கம்), திரு. ஆரூர் டாக்டர் வீசயராகவன், (அறங்காவலர் குழுத்தலைவர், புலிவலம்), திரு. கே. இராஜா, பி.ஏ.பி.எல். துணை ஆணையர், திரு. காட்டூர் கே. வி. இராமையா (அறநிலைய ஆலோசனைக் குழு உறுப்பினர்). திரு. பி. சண்முகநாதன் (ஆலய நிர்வாக அதிகாரிகள் சங்கத்தலைவர்), திரு. எச். இராசரத்தினம் (அறங்காவலர், மயிலை), திரு. த. நாகராஜன் (நிர்வாக அதிகாரி உதவி ஆணையர் மயிலை), புதுக்கோட்டை சாயிமாதா சிவபிருந்தாதேவி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். மாநிலப் பொருளாளர் திரு. கே. சொக்கலிங்கம் அவர்கள் நன்றியுரை நவின்றார். மாநில மாநாடு சிறப்புற நடைபெற்று முடிவுற்றது.

ஆசிரியர்

O2m24, N59TK N73.15.12
148713

# "நாராயணா என்னும் நாமம்"

குலம்தரும் செல்வம் தந்திடும், அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும், நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்.
வலம்தரும், மற்றும் தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்,
நலம்தரும் சொல்லை நான்கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

—குலசேகராழ்வார்

திருமால் எண்ணில் தொல்புகழ் உடையவர். அவருக்குப் பேரும் ஓராயிரம். திருமாலின் அவதாரங்களையும் அவற்றின் சிறப்பினையும், திருமாலின் எண்ணில்லாத பல குண நலங்களையும் விளக்குவனவாகத், திருமாலுக்கு எத்தனையோ பல பெயர்கள் வழங்கும். அவைகள் அனைத்துமே அப்பெருமானுக்குரிய மந்திரங்களாகத் திகழும். அம்மந்திரங்களை வியாபகங்கள் என்றும், அவ்வியாபகங்கள் என்றும் பெரியோர்கள் குறிப்பிடுவர். வியாபக மந்திரங்களுள் நாராயண, வாசுதேவ, விட்டுணு மந்திரங்கள் மூன்றும், மற்றையவற்றினும் சிறந்தவை. இவை மூன்றினுள்ளும் நாராயண மந்திரமே ஒப்புயர்வற்ற தலைசிறந்த மந்திரமாகும். இதன் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல.

நாராயண மந்திரத்தைத் திருவெட்டெழுத்து, அட்டாக்கரம், திருமந்திரம், பெரிய திருமந்திரம், நலம்தரும் சொல் என்னும் பெயர்களால் பெரியோர்கள் வழங்குவர். இம்மந்திரம் எட்டெழுத்தாய், மூன்று பதமாய் அமைந்திருக்கும். இம் முப்பதங்களுள் முதலில் ஓம் என்பதும், இடையில் நம என்பதும், ஈற்றில் நாராயணாய என்பதும் முறையே இம் மந்திரத்தில் அமைந்திருக்கும். இம்முறையிலேயே இதனை ஓதுதல் வேண்டும்.

உயிர்கள் உய்வதற்கு உறுப்பாக அறிய வேண்டிய எல்லாப் பொருள்களையும், திருமந்திரம் தெளிவுற உணர்த்துகின்றது. உயிர்கள் அறிவதற்குரிய பொருள்கள் ஐந்து. அவற்றை அர்த்த பஞ்சகம் என்பர். அவை முறையே, இறையியல் உயிரியல் நெறியியல் தடையியல் பயனியல் என்பனவாகும். ஓம் என்னும் பிரணவம் உயிரியலையும், நம என்னும் பதம் நெறியியல் தடையியல் ஆகியவற்றையும், நாராயண பதம் இறையியலையும், ஆய என்னும் சொல் பயனியலையும் உணர்த்துகின்றன. ஓம் என்னும் பிரணவம், அ-உ-ம் என்னும் மூன்று ஒலிகளின் சேர்க்கையினால் அமைந்தது. அவற்றுள் அகரம் நாராயணன், மகரம் உயிர், உகரம் பிராட்டி ஆகியோரைக் குறித்து வரும்.

நம பதம், ந, ம: என்னும் இரண்டு எழுத்துக்களால் அமைந்துள்ளது. நம பதத்தால் அறியப்படும் பொருள், உயிர் தன்னைத்தான் காத்துக் கொள்ளுதலில் உரிமையுடையதன்று, நாராயணனே தனிப்பெருங் காப்பாளன் என்கின்ற உணர்ச்சியும்; யானே நீ என் உடைமையும் நீயே என்று அவன் வயப்பட்டிருத்தல் ஆகிய பாரதந்திர உணர்ச்சியும்; "களைவாய் துன்பம் களையாது ஒழிவாய்

களைகண் மற்றிலேன்'' என்று அவன் கருணையையே நோக்கி இருக்கின்ற நெறி உணர்ச்சியும்; "மற்றை நம் காமங்கள் மாற்று'' என்று தொண்டில் பற்றற்று வழுவிலா அடிமை செய்தலாகிய பயனுணர்ச்சியுமாம். அடியார்க்கு அடிமை செய்தலே, இறைவன்பாற் செய்யும் அடிமைக்கு எல்லை நிலமாய் இலங்கும் என்பது, நம என்னும் பதம் உணர்த்தும் நற்பெரும் பொருளாகும்.

நாராயண என்னும் பதத்தை வேற்றுமைத் தொகையாகவும், அன்மொழித் தொகையாகவும் கொண்டு, இருவகையில் பொருள் விரித்துரைப்பர். வேற்றுமைத் தொகையால் தேறும் பொருள், நாரங்களுக்கு அயநம் என்பதாம். நாரங்களாவன அழிவில் பொருள்கள். அயநம் என்பது இருப்பிடம் என்னும் பொருளது. இதனுல் அழிவில் பொருள்களுக்கு இருப்பிடமானவன் நாராயணன் என்பது கருத்து. அன்மொழித் தொகையால் கிடைக்கும் பொருள், அழிவில் பொருள்களைத் தனக்கு இருப்பிடமாக உடையவன் என்பதாம். பொருள்களுக்குத் தான் இருப்பிடமாதல் பரத்துவம் (மேன்மை), பொருள்களைத் தனக்கு இருப்பிடமாகக் கொள்ளுதல் சௌலப்பியம் (எளிமை), எல்லாப் பொருள்களினுள்ளும் விரவிக் கலந்து நிற்றல் அந்தர்யாமித்துவம் (கலந்துறையும் தன்மை). அறிவுடைப் பொருள் அறிவில் பொருள்களில், அறிவுடைய சேதனப் பொருள்களுக்கெல்லாம், உபாயம் உபேயம் என்னும் நெறியாகவும் பயனுகவும் நிற்றல் முதலியன, இறைவனுக்குரிய சிறந்த இயல்புகளாகும். பயன்களுள் உறவு முறையும் ஒன்றுதலால் இறைவனே எல்லா உறவாகவும் விளங்குகின்ருர். இவ்வாற்ருல் நாராயணன் என்னும் நலம்தருகின்ற சொல், அடியார்களின் தொண்டினை ஏற்றருள்கின்ற இறைவன் மேன்மை எளிமை கலந்துறைதல் நெறி பயன் உறவு என்னும் எல்லா நலங்களும் உடையவனுகத் திகழ்கின்ருன் என்பதை நன்கினிது உணர்த்தும்.

'ஆய' என்னும் பதத்தின் பொருள், "ஒழிவில் காலமெல்லாம் உடனுய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'' என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்ற வேண்டுகோளாகும்.

எம்பெருமானுக்கே உரியவனுன நான் எனக்கு உரியவன் ஆகாது ஒழிதல் வேண்டும். எல்லார்க்கும் தலைவனுன நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் நான் செய்தல் வேண்டும் என்பதே, ஓம் நமோ நாராயணுய என்னும் திருவெட்டெழுத்து மந்திரத்தின் திரண்ட சிறந்த பொருளாகும்.

திருமாலே புருடோத்தமன், நமக்கெல்லாம் நாயகன். உயிர்களாகிய நாமெல்லாம் அவனை நயந்து அடைய விரும்புகின்ற நாயகி நிலையில் உள்ளவர்கள் ஆவர். நாயகனுகிய அவன் நாயகியராகிய நம்மனேர்க்கு எட்டெழுத்துக்கள் எட்டிழையாய், மூன்று பதங்கள் மூன்றுசரடாய் அமைந்த திருமந்திரம் ஆகிய மங்கல நாணை அணிவித்துள்ளான். மகளிர் அணிந்துகொள்ளும் மங்கலநாண், தாம் தம் கணவனுக்கு அன்றி ஏனையோருக்கு உரியரல்லர் என்பதை உணர்த்தும். அங்ஙனமே ஆன்மாக்கள் அணியும் திருமந்திர மாலையாகிய மங்கலநாண், அவைகள் நாராயணன் ஒருவனுக்கே உரியனவாதலை உணர்த்தும். மகளிர் அணியும் மங்கலநாணுனது, கணவன், மனைவி (நாயகன், நாயகி) என்னும் ஓர் உறவை மட்டுமே உணர்த்தும். ஆனுல் ஆன்மாக்

கள் அணிதற்குரிய திருமந்திரமாகிய மங்கல நாணே, உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள ஒன்பது வகை உறவுகளைக் குறிக்கும்.

| உறவு | பொருள் |
|---|---|
| 1. தந்தை மகன்<br>2. காப்பவன் காக்கப்படுவது<br>3. தலைவன் அடிமை | அகப்பொருள் |
| 4. நாயகன் நாயகி | உகரப் பொருள் |
| 5. அறிபவன் அறியப்படுவது | மகரப் பொருள் |
| 6. உடையவன் உடைமை | நம: பதப் பொருள |
| 7. தாங்குவது தாங்கப் படுவது<br>8. உயிர் உடல் | நாராயண பதப்பொருள் |
| 9. நுகர்பவன், நுகர்பொருள் | ‘ ஆய ’ பதப்பொருள். |

இறைவன் உயிரோடு இந்த ஒன்பது வகையான உறவுகளை உடையவன் என்பதை, நலம்தரும் சொல்லாகிய திருவெட்டெழுத்து மந்திரம் உணர்த்துகிறது. இவ்வுறவுகளை அறிந்து கொள்ளுதல் உயிர்களின் பேற்றுக்கு இன்றியமையாதது. மனைவியைக் காத்தல் கணவனுக்குக் கடமையாதல் போல, இவ் உறவுகளை உடைய உயிர்களைக் காத்தருள் புரிதல் இறைவனுக்குரிய கடமை என்பதும் இதனால் வலியுறுத்தப் பெறுகின்றது.

இருள் தருமா ஞாலம் எனப்பெரியோர்களால் இழித்து உரைக்கப்பெறும் இவ்வுலகில் வாழ்கின்ற வரைக்கும், நமக்குப் பல வகை மயக்கங்கள் விளைந்து கொண்டே இருக்கும். (1) உடலே உயிர் என்னும் உணர்வு (2) உயிர் தன் உரிமை உடையதுஎன்னும் நினைவு. (3) உயிர் நாராயணனுக்குப் போலவே மற்றையோர்க்கும் அடிமைப் பட்டிருக்கலாம் என்னும் நினைவு. (4) நாமே நம்மைக் காத்துத் கொள்ளலாம் என்னும் எண்ணம் (5) அடியார்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்னும் நினைப்பு (6) உற்றார் சுற்றத்தினர்பால் கொள்ளும் பற்று. (7) இறைவனின் திருவுருவங்களை இவை கல் செம்பு என்பவற்றால் அமைந்தவை தாமே, இவைகள் என்ன பயனைத் தரும் என்னும் ஐயப்பாடு. (8) உலகவாழ்க்கையில் உயிர்கள் பால்தோன்றும் விருப்பு வெறுப்புகள். (9) இறைவன் அல்லாத பிறருக்கும் ஊழியம் செய்ய முற்படுதல். (10) அழிந்து போகும் செல்வம் முதலிய அற்பப் பொருள்களில் பற்றுக் கொள்ளுதல் என்னும் பலவகை மயக்கங்களால், நாம் அடையும் இன்னல்களுக்கு ஓர் எல்லையேயில்லை. இம் மயக்கங்களையெல்லாம் திருவெட்டெழுத்து மந்திரம் போக்கியருள்கின்றது.

(1) உடலே உயிர் என்னும் உணர்வு பிரணவத்தின் மகரப் பொருளை உணர்ந்தால் ஒழியும்.

(2) உயிர் தன்னுரிமை உடையதென்னும் நினைவு, பிரணவத்தின் அகரப் பொருளை நினைந்தால் நீங்கும்.

(3) பிறருக்கும் அடிமைப்பட்டிருக்கலாம் என்னும் மயக்கம், பிரணவத்தின் உகரப் பொருளை உணர்ந்தால் ஒழியும்.

(4) நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளுதல் இயலும் என்னும் மயக்கம், நம: பதப்பொருளை நினைந்தால் விலகும்.

(5) அடியார்களும் நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள்தான் என்னும் பிறழ்வுணர்ச்சி, நம: பதப் பொருளின் சிறப்பை உணர்ந்தால் ஒழியும்.

(6) உற்றார் சுற்றத்தார்பால் கொள்ளும் உலகியற் பற்றுக்கள் எல்லா உறவும்

இறைவனே என்னும் நாராயண பதப் பொருளை அறிந்தால் தெளியும்.

(7) தெய்வத் திருவுருவங்களைக் கல்லும் செம்புமே எனக் கருதும் மயக்கம், எல்லாப் பொருள்களினுள்ளும் கலந்து நிறைந்து உறைபவன் இறைவனே என உணர்த்தும் நாராயண பதப் பொருள் உணர்ச்சியால் தீரும்.

(8) உலகியல் வாழ்க்கையின் விருப்பு வெறுப்புகள், எல்லாப் பொருள்களும் இறைவனின் சார்புடையனவே என உணர்த்தும் நாராயண பதச் சிறப்பினைத் தெளிய நீங்கிப்போம்.

(9) இறைவனுக்கேயன்றி மக்களுக்கும் அடிமைப்பட்டு ஊழியம் செய்யலாம் என்னும் உணர்வு, உனக்கே நாம் ஆட்செய்வோம் என்னும் ஆய பதப்பொருளை அறிந்தால் விலகும்.

(10) அழிந்துபோகும் செல்வம் முதலிய அற்பமான பொருள்களில் நிகழும் ஆசை முதலியன, இறைவனுக்குத் தொண்டு இயற்றுதலே எல்லாவற்றினும் மேலாகச் சிறந்த பெருஞ் செல்வம் என்பதை உணர்த்தும் 'ஆய' பதப் பொருளை அறிதலால் தவிரும்.

முடிவுரை :

இங்ஙனம் நமக்கு ஏற்படும் மயக்கம் துயக்கமாகிய மாசுகளை எல்லாம் போக்கி, நன்மைகளையெல்லாம் தர வல்லது ஓம் நமோ நாராயணய என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய நலந் தரும் சொல்லேயாகும். இதனைத் தக்க நல்ல ஞானசிரியரை அடைந்து அவர் பால் முறைப்படி உபதேசம் பெற்றுப் போற்றி, இம்மை மறுமை நலங்களையெல்லாம் எய்த முயலுவோமாக!

—ஆசிரியர்

## ஒரு வேண்டுகோள்

தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களில் உள்ள கோயில்கள் பெரும்பாலனவற்றில், அண்மைக் காலத்தில் அவ்வத் தலத்துக்குரிய தேவாரத் திருப்பதிகங்கள், சலவைக்கல்லில் பொறிக்கப்பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. எனினும் இன்னும் ஒருசில கோயில்களில், அங்ஙனம் திருப்பதிகங்கள் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்படாமல் இருத்தல் கூடும். அதற்குரிய பொருள் வசதி முதலியன, அக்கோயில்களில் இல்லாமல் இருக்கலாம். எனவே, தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களில், அவ்வத் தலத்துக்குரிய திருப்பதிகங்கள் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்படாமல் இன்னும் இருந்தால், பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம். அவர்கள் தம் சொந்தச் செலவில், தேவாரத் திருப்பதிகங்களைச் சலவைக் கல்லில் பொறித்துத் தர விரும்பி இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். எனவே, அவ்வக் கோயில்களின் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரிகளும், பின்வரும் முகவரிக்குத் தொடர்புகொள்ள வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

திரு. லா. ஆ. பரமன் செட்டியார்,
பன்னிரு திருமுறை மன்றம்.
நந்திகோயில் தெரு, திருச்சி—2

—ஆசிரியர்

# பிரபத்தி நெறியின் பெருமை

(ஆசிரியர்)

உலகிற் பிறந்து வாழ்கின்ற மக்கள் அனைவரும் இன்றியமையாமல் அறிந்து கொள்ளவேண்டிய பொருள்கள் மூன்று. அவை தத்துவம் இதம் புருடார்த்தம் எனப்படும். தத்துவம் என்பது அறிவுடைப்பொருள், அறிவில் பொருள், கடவுள் என்னும் முப் பொருள்களைப் பற்றிய உண்மைகளை உணர்ந்து கொள்ளுதல். இவற்றை முறையே சேதனம் அசேதனம் ஈசுவரன் என்றும், தத்துவத்திரயம் என்றும் வழங்குவர். சேதனம் என்பது உயிர். அசேதனம் என்பது உலகம். இவ்விரு பொருள் களையும் உடலாகக்கொண்டு நீக்கமற நிறைந்து நிற்பவனாகவும், எல்லோரையும் எல்லாவற்றை யும் இயக்குபவனாகவும், காப்பவனாகவும் உள்ள பரம்பொருளே ஈசுவரன் எனப்படும். இத்தகைய பரம்பொருளாகிய இறைவனை அடைதற் குரிய நெறி அல்லது உபாயமே இதம் எனப்படும். இறைவனை அடைந்த பின்பு பெறும் பேறு எதுவோ அதுவே, புருடார்த்தம் என்னும் உறுதிப் பொருளாகும். திருமாலே பரம்பொருள் என்றும், பிரபத்தியே திருமாலை அடைவதற்குரிய நெறி என்றும், ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே சிறந்த பேறு என்றும், தெளிவாக அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது என, வைணவப் பெரி யோர்கள் கூறுவர்.

இறைவனை அடைதற்குரிய வழிகள் நான்கு என்று சமய நூல்கள் கூறும். சிறப்பாக, கண்ணபிரான் அருளிச் செய்த பகவத்கீதை என்னும் நூலுள் நான்குவகையான யோக நெறி கள் கூறப்பெறுகின்றன. (1) கருமயோகம் (2) ஞானயோகம் (3) பக்தியோகம் (4) பிரபத்தி யோகம். தவம் வேள்வி முதலியவற்றை, அவற்றின் பயன் கிடைக்கும் வரையில் மிகுந்த அன்புடன் இடையறாது முறைப்படி செய்து வருதல் கருமயோகம். பொறி புலன்களை வென்று மனத் தூய்மையுடனும், ஒருமைப் பாட்டுடனும் தியானத்தில் ஊன்றியிருத்தல் ஞானயோகம். இறைவன்பால் அயரா அன்பு கொண்டு தியானம் பூசனை தோத்திரம் வழிபாடு முதலியவற்றில் அழுந்தி நிற்றல் பக்தியோகம். 'நான் ஒன்றையும் கடைப்பிடித் தொழுக வல்லமையில்லாதவன்; என்னைக் காத்தருள வேண்டிய பொறுப்பு நின்னையே சேரும். ஆதலால் உன் அருளை எதிர்பார்த்திருப்பதைத் தவிர என்னால் ஆவது ஒன்றுமில்லை' என்னும் திண்மையான உள்ளத்துடன் இறைவனுடைய திருவடித் தாமரையிலேயே தன்னை அடைக் கலமாக ஒப்படைத்து நிற்றல் பிரபத்தியோகம் ஆகும். இதுவே சரணாகதி என்றும் வழங்கப் பெறும். வைணவப் பெருஞ் சான்றோர்களான ஆழ்வார்கள் ஆசாரியர்கள் யாவரும், வேறு உபாயங்களிலோ நெறிகளிலோ புகாமல் இந்தப் பிரபத்தி நெறியிலேயே மிகவும் ஈடு பட்டு நின்றார்கள். அதுபற்றியே அவர்களைப் பிரபந்நர் என்றும், பிரபந்ந குலம் என்றும், வைணவ உலகம் போற்றி வருகின்றது.

இந்தப் பிரபத்தியானது கை கால் முதலிய உறுப்புக்களினால் செய்யப்படுவதன்று. உள்ளத்தில் கடைப்பிடிக்கும் ஒருவகையான தெளிந்த உறுதியே பிரபத்தி எனப்படும். "இறைவனே என் பேற்றுக்கு நீயே துணையாக வேண்டும்" என்கிற நினைவே, பிரபத்தி அல்லது சரணாகதி எனப்படும். தன்னுடைய விருப்பம் வேறு எந்த உபாயத்தினாலும் நிறை வேறாது என்று தெரிந்து, உறுதியான நம்பிக்கை யுடன் இறைவன் ஒருவனையே பற்றுக் கோடாகக் கொள்வதுதான் பிரபத்தி ஆகும்' மேற் கூறப்பெற்ற கருமயோகம் ஞானயோகம் பக்தியோகம் என்னும் உபாயங்களைக் கடைப் பிடிக்கத் திறமையற்றவர்கள்தான், இந்தப் பிரபத்தி நெறியைக் கைக்கொள்ளவேண்டும் என்பது சிலருடைய கொள்கை. அங்ஙனம் கொள்ளாமல், கருமயோகம் முதலியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகவல்ல ஆற்றல் வாய்ந் தவர்களாக இருந்தாலும், அவைகளையெல்லாம் மேற்கொள்ளாமல், பிரபத்தி நெறியில்தான்

ஈடுபட வேண்டும், அதுதான் சாலச் சிறந்த நெறி என்பது வைணப் பெருஞ்சான்ருேர்களின் தெளிந்த முடிவு ஆகும். இப் பிரபத்தி நெறியையே கடைப்பிடித்து ஒழுகியமையால் தான், வைணவப் பெருஞ்சான்ருேர்களான, ஆழ்வார்களும் ஆசார்யர்களும் பிரபந்நர்கள் என்று பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப் பெறுகின்றனர்.

பிரபத்தி நெறிக்குத் தேசநியமம் காலநியமம் அதிகாரிநியமம் பிரகாரநியமம் பலநியமம் முதலிய ஒரு நியமமும் இல்லை. புண்ணியத் தலத்தில் செய்யவேண்டும். வேறு இடத்தில் செய்தல் ஆகாது என்பது தேசநியமம். இள வேனில் முதலிய காலங்களிலே செய்ய வேண்டும், மற்ற காலங்களில் செய்தல் ஆகாது என்பது காலநியமம். இன்னின்ன தகுதியுடை யோரே செய்தற்குரியர், பிறர் உரியர் அல்லர் என்பது அதிகாரி நியமம். நீராடிய பின்னரும் கைகால் முதலியன கழுவிய பின்னருமே செய்தற்குரியது, இங்ஙனமன்றிச் செய்த லாகாது, என்பது பிரகார நியமம். இன்ன பயனைத்தான் இது தரும், வேறு பயனைத் தர மாட்டாது என்பது பல நியமம். இத்தகைய நியமக் கட்டுப்பாடுகளெல்லாம் வேள்வி முதலிய கடமைகளைச் செய்வதற்கு ஏற் பட்டுள்ளன. ஆனல் பிரபத்தி நெறிக்கு இந்த நியமங்களில் எதுவும் விதிக்கப்படவில்லை.

விபீடணன் கடற்கரையிலே இராம பிரான்பால் அடைக்கலம் புகப் போந்தான். அப்போது "இவன் இடமல்லாத இடத்திலே, காலமல்லாத காலத்திலே வந்திருக்கின்ருன், ஆதலால் இவன் ஐயப்படுதற்கு உரியவன்" என்று, வானரசேனைத் தலைவர்கள் பலர் இராம பிரானிடம் கூறினர். அப்போது, அவர்களின் கூற்றை மறுத்து, ஆஞ்சநேயன் "தூய கருத்தினனுகிய விபீடணன் அடைக்கலம் என்று கூறி வந்த இடத்திலும், காலத்திலும் நாம் குறை காண்டல் கூடாது. அவன் அடைக்கலமாக வந்து சேர்ந்ததுவே நல்ல இடம் நல்லகாலமும் ஆகும்" என்று கூறினுன். இதனல் பிரபத்தி நெறிக்குத் தேச நியமம் காலநியமம் இல்லை என்பதைத் தெளியலாம்.

திரௌபதியானவள், துச்சாதனனுல் பற்றி இழுக்கப்பட்டுச் சபையில் கொணரப் பெற்ற போது, அவள் பூப்பெய்திய நிலையில் இருந் தாள். தூய்மையற்ற அந்நிலையிலேயே அவள் 'கோவிந்தனே, தாமரைக் கண்ணனே! நான் உன்னை அடைக்கலம் புகுகின்றேன். என்னைக் காப்பாற்றுக" என்று அரற்றிப் புலம்பிக் கண்ணபிரானை நோக்கிப் பிரபத்தி செய்தாள். நீராடித் தூய்மையுற்று, அதன்பின் அவள் கோவிந்தா என்று கூவி அடைக்கலம் புக நினைத்திலள். அதற்காகக் கண்ணபிரானும் அவளைப் புறக்கணித்திலன். அப்போதே அவளுக்கு அருள்செய்து அவளைக் காப்பாற்றி ஞன். இதனுல் பிரபத்தி நெறியைக் கடைப் பிடித்து ஒழுகத் தலைப்படுபவர்களுக்கு அதிகாரி நியமமும், பிரகார நியமமும் பிறவும் இல்லை என்பது புலப்படுதல் காணலாம்.

அருச்சுனன், கண்ணபிரானிடத்தில் கொடி யோர் பலர் சூழநின்ற போர்க்களத்திலேயே, கீதோபதேசம் கேட்டு உணர்ந்தான். இதனு லும் பிரபத்திநெறிக்கு இடமும் நேரமும் சூழ்நிலையுமாகிய நியமங்கள் எதுவும் இல்லை என்பது, தெளியலாம். இவற்ருல் தெளியப் படுவது யாதெனில், பிரபத்தி நெறியைப் பற்றிக் கேட்டுணரும் பொழுதும், கடைப்பிடித் தொழு கும் போதும், விபீடணனும் திரௌபதியும் அருச்சுனனும் தத்தம் நிலையிலேயே தகுதியும் உரிமையும் பெற்ருற்போல, பிரபத்தி நெறியில் ஈடுபட முற்படுங்கால், தூய்மையில்லாதார் தூய்மை தேடவேண்டுவதில்லை; காலமும் இடமும் சூழ்நிலையும் கருதவேண்டுவதில்லை; அந்நெறியில் விருப்பமும் பற்றும் உறுதியும் ஏற்பட்டால், அதுவே எல்லாத் தகுதிகளையும் உரிமைகளையும் வழங்க வல்லது என்பதாகும்.

இனி, இப்பிரபத்தி நெறிக்கு இன்னுர்தான் உரியர் என்ற அதிகாரி நியமமும் இல்லை. ஆடவ ரான பஞ்சபாண்டவர்களும், பெண்மகள் ஆன திரௌபதியும். செய்யத்தகாத பெருங் குற்றத் தைச் செய்த காகாசுரனும், கொடிய நஞ்சை உடைய காளியன் என்னும் அரவும், விலங் காகப் பிறந்திருந்தாலும் அன்பில் மிக்க கசேந் திரனும், இராக்கதனுகிய விபீடணனும், இராம பிரானும் இளையபெருமாளும் முதலியவர்கள் எல்லோரும், அடைக்கலம் புகுந்து சரணுகதி என்னும் இப்பிரபத்தி நெறியில் ஒழுகினர். ஆதலால் இதற்கு இன்னுர்தான் உரியவர் என்னும் நியமம் இல்லை. விருப்பமுடையார் எல்லோரும் இந்நெறிக்கு உரியவரே யாவர்

மேற்கூறிய பஞ்சபாண்டவர் முதலானோர் அனைவரும், தாம்தாம் விரும்பிய பயனை அடைந்ததனால், பிரபத்தி நெறிக்குப் பலநியமம் என்பதும் இல்லை எனத் தெளியலாம். விரும்பிய எல்லாப் பயன்களையும் தரவல்லது இந்தச் சிறந்த பிரபத்தி நெறி.

இங்ஙனம் பிரபத்தி நெறிக்கு நியமங்கள் ஆகியகட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லையாயினும், பொருள் நியமம் என்பது ஒன்று மட்டும் உண்டு. அஃதாவது, குறைவிலா நிறைவாய் விளங்கும் முழுமுதற் பரம்பொருள் ஒருவன் திறத்திலேயே, இப்பிரபத்தி நெறியைக் கடைப்பிடித்து ஒழுகி, அடைக்கலம் புகுதல் வேண்டும். இறைவன் அல்லாத பிறர்பால் பிரபத்தி செய்தல் ஆகாது என்கின்ற பொருள் நியமம் ஒன்று மட்டுமே, பிரபத்தி நெறிக்கு உண்டு.


இத்துணைப் பெருஞ் சிறப்புடைய பிரபத்தி நெறியையே, ஒரு தலைக்கீடாகக் கொண்டு, இறைவன் உயிர்களைக் காத்தருள்கின்றான். ஆதலின், நம்மைக் காத்தருள வல்லவன் என்கிற திடமான நம்பிக்கை கொள்ளுதலே, நம் ஒவ்வொருவர்க்கும் தஞ்சமும், உய்யும் நெறியும் ஆகும்.

" அகல கில்லேன் இறையும் என்
றலர்மேல் மங்கை யுறைமார்பா,
நிகரில் புகழாய! உலகமூன்
றுடையாய்! என்னை ஆள்வானே,
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே,
புகலொன் றில்லா அடியேனுன்
அடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே.

—நம்மாழ்வார்

படைக்கல மாக உன் நாமத்து
எழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்;
இடைக்கலம் அல்லேன் ; எழுபிறப்பும்
உனக்கு ஆட் செய்கின்றேன் ;
துடைக்கினும் போகேன் ; தொழுது
வணங்கித் தூநீறு அணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம்பலத்து அரனே

—நாவுக்கரசர்



சென்னை சைதாப்பேட்டை அருள்மிகு பிரசன்ன வேங்கட நரசிம்மசுவாமி கோயிலில் நடைபெற்ற ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கே. வி. வரதன், அவர்களுக்கு ஆணையர் அவர்கள் சுழல் கோப்பை வழங்குகிறார்.

# சிறந்ததொரு முருகன் துதிச்செய்யுள்

### முன்னுரை :

தமிழ்நூற் பயிற்சி ஓரளவாயினும் உடையவர்கள் அனைவரும், யாப்பருங்கலக் காரிகை என்னும் இலக்கண நூலைப்பற்றி அறிந்திருப்பர். அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் தமிழ்ச் செய்யுட்களுக்கு உரிய இலக்கணங்களை விளக்குவது. இந்நூல்! 'காரிகை கற்றுக் கவிபாடுதலில் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' எனவும், 'காடும் செடியும் அன்றே தமிழ்க் காரிகை கற்றதுவே' எனவும் பிறவாறும் வழங்கும் பழமொழிகள், யாப்பருங்கலக்காரிகை என்னும் செய்யுள் இலக்கண நூலின் சிறப்பினையும், தமிழ் மக்களிடையே அது மிகவும் போற்றி மதித்துப் பயிலப் பெற்று வரும் மாட்சிமையினையும், நன்கினிது உணர்த்தும்.

### குணசாகரர் :

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் அமிதசாகரர் என்பராவர். அவர்தம் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு; அஃதாவது இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே என்பர். இந்நூலுக்கு உரை எழுதியவர் குணசாகரர் என்பவர். இவர் அமிதசாகரரின் மாணவராக, அவர்தம் சமகாலத்தவராக வாழ்ந்திருந்தவர் எனக்கொள்ளுதல் கூடும். இக்குணசாகரர் தாம் வரைந்த யாப்பருங்கலக்காரிகை உரையின் இறுதியில், ஒழிபியல் என்னும் பகுதியின் முடிவில், செய்யுட்களில் வருதற்குரியன அல்லாத எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குறறம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்பனவற்றைப் பற்றி விளக்குகின்றார். விளக்கி விட்டு, அக்குற்றங்கள் ஒன்றும் இல்லாத சிறந்த பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றார்.

> "தாமரை புரையும் காமர் சேவடிப்
> பவழத் தன்ன மேனித் திகழ்ஒளிக்
> குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
> நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
> சேவலங் கொடியோன் காப்ப
> ஏம வைகல் எய்தின்றால் உலகே"

என வரும் அழகிய பாடல், எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுட்கு மேற்கோளாகக் குணசாகரரால் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது.

### முருகன்துதி :

இப்பாடல், குறுந்தொகை என்னும் சங்க நூலின் கடவுள் வாழ்த்துப்பாடல் ஆகப், பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னும் பழம் பெரும் புலவராற் பாடப்பெற்றதாகும். இப்பாடல் தமிழ்க் கடவுள் ஆகிய முருகனைப்பற்றிய துதியாக அமைந்திருக்கின்றது. முருகனைப் பற்றிய இத்துதிப்பாடல், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படும் முனிவர் ஆகிய குணசாகரரால், எல்லாக் குற்றமும் தீர்ந்த இனிய சிறந்த செய்யுளுக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெற்றிருப்பது, இப்பாடலின் இணையற்ற மாட்சிமையினை எழிலுற விளக்கும் சான்றாக அமையும். ஆதலின் இச்சிறந்த பாடலின் பொருள் நலத்தினை, ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது காண்போம்.

### பாடலின் பொருள் :

"தாமரை மலரைப் போன்ற அழகிய சிவந்த திருவடிகளையும், பவழத்தை ஒத்த திருமேனியினையும், விளங்குகின்ற ஒளி மிக்க குன்றிமணியைப் போன்ற உடையினையும், கிரவுஞ்சம் என்னும் மலையினது நடுவிடம் பிளக்கும்படி செலுத்திய அழகிய ஒளி மிகுந்த நீண்ட வேல் ஆகிய படையினையும், சேவல் ஆகிய அழகிய கொடியினையும் உடைய முருகப்பெருமான் காப்பாற்றுவதனால், இவ்வுலகமானது இன்பமயமான நாட்களை எய்தி வருகின்றது. ஆதலின் உயிர்களுக்கு இடையூறு இல்லை." என்பது, இப்பாடலின் திரண்ட பொருள். முருகப் பெருமானின் இத்தகைய திருவுருவத்தினைத் தியானம் செய்க, செய்யின் எல்லா நலமும் எய்தலாம் என்பது, இதன் கருத்து.

(1) இப்பாடல் நம்மனோர் பலகாலும் எண்ணிச் சுவைத்து மகிழ்தற்கு ஏற்றவகையில் மிகவும் சுருக்கமாக, எளிய இனிய சொற்களால் இயன்றிருப்பது, வியந்து மகிழ்தற்குரியது.

முருகனுக்கும் ஆறு என்னும் எண்ணுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. முருகனின் சிறந்த தலங்கள் ஆறு; முகங்கள் ஆறு; மந்திர எழுத்துக்களும் ஆறு. ஆதலின் இப்பாடலும் ஆறு வரிகளில் அமைந்திருப்பது, ஒரு பொருத்த மாகக் காணப்படுகின்றது

(2) மேலும், இப்பாடலின்கண் முருகனுடைய திருவடி, நிறம், ஒளி, ஆடை, வேல், சேவற் கொடி என்னும் ஆறு பொருள்களைப் பற்றியே ஆசிரியர் குறிப்பிட்டுப் புனைந்துரைத்திருத்தலும், கருதற்பாலதாக உள்ளது.

(3) முருகனின் சிவந்த நிறமும், அழகிய தோற்றமும், மணமுடைமை முதலிய தெய்வத் தன்மைகளும், சரவணப் பூம்பொய்கையில் பதுமப் பாயலில் அப்பெருமான் தோன்றியருளிய சிறப்பும் ஆகியவற்றை நினைத்தொறும் நமக்குத் தாமரை மலரின் நினைவே, முதற்கண் முந்துற்றுக் கிளர்தலின், அவ்வியல்புக்கு ஏற்ப, இப் பாடலும் தாமரை எனத் தொடங்குதல் தகுதிப்பாடு மிக்கதாகத் திகழ்கின்றது. 'தாமரை' என்பது ஒரு மங்கலமொழியாதலும், ஈண்டு நாம் மனங் கொள்ளத்தக்கது.

(4) தாமரை மலர், முருகனின் திருமுகம் முதலிய பிற உறுப்புகளுக்கும் ஒப்புமையுடைய தாயினும், முருகனின் திருவடியையே முதற்கண் நினைவுகூர்ந்து, அதற்கு உவமையாக உரைக்கப் பெற்றது. கடவுளரைப் பாடுங்கால் அவர்தம் திருவடிகளை நினைவு கூர்வதே கவிஞர்களின் இயல்பான பண்பு. இதனைத் திருவள்ளுவர் முதலாகிய எல்லாச் சான்றோர் பாடல்களிலும் காணலாம். 'நின்னிற் சிறந்த நின் தாளிணையவை' எனப் பரிபாடல் பாடுதற் கேற்பக் கடவுளைக் காட்டிலும், அவர்தம் திருவடிகளே மிகவும் சிறந்தவை என்று கொண்டு, சான்றோர் அனைவரும் பாடுதலின், இப்பாடலிலும் அம்மரபு செவ்விதின் அமைந்தது.

(5) குறுந்தொகை என்னும் சங்கநூல், நானிலத்து ஐந்திணை ஒழுக்கமும் பற்றி நுதலி எழுந்ததாகலின், அப்பொருளையே இப்பாடல் கருக்கொண்டு திகழ்கின்றது. 'தாமரை புரையும் காமர் சேவடி' என்றதனால் மருதநிலத்தின் கருப்பொருள் ஆகிய தாமரையும், 'பவழத்தன்ன மேனி' என்றதனால் நெய்தல் நிலத்துக் கருப்பொருள் ஆகிய பவழமும், 'குன்றி ஏய்க்கும் உடுக்கை' என்றதனால் முல்லைக்கு உரியதாகக் கருதப்பெறும் குன்றிமணிக் கொடியும், 'குன்றின் நெஞ்சுபக' என்றதனால் குறிஞ்சிக்குரிய மலையும், ஆக நானிலமும் குறிக்கப்பட்டன.

(6) பாலைக்கெனத் தனியே நிலம் இல்லாமையாலும், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்தே பாலை என்று படிவம் கொள்ளுகின்றன. ஆதலாலும், அம்முறையில் குறிப்பாகப் பாலை நிலமும் ஈண்டு உணர்த்தப்பட்டது. முல்லைக் குரிய குன்றியையும், குறிஞ்சிக்குரிய குன்றையும் ஒரே வரியில் இயையுமாறு வைத்ததனால், பாலை நிலம் இங்குச் சுட்டப்பெற்றது எனக் கொள்ளலாம்.

(7) மருதம் நெய்தல் முல்லை ஆகிய ஏனை நிலங்களைக் கருப்பொருள்களாலும், குறிஞ்சியை மலையாகிய முதற்பொருளாலும் சுட்டியமை, 'சேயோன் மேய மைவரை யுலகம்' எனப்படும் குறிஞ்சி நிலவுரிமை முருகனுக்கே யுரியதாதலை யுணர்த்துதற்கு ஆகும்.

(8) முருகன் இளமையும், அழகும் வீரமும் உடையவன் ஆதலின் 'தாமரை புரையும் காமர் சேவடி' என்று இளமையினையும், 'பவழத் தன்ன மேனித் திகழ்ஒளி' என்று அழகினையும், 'குன்றின் நெஞ்சுபக எறிந்த' என்று வீரத் தினையும், ஆசிரியர்விதந்தெடுத்துப் புகழ்ந்தார்.

(9) மேலும், தம்நிகர் இல்லாத தலைவர்க்கு அளியும் தெறலும் என்னும் இரண்டு குணங் கள் இன்றியமையாதன. முருகன் தன்நிகர் இல்லாத தனிப்பெருந் தலைவன், ஆதலின் அப்பெருமானுக்கும் இவ்விரு குணங்களும் உண்டு. எனவே 'சேவலங் கொடியோன் காப்ப' என்றதனால் அளியும், 'குன்றின் நெஞ்சு பக' என்றதனால் தெறலும் சுட்டப்பெற்றது.

(10) இப்பாடலில் மருதநிலத்துக்கருப்பொருள் (தாமரை) முதலிலும், குறிஞ்சி நிலத்து முதற் பொருள் (மலை) ஈற்றிலும் அமைந்ததனால், முறையே அவற்றிற்குரிய ஊடலும் கூடலும் ஆகிய உரிப்பொருள்கள் 'ஊடுதல் காமத்திற் கின்பம், அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்' என்னும் முதுமொழியின்படி நிகழும் இன்பத் தின் இயல்பு உணர்த்தியவாறுயிற்று.

(11) 'சேவலங் கொடியோன்' என்பது சேவலையேயன்றி, மயிலையும் உணர்த்திபதாகக் கொள்ளலாம். முருகனுக்கு மயிற்கொடியும் உண்டு என்று, 'பல்பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ' எனவரும் திருமுருகாற்றுப்படை வரியால் (122) உணரலாம். ஆண்மயிலுக்குச் சேவல் எனப் பெயர் வழங்குதல் மரபு அன்று ஆயினும்,

"சேவற் பெயர்க்கொடை
சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி
மயிலலங் கடையே"

எனவரும்தொல்காப்பிய நூற்பாவின் உரையில், 'செவ்வேள் ஊர்ந்த மயிலுக்காயின் அதுவும் நேரவும்படும்' எனவரும் பேராசிரியர் விளக்கத்தினுல், ஈண்டுச் 'சேவலங் கொடியோன்' என்புழிச் சேவல் மயிலைக் குறிப்பதாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

முடிவுரை :

இங்ஙனம் பற்பல நுண்பொருள்கள் பொருந்திய இச்சிறந்த இனிய செய்யுள், குணசாகரர் குறிப்பிட்டு வியந்தவாறு, எல்லாக் குற்றமும் தீர்ந்த சிறந்த நல்ல செய்யுளே என்பதில் ஐயமில்லை. சிறந்த இந்தச் செய்யுளைக் கொண்டு, முருகனைப் பலகாலும் துதிசெய்து தியானித்து, முருகன் அருளைப் பெற்று உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்



பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில், விருது வழங்கப்பெற்ற சிறந்த கலைஞர் பெருமக்கள் (2—9—73)

# தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு

(முற்றொடர்ச்சி)

**திருநகரி :**

இது சீர்காழிக்குத் தென்கிழக்கே 27 கி.மீ. தொலைவில் உள்ள சிறந்த திருமால் தலம். இங்குள்ள பெருமானின் பெயர் அருள்மிகு கலியாணரங்கநாத சுவாமி. இது 3346 மக்கள் தொகையுடைய ஓர் ஊராட்சியாகும். இதற்கு உந்தூர்தி வசதிகள் உள்ளன. கோயிலின் நிலப்பரப்பு 3·4 ஏக்கர். நான்கு பிராகாரங்களும், நான்கு சந்நிதிகளும் உள்ளன. இரண்டு இராசகோபுரங்கள் : ஒன்று ஏழு நிலைகளையுடையது. மற்றொன்று ஐந்து நிலைகளை உடையது. மற்றும் ஓர் உட்கோபுரம் மூன்று நிலைகளையுடையதாக இருக்கின்றது. கலியாணரங்கநாதர், திருமகள் நிலமகள் ஆகிய தேவியருடன் நின்ற கோலத்தில் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார். திருமங்கையாழ்வார் அமிர்தவல்லித்தாயார் குமுதவல்லித்தாயார் ஆஞ்சநேயர் திருவுருவங்களும், மற்றும் பலப்பல வெண்கலப் படிமங்கள் பஞ்சலோகப் படிமங்கள் ஆகியவைகளும் உள்ளன.

கோயில் எப்பொழுது தோன்றியது என்று திட்டவட்டமாக வரையறுத்துச் சொல்ல முடியாவிட்டாலும், இதன்கண் உள்ள கல்வெட்டுக்கள் கோயிலின் பழமையை அறிவிக்கின்றன. உருத்திரபகவான் நாரதமுனிவருக்குக் கூறிய கருட புராணததில் இத்தலத்தின் வரலாறு கூறப்பெற்றுள்ளது. இராமாநுசர் என்னும் வைணவப்பெருஞ் சான்றோர் இக்கோயிலுக்குப் போந்து திருமங்கையாழ்வாரை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. பெருமாள் முதலில் கிழக்கு நோக்கியிருந்ததாகவும், திருமங்கையாழ்வாரின் வேண்டுகோளுக்கிணங்கிப் பின்னர் மேற்கு நோக்கி இருப்பதாகவும் தலவரலாறு கூறுகின்றது. பரம்பரை உரிமையில்லாத அர்ச்சகர்களால் வைகானச ஆகமப்படி நாடோறும் மூன்றுகால பூசை நடைபெறுகிறது. ரூபா 97.000 மதிப்புள்ள பழமையான பொன் வெள்ளி அணிகலங்கள் உள்ளன 95·90 ஏக்கர் நன்செய் நிலங்களும், 46.64 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ள இக்கோயிலுக்கு அவற்றின் மூலம் ரூபா 25,000/- குத்தகை வருவாய் கிடைக்கின்றது. பங்குனி மாதத்தில் 10 நாட்களும், பெருமாளுக்கும் தைமாதத்துக் கிருத்திகையில் திருமங்கையாழ்வாருக்கும் விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களில் சுமார் 20,000 மக்கள் கூடுகின்றனர். மூன்று அறங்காவலர்களும், ஒரு செயல் அலுவலரும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால் நியமிக்கப் பெற்று இக்கோயிலைக் கண்காணித்து வருகின்றனர்.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் காணப் படுகின்றன. அவற்றுள் மிகவும் பழமையானது, விசயநகர அரசராகிய விருபண்ண உடையார் கல்வெட்டாகும். அது சக 1308 (கி.பி. 1386) ஆண்டைச் சேர்ந்தது. கோயிலுக்குச் செய்யப் பெற்ற சர்வமானிய நன்கொடைகள் அதில் பதிவு செய்யப்பெற்றுள்ளன. கிருஷ்ணதேவ ராயரின் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. அது சக 1439 (கி.பி. 1517) ஆண்டைச் சேர்ந்தது. கிருஷ்ணதேவராயரின் வெற்றிகளும், சோழ நாட்டின் சைவ-வைணவக் கோயில்களுக்கு அவர் வரிகளைத் தள்ளுபடி செய்த விவரங்களும் பற்றி, அக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது இதனால் திருநகரிக் கோயிலுக்கும் கிருஷ்ண தேவராயர் பல நன்கொடைகளை வழங்கினர். என்று தெரிகின்றது. வேதபாராயணம் நிகழ்வதற்கும், பசுமடம் நடத்துவதற்கும், மற்றும் நிவேதனங்கள் படைத்தற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதை இக்கல்வெட்டுக்களினால் அறிகின்றோம். காவிரி கொள்ளிடம் ஆகியவற்

றிற்கு இடைப்பட்ட இராசாதிராச வள நாட்டைச்சேர்ந்த இத்தலத்திற்கு விக்னேசுவர நல்லூர் என்ற ஒரு பெயரும் வழங்கி வந்த தாகத் தெரிகின்றது. இத்தலத்துப் பெருமாளின் பெயர் உலகுய்ய வீற்றிருந்தருளிய நாயனுர், வயலாலி மணவாளர் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

## திருநாங்கூர் :

இது சீர்காழியின் தென்கிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள தலம். இங்குள்ள மக்கள் தொகை 3153. சீர்காழியினின்று உந்துார்தி வசதிகள் உள்ளன. 65 சென்ட் நிலப்பரப்புள்ள இத்தலத்துக் கோயில் மிகவும் அழகுற அமைந்திருக்கின்றது. அழகிய சுதைவேலை செய்யப்பெற்றுள்ள மூன்று விமானங்களும், மூன்று சந்நிதிகளும் இரண்டு பிராகாரங்களும் இருக்கின்றன. சுவாமி பெயர் நாராயணப் பெருமாள். நரநாராயணர் என்றும் மக்கள் வழங்குகின்றனர். பரம்பரை உரிமையில்லாத வைணவ அருச்சகர்களால் பாஞ்சராத்திர ஆகமப்படி ஐந்துகால பூசைகள் நடைபெறுகின்றன. ரூபா 2,000/- மதிப்புள்ள அணிகலன்கள் உள்ளன. 25.38 ஏக்கர் நன்செய் நிலங்களும், 17.89 ஏக்கர் புன்செய் நிலங்களும் கோயிலுக்கு உள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூபா 6,500/- குத்தகையாகக் கிடைக்கிறது. மரத்தால் செய்யப்பெற்ற தேரும், ஒரு பல்லக்கும்; கருடன் யானை ஆஞ்சநேயர் யாளி குதிரை ஆதிசேடன் ஆகிய வாகனங்கள் ஆறும் உள்ளன. சித்திரையில் பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது. ஆவணியில் ஐந்து நாட்கள் பவித்திரோற்சவம், தை மாதத்தில் திருமங்கையாழ்வாரின் மங்களாசாசன விழா ஆகியவை நடைபெறுகின்றன. இவைகளில் மங்களாசாசன விழா மிகவும் சிறப்புடையது. அப்போது சுற்றுப்பக்கத்து அயலூர்களிலுள்ள பெருமாள் கோயிலிலிருந்து பன்னிரண்டு சுவாமிகள் இங்கு எழுந்தருளச் செய்யப் பெறுகின்றனர். 10,000க்கும் மேற்பட்ட மக்கள் அவ்விழாவில் கலந்து கொள்ளுகின்றனர். திருமங்கையாழ்வார் மேற்குறித்த 12 திவ்விய தேசங்களையும் தரிசித்து மங்களாசாசனம் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இக் கோயிலின் உள்ளே திருமங்கையாழ்வாருக்குத் தனியாக ஓர் அழகிய சந்நிதி அமைக்கப் பெற்றிருக்கின்றது. சிவபெருமானுக்கும் மதங்க முனிவருக்கும் காட்சி கொடுப்பதற்காகப் பதரி காசிரமத்திலிருந்து பெருமாள் இங்கு எழுந்தருளியதாகத் தலபுராணம் தெரிவிக்கின்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நியமிக்கும் அறங்காவலர் ஒருவரால் இக்கோயில் கண்காணிக்கப்பெற்று வருகின்றது.

## கல்வெட்டுக்கள் :

இக்கோயிலில் மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில் இரண்டு பரகேசரி வர்மன் என்னும் முதலாம் பராந்தகச்சோழன் (கி.பி. 907-955) காலத்தைச் சேர்ந்தவை. மற்றென்று தெலுங்கு எழுத்தில் அமைந்தது பிற்காலத்தைச் சேர்ந்தது. அது காடுவெட்டியாரப்பா என்பவர் ஒருவரைக் குறிக்கின்றது. சோழர் காலத்துக் கல்வெட்டுக்களின்படி இக்கோயில் திருமணி மாடக் கோயில் என்றும்; சுவாமி திருமணிமாடக் கோயில் பெருமாள் என்றும்; வழங்கப் பெற்றமை தெரிகின்றது. நந்தாவிளக்கு ஒன்று அமைப்பதற்கும் அர்த்தசாம பூசை நிவேதனத் திற்கும் அரசர் நிலதானங்கள் செய்ததனை ஒரு கல்வெட்டு புலப்படுத்துகின்றது.

## சாயாவனம் :

இது தேவாரத் திருமுறைகளில் சாய்க்காடு என வழங்கும். சீர்காழிக்குத் தென்கிழக்கே சுமார் 11 கல் தொலைவிலும், காவிரிப்பூம் பட்டினத்திற்கு 1 கல் தொலைவிலும், இத்தலம் அமைந்திருக்கின்றது. இதனைச் சார்ந்த கிராமம் மேலையூர் என வழங்கப்படுகிறது. சீர்காழியினின்று உந்துார்தி வசதிகள் உள்ளன. இங்குள்ள சுவாமியின் பெயர் சாயாவனேசுவர சுவாமி. அம்பிகை சவுந்திரநாயகி (கோதையாள்). கோயில் 70 சென்ட் நிலப் பரப்பு உடையது. சுயம்புலிங்கம். இங்கு தேவேந்திரன் இறைவனை வழிபட்டு அருள் பெற்ருன். அதனுல் இந்திரனுக்குத் தனியே ஒரு சந்நிதி உள்ளது. இரண்டு பிராகாரங் களும் இரண்டு சந்நிதிகளும், விமானம் (இந்திர விமானம்) ஒன்றும் உள்ளன. இங்கு முருகப் பெருமான் வில்லேந்திய நிலையில் விளங்குகின்ருர். இவரைத் தனுசு சுப்பிரமணியர் என்றும்,

செந்திலாண்டவர் என்றும் மக்கள் பெரிதும் போற்றுகின்றனர். இவ்வழகிய சிறந்த படிமம் கடற்கரை ஓரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட தாக மக்கள் கூறுகின்றனர். மணிமேகலை என்னும் காப்பியத்தில் மணிமேகலை வழிபட்ட தாகக் குறிக்கப்படும் சம்பாபதி அம்மையின் அழகிய திருவுருவங் கூட, இக் கோயிலில் இடம் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஐயடிகள் காடவர்கோன் முதலிய சான்றோர்கள் இத்தலத்திற்கு வந்து தரிசித்து, தம் பாடல்களில் போற்றிப் பாடியுள்ளனர். பரம்பரை உரிமையில்லாமல் மாத ஊதியம் பெறுகின்ற சிவாச்சாரியர்களால் நாடோறும் நான்குகால பூசை நடைபெறுகின்றது. பொன் வெள்ளி அணிகலன்கள் பல உள்ளன. அவைகளில் இறைவனுக்குரிய வெள்ளி நாகாபரணம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 68 ஏக்கர் நன்செய் நிலங்களும், 86 ஏக்கர் புன்செய் நிலங்களும் கோயிலுக்கு உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 17,000/- குத்தகை வருவாய் கிடைக்கின்றது. மரத்தால் செய்யப்பெற்ற குதிரை எருது மயில் பெருச்சாளி முதலிய வாகனங்கள் உள்ளன. சித்திரைத் திங்களில் இந்திர விழாவும், மார்கழி மாதத்தில் மூன்று நாட்கள் இயற்பகை நாயனுர் விழாவும், மற்றும் விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சஷ்டி, கார்த்திகைத் தீபம், திருவாதிரை முதலிய விழாக்களும் நடைபெறுகின்றன. இந்திரவிழா சித்திரைப் பௌர்ணமியில் தொடங்கி 28 நாட்கள் நடைபெறுகின்றது. இவ் இந்திர விழாவும், மார்கழி மூன்றுநாட்கள் நடைபெறும் இயற்பகை நாயனுர் விழாவும், மிகவும் சிறப்பான பெரு விழாக்களாகும். இவற்றுக்குச் சுற்றுப்பக்கங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கூடுகின்றனர். அறநிலையத்துறையினர் நியமிக்கும் ஓர் அறங்காவலரும், ஒருசெயல் அலுவலரும் இக்கோயிலைப் பேணிப்பாதுகாத்து வருகின்றனர்.

**கல்வெட்டுக்கள் :**

விக்கிரமசோழன் (கி. பி. 1120-1135).
மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1179-1216).
மூன்றும் இராசராசன்
மாறவர்மன் சுந்தரபாண்டியன்

ஆகியவர் கல்வெட்டுக்கள் இக் கோயிலில் காணப்படுகின்றன. இவைகளில் பழமையானது விக்கிரமசோழனின் ஆட்சியைச் சேர்ந்தது. அண்மைக்காலத்தது சக. 1679 (கி.பி. 1757) ஆண்டைச் சேர்ந்தது. 'இராசாதி ராச வளநாட்டின் உட்பிரிவாகிய நாங்கூர் நாட்டின் காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காடு' என்று இத்தலத்தின் பெயர் குறிக்கப்படுகின்றது. விக்கிரமசோழனின் கல்வெட்டு ஒன்றில் புகார் நகரத்துச் சாயாவனம் என்னும் தொடர் காணப்படுகின்றது. 18-ஆம் நூற்றுண்டில் இது 'திருச்சாய்க்காட்டூர்ச்சீர்மை காவிரிப்பூம் பட்டின மங்கலத்துக் காவிரிப்பூம்பட்டினம்' என்று வழங்கப்பெற்றமை தெரிகின்றது. கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் இக்கோயிலில் பல திருப்பணிகள் நடைப்பெற்றன என்பது புலனுகின்றது. மூன்றும் இராசராச சோழன் தன் பெயரால் ஒரு திருநந்தவனம் அமைத்தான். விக்கிரமசோழனின் அமைச்சர் ஒருவர் ஒருமடம் நிறுவி அதற்குப் பல நிலங்களை வழங்கினுர் உத்திராபதி நாயக்கன் என்னும் திருச்சாய்க்காட்டு வேளான் என்பவன், ஒரு நிலத்தையும் ஒரு வீட்டையும் குத்தகை எடுத்துக்கொண்டு நாள்தோறும் நாழி மிளகு கோயிலுக்கு அளிக்க உடன்பட்டான். அந்நாழிக்குச் சாயாவனநாழி என்பது பெயர். மூன்றும் குலோத்துங்கனுக்குத் தலைமைச் செயலராக இராச நாராயண மூவேந்தவேளான் என்பவரும், மூன்றும் இராசராசனுக்குத் தலைமைச் செயலராகப் பண்டித சோழ மூவேந்தவேளான் என்பவரும் இருந்ததாகத் தெரிகின்றது.

" நீ நாளும் நன்னெஞ்சே
நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்
சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப்
புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே "

—சம்பந்தர்.

**பல்லவனீச்சுரம் :**

சீர்காழிக்குச் சுமார் 16 கி. மீ. தொலைவிலும், ஆக்கூர் என்னும் இருப்புப்பாதை நிலையத்திற்கு 11 கி. மீ. தொலைவிலும், இத்தலம் அமைந்துள்ளது. இது மேலையூர் ஊராட்சியைச்

சேர்ந்தது. கோயில் 52 சென்ட் நிலப்பரப்பு உடையது. ஐந்து நிலை இராசகோபுரம் அழகுற விளங்குகின்றது. ஒரு பிராகாரமும் இரண்டு சந்நிதிகளும் உள்ளன. தமிழகத்தின் தலைசிறந்த துறவுநெறிச் சான்றோராகிய பட்டினத்தார்க்கு ஒரு சந்நிதி தனியே இங்கு அமைந்துள்ளது. இது மிகவும் பழமையான கோயில். 1958-ல் குடநீராட்டு விழா சிறப்புற நிகழ்ந்துள்ளது. சுவாமியின் பெயர் பல்லவனீசுவரர். அம்பிகை சவுந்திரநாயகி. அம்மையின் சந்நிதிக்கு எதிரில் உள்ள கோபுரத்தில் சிறந்த அழகிய சிற்பவேலைகள் அமைந்துள்ளன. தலவரலாற்றின்படி தேவேந்திரன் இங்குள்ள இலிங்கத்தைத் தன்னுடைய தேவர் உலகத்திற்குப் பெயர்த்து எடுத்துச் செல்ல முயன்றான். அப்போது எழுந்த ஒலி (கோஷம்) யைக் கேட்டு அம்பிகை இந்திரன் முயற்சியைத் தடுத்து நிறுத்தினாள். அதனால் அம்பிகைக்குக் கோஷாம்பிகை என்று ஒரு பெயர் வழங்குகின்றது. கோயிலின் தெற்குப் பக்கத்தில் இந்திரனின் தேர்போன்று சக்கரங்களும் ஆரைகளும் உள்ள ஓர் கற்சிற்பம் நிற்கின்றது. தலபுராணத்தின்படி, இந்திரன் சம்பாபதி தெய்வத்தைத் தன்தேரில் கொணர்ந்து இக்கோயிலில் நிறுவி வழிபட்டான் எனத் தெரிகின்றது. மூலத்தானத்தில் இறைவன் சந்நிதியின் வாயிலின் வலப்பக்கத்தில் சம்பாபதி அம்மன் திருவுருவம் இன்றுகூட வைத்து வழிபடப்பெற்று வருகின்றது. இத்தெய்வத்தை மாதவியும் மணிமேகலையும் வழிபட்டனர் என்று சொல்லப்படுகின்றது. கடற்கரை ஓரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட சுப்பிரமணியர் வடிவம் ஒன்றும் இங்கு உள்ளது. அது நான்கு கைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் ஒரு வலக்கையில் வேலாயுதமும், மற்றொரு கையில் வச்சிராயுதமும், மூன்றாவது கையில் வில்லும் அம்பும் ஏந்தப் பெற்றுள்ளன. நான்காவது திருக்கையில் வேற்படையும் கோழிக் கொடியும் அமைந்துள்ளன. இத்திருவுருவம் டச்சுநாட்டு மாலுமிகளால் கி. பி. 1648-ஆம் ஆண்டில் கவர்ந்து சென்று, கடலில் எறியப்பட்ட திருச்செந்தூர் முருகனின் திருவுருவம் என்று மக்கள் நம்புகின்றனர். டச்சுநாட்டு மாலுமிகள் திருச்செந்தூர் முருகனைக் கவர்ந்து சென்ற கப்பல் கவிழ்ந்து, இத்திருவுருவம் இங்கு அலைகளால் கொணர்ந்து சேர்க்கப்பெற்றதாக மக்கள் கூறுகின்றனர். காவிரிப்பூம்பட்டினத்துக் காவிரியின் சங்கமுகத் துறையில் இத்திருவுருவம் கண்டுபிடிக்கப்பெற்று இக்கோயிலில் நிறுவப்பெற்றது. இதன் சிறப்பு என்னவென்றால், இன்றளவும் இதன் பொன்நிற ஒளி மங்காமல் அழகுற்று விளங்குகின்றது. பஞ்சலோகத்தால் செய்யப்பெற்ற வேறு பல படிமங்களும் இத்தலத்தில் உள்ளன.

பரசு பாணியர் பாடல் வீணையர்
பட்டினத்துறை பல்லவன்
ஈச்சரத்து
அரசு பேணி நின்றார் இவர் தன்மை
அறிவாரார் (1)

வானம் ஆள்வதற்கு ஊனம் ஒன்றிலை
மாதர் பல்லவன் ஈச்சரத்தானை
ஞான சம்பந்தன் நற்றமிழ் சொல்ல
வல்லவர் நல்லவரே (2)

—சம்பந்தர்

பரம்பரை உரிமையில்லாமல் மாத ஊதியம் பெறுகின்ற சிவாசாரியர்களால் நாடோறும் ஐந்துகால பூசைகள் நடைபெற்று வருகின்றன. 28-47 ஏக்கர் நன்செய் நிலங்களும், 32·95 ஏக்கர் புன்செய் நிலங்களும், ஐந்து வீடுகளும் இக்கோயிலுக்கு உள்ளன. அவற்றின் மூலம் ஆண்டொன்றுக்கு ரூபா 8,000/- குத்தகை கிடைக்கின்றது. ரூபா 200/- மதிப்புள்ள அணிகலங்கள் உள்ளன. மரத்தால் செய்யப்பெற்ற ஒரு மயில், இரண்டு எருது, ஒரு குதிரை ஆகிய வாகனங்கள் உள்ளன. நவராத்திரி கந்தர் சஷ்டி பட்டினத்தார்விழா என்பவை நடைபெறுகின்றன. ஆடிமாதத்தில் நடைபெறும் பட்டினத்தார் திருவிழா மிகவும் முதன்மையானது. அப்போது 2000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் இங்குத் திரளுகின்றனர். பல்லவனீச்சுவரம், பட்டினத்தார் அவதரித்த பெருமையுடையது. திருஞானசம்பந்தர் இதற்கு ஒரு திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் கோவலன் கண்ணகி என்பவர்கள் இங்கேயே பிறந்தனர். இதனால் இத்தலத்தின் பழமையும் பெருமையும் புலனாகும். ஓர் அறங்காவலரும், ஒரு செயல் அலுவலரும், அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பெற்றுக் கோயிலைக் கண்காணித்து வருகின்றனர்.

அடையார்தம் புரங்கள் மூன்றும்
ஆரழலில் அழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும்
வித்தகர் மேய இடம்,
கடையார் மாடம் நீடி எங்கும்
கங்குல் புறந்தடவப்
படையார் புரிசைப் பட்டினம் சேர்
பல்லவன் ஈச்சரமே

—சம்பந்தர்

(தொடரும்)—ஆசிரியர்

★

# பழநித் திருக்குடமுழுக்கு விழா

(செய்திச் சுருக்கம்)

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெரு விழாவின் இசைவு பெறுகை (அநுக்ஞை)ப் பூசை 26—8—73 அன்று காலை 6·30 மணியள வில் தொடங்கப் பெற்று யாகசாலை மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பெற்றிருந்தது. அதன்கண் 33 குண்டங்கள் ஆகமமுறைப்படி சிறப்புற வகுக்கப்பெற்றிருந்தன. இந்நிகழ்ச்சி களில் சிறந்த பல வேதாகம விற்பன்னர்கள் கலந்து கொண்டனர். வேதபாராயணம் இடையறாது நிகழ்ந்தது. ஆறுபடை வீடுகளி னின்றும், சிறந்த பல சிவத்தலங்களினின்றும், ஓதுவாமூர்த்திகள் ஐம்பதின்மர் (50), தொடக் கம் முதல் இறுதி வரை, இரவு பகல் முழுதும், இடையறாது தொடர்ந்து திருமுறைகள் ஓதினர். வேத ஒலியும், திருமுறை ஒலியும், இன்னிசை யியங்களின் ஒலியும், 26—8—73 முதல் 2·9·73 வரை, பழநித் தலம் முழுவதிலும் பரவி விரவிப் பக்தர்களுடைய செவிகளையெல்லாம் நிறைத் துப் பெரு மகிழ்வுறுத்தின.

30—8—73-ம் நாள் விடியற்காலை பழநிச் சண்முக நதித்தீர்த்தம், பழநித்தலக் குருக்கள், பண்டாரங்கள் ஆகியோர்களால் தங்கம் வெள்ளிக் குடங்களில், மேளதாள மகரதோர ணங்களுடன், யானையின் மீது வைத்து ஊர்வல மாகக் கொணரப்பெற்று, மலைக்கோயிலுக்கு வந்து சேர்ந்தது. அன்று இரவு யாகசாலையில் ஓமகுண்டங்கள் முறைப்படி வளர்த்துப் பூசை கள் தொடங்கப்பெற்றன. தமிழகத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்தும், பக்தர்கள் பெருந் திரளாக வந்து கலந்து கொண்டு நிகழ்ச்சிகளைத் தொடக்கமுதல் இறுதிவரையிற் கண்டு, பேரானந்தமும் பெருமிதமும் கொண்டனர்.

சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S. அவர்கள், அவ்வப்போது பழநிக்கு வருகை தந்தும், அறிவுரை நல்கியும், இத்திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ச்சிகளுக்குச் சிறந்த ஆலோசனைகளைக் கூறியும், நீராட்டுப் பெரு விழாச் சிறப்புற நடைபெறுவதற்குப் பெரிதும் துணைபுரிந்தார்கள்.

அறங்காவலர் குழுத்தலைவர் திரு பு. மனோகரன் அவர்கள், விழாவில் தொடக்க முதல் முடிவு வரை பழநியிலேயே தங்கியிருந் தார்கள். விழாவுக்கான எல்லா ஏற்பாடுகளை யும், துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி திரு வி, சௌ. கோதண்டபாணி, Bsc. B.L., அவர் களுடன் முழுமையாகக் கலந்து ஒத்துழைத்து, விழா இனிது நடைபெறவும், மற்றும் பக்த கோடிகள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா வினைக் கண்டு களிக்கவும், சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்து உதவினார்கள்.

மற்றும் அறங்காவலர்கள் திரு வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பழநிச் சட்டமன்ற உறுப்பின ரும் அறங்காவலருமாகிய புலவர் திரு பழநிச்சாமி, ஒட்டன்சத்திரம் தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினரும் அறங்காவலருமான திரு என். நாச்சிமுத்து, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், அறங்காவலருமான திரு எ. பச்சையப்ப கவுண்டர் ஆகியோர்கள், விழா மிகவும் சிறப்பாக நடைபெறப் பலவகை களிலும் பெரிதும் உதவி புரிந்தனர். காவல் துறையினரும், மதுரைப் பாரதச் சாரணத் தொண்டர்களும் சிறப்பான முறையில் பொறுப்பாகப் பணியாற்றினர்.

இப்பெருவிழாவிற்குத் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அன்பில்தர்மலிங்கம் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். தங்கவிமானம், மற் றும் பிறகோபுரங்கள் அனைத்திற்கும், திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, 2—9—73 ஆம் நாள் காலையில் சரியாக 6-30 மணிக்கு இனிது நிகழ்ந்தது. பின்னர் மூலவருக்கு அபிடேகம், அலங்காரம், தங்கக் கவசச் சாத்துப்படி முதலி யன முறைப்படியும் மிகச் சிறப்பாகவும் நடைபெற்றன. திருச்சி வானொலி நிலையத்


தினர் நிகழ்ச்சியைச் சிறந்தமுறையில் நேர்முக விளக்கம் புரிந்தனர்.

**விருதுஅளிப்பு விழா :** இப்பெரு விழாவினை ஒட்டித் தமிழகக் கலைஞர்கள் அறுவருக்கு, அவர்கள் தத்தம் துறைகளில் வித்தகம் பெற்று விளங்கிப், புகழ்மிக்குத் திகழ்ந்து பெருந் தொண்டுகள் ஆற்றிவருதலைப் போற்றிப் பாராட்டிச், சிறப்பு விருதுகள் வழங்கப் பெற்றன. அதுபோது திருவெண்காடு திரு டி. பி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் நாதசுர இசை வழங்கினார்கள். மதுரை திரு. எஸ். சோமசுந்தரம் அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். அறங்காவலர் குழுத்தலைவர் திரு பு. மனோகரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். கலைஞர்கள் அறுவரும் வெள்ளிப்பேழையில் கோபுரம் அமைத்த சின்னம் அளித்தும், பொன்னாடை போர்த்தியும் சிறப்பிக்கப்பெற்றனர். விருது வழங்கப் பெற்ற கலைஞர்களின் சார்பில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள், மிகவும் சிறந்த முறையில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவினைச் செய்து நிறைவேற்றிய பழநித் திருக்கோயில் நிர்வாகத்தினரைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்கள்.

விழாவுக்கு வந்திருந்த கலைஞர்கள் மற்றும் பெருமக்கள் ஆகியோர்களுக்குத் துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி திரு. வி. சௌ. கோதண்டபாணி, B.Sc., B.L. அவர்கள் நன்றியுரை நவின்றார்கள். திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பு மலரையும், வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் இயற்றிய பழநித் திருவாயிரம் என்ற நூலையும், ஆணையர் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்கள்.

இப்பெருவிழாவை முன்னிட்டு வடக்குமலை வீதி நினைவு அரங்கத்தில் இசைக்கலை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும், காவடி ஆட்டம், கரக ஆட்டம் போன்ற கிராமியக் கலைகளும், மலையாளப் பஞ்சவாத்தியஇசை நிகழ்ச்சியும், நன்கினிது நடைபெற்றன. ஒளிவிளக்கு, அழகு பாடுகளும், வாணவேடிக்கை நிகழ்ச்சிகளும் மிகவும் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன. அறநிலையத்துறையிலிருந்து ஆணையரால் அனுப்பப்பட்ட சிறப்புப் பணியாளர்கள், மற்றும் திருக்கோயில்களில் பணி புரியும் கண்காணிப்பாளர்களும், ஊழியர்களும், இப்பெருவிழா மிகவும் சிறப்பாக நன்கினிது நடைபெற எல்லா வகைகளிலும், நிர்வாக அதிகாரி அவர்களுடனும், அறங்காவலர்களுடனும் பெரிதும் ஒத்துழைத்து அவரவர்களின் பணியைச் செம்மையுறச் செய்தனர். பெருவிழாவின் நினைவாக, இத் திருக்கோயில் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மாதச் சம்பளம் அன்பளிப்புப் பரிசாக வழங்க ஆணையர் அவர்கள் உத்தரவிட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

—ஆசிரியர்



★

★

பழனி ஆண்டவர்

★

# மதிப்புரைகள்

## (1) தமிழர் மதம் :

இந்நூல், மொழிநூற் பேரறிஞர் பேராசிரியர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் இயற்றியது. தமிழ்கூறும் நல்லுலகம் மதித்துப் போற்றும் தலைசிறந்த பேரறிஞர்களுள் ஒருவர், நமது பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. பாவாணர் அவர்கள், இந்நூலில் தமிழர்மதம் பற்றிய, தம்முடைய ஆராய்ச்சிக் கொள்கைகளை மிகச் சிறப்பாக ஆராய்ந்து, பேராசிரியர் அவர்கள் தமது நுண்மாண் நுழைபுலம் தோன்ற விளக்கி எழுதியிருக்கின்றார்கள். சிந்தனைக்கு விருந்தாகத் திகழ்கின்றது. குமரி நிலையியல், இடைநிலையியல், நிகழ்நிலையியல்; வருநிலையியல், முடிவுரையியல், முன்னுரை, பின்னிணைப்பு என்னும் பகுதிகளை உடையதாக இந்நூல் திகழ்கின்றது. படித்துப் பயன் பெறுதற்குரியது. ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனும், தமிழ்ப்பற்றும், சமய உணர்வும் பெரிதும் போற்றுதற்குரியன. சிறந்த நல்ல நூல். விலை உருபா 6-25. கிடைக்குமிடம் : நேசமணி பதிப்பகம், ஆ1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை, காட்டுப்பாடி விரிவு, வட ஆற்காடு மாவட்டம்.

★ ★ ★

## (2) அரி ஏகபாதத்தந்தாதி :

திருப்புகழ்ச் சுவாமிகள் எனவும், முருகதாச சுவாமிகள் எனவும் வழங்கும் மகான்-வண்ணச் சரபம், அருள்மிகு தண்டபாணிசுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகளைச் சமய உலகம் நன்கு அறியும். திருமாலைக் குறித்து, ஒரேவிதமான நான்கு அடிகளைக் கொண்ட பாடல்களால், அந்தாதி முறையில் அமைத்துப் பாடப்பெற்றது இந்நூல். திருஞானசம்பந்தப் பெருமான், தமது தேவாரத்தில் ஏகபாதப் பதிகம் ஒன்று அருளிச் செய்துள்ளார். அம் முறையில், இந்நூலும் அமைந்துள்ளது. ஒரே விதமாக அமைந்த நான்கு அடிகளைக் கொண்ட பாட்லுக்கு, ஒவ்வொரு அடிக்கும் வெவ்வேறு வகையில் பொருள் விரித்து விளக்குவது, புலமைத் துறையிலும், கவிதைத் துறையிலும் வியக்கத்தக்கதோர் அரும்பெருஞ் செயலாகும். இத்தகைய பாடல்களை இயற்று தற்கும், பொருள் உணர்தற்கும் பெரும் பயிற்சியும், புலமை முதிர்ச்சியும் வேண்டும். அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் அவர்களே, முப்பது பாடல்கள் கொண்ட இவ்வந்தாதி நூலுக்கு விளக்கமான உரையும் இயற்றி, அளித்துள்ளார். மிகச் சிறந்த அரிய பெரிய அருள்நூல் என்று போற்றத்தக்கது. தவத்திரு சுவாமிகள் அவர்களின் 75-ஆவது குருபூசை விழா நினைவு மலராக மிகவும் நல்லமுறையில் சிறப்பாக வெளியிடப்பெற்றுள்ளது. தமிழன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் கொள்ளு தற்குரிய நூல். விலை ரூபாய் ஒன்று. அஞ்சற்காசு 20, கிடைக்குமிடம் : கௌமார மடாலயம், திருவாமாத்தூர் (அஞ்சல்) விழுப்புரம் வட்டம். தென்னாற்காடு மாவட்டம்.

★ ★ ★

## (3) திருவேங்கடவன் பள்ளியெழுச்சி :

இதன்கண் திருவேங்கடவன் திருப்பள்ளி யெழுச்சி, திருவேங்கடவன் துதி, திருவேங்கட வன் சரணகதி, திருவேங்கடவன் மங்களம் என்னும் நான்கு கவிதைகள் அமைந்துள்ளன. உரை விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன. இந்நூற் பொருள்களை விளக்கி, ஓர் அரிய இனிய முன்னுரையும் ஆசிரியரால் எழுதப் பெற்றுள்ளது. இந்நூலுக்குப் பி.ஸ்ரீ அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். ஆசிரியரின் சமய உணர்வும், தமிழ்ப் பெரும் புலமையும், தூய நல்ல தமிழ்க் கவிதைத்திறனும், பெரிதும் போற்றுதற்குரியன. பக்தர்கள் வாங்கிப்படித்துப் பயன் கொள்ளுதற்குரிய நூல், விலை ரூபா 1-25 கிடைக்குமிடம் ! திரு. கு. பாலசுந்தர முதலியார், கம்பர் பதிப்பகம், 4/5 தருமராஜா கோயில் தெரு, சென்னை-1.

★ ★ ★

## (4) அபிராமி அந்தாதி உரை :

காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியின் முதல்வர் திரு. புலவர் ந. இராமநாதன் பி. ஓ. எல். அவர்கள் எழுதிய பொழிப்புரையும், கருத்து விளக்கமும் கொண்டது. காரைக்குடி வீர. இராம. பெரி. பெரியகருப்பன்செட்டியார் அவர்களால் வெளியிடப்பெற்றது. பொழிப்புரையும் கருத்து விளக்கமும் எளிய இனிய தெளிவான நடையில், மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. பெரியோர்கள் பலர் இந்நூலுக்கு அணித்துரைகள் வழங்கியுள்ளனர். பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும். நல்ல இனிய நூல். அழகிய திருத்தமான பதிப்பு. விலை குறிக்கப்பெறவில்லை. கிடைக்குமிடம் : வீர. இராம. பெரி. பெரியகருப்பன்செட்டியார் அவர்கள், மே/பா. இராமசாமி தமிழ்க்கல்லூரி காரைக்குடி.

★ ★ ★

## (5) அரசடிக் கற்பக விநாயகர் அருட்புகழ்மாலை :

இது சென்னைத் திருவல்லிக்கேணியில் பெரிய தெருவில் அமைந்துள்ள அரசடி கற்பக விநாயகரின்மீது பாடப்பெற்ற பல பாடல்களைக் கொண்ட இனிய துதி நூல். அக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிங்காரவேலவர் என்னும் முருகனைப் பற்றிய துதிப்பாடல்களும் இதில் சேர்ந்துள்ளன. பாடல்களை அருட்கவிமணி தவத்திரு சாதுராம் சுவாமிகள் அவர்கள் பாடியருளிய இருக்கின்றார்கள். இராவ்சாகிப் நல் முருகேசமுதலியார் அவர்கள் பாடிய பிரார்த்தனை மாலை என்னும் முப்பது பாடல்களும், இதன்கண் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாடல்களுக்குக் குறிப்புரை விளக்கம் வரையப் பெற்றுள்ளது. விலை காசு 25. கிடைக்குமிடம் : நல். முருகேசமுதலியார், 15-டாக்டர் சதாசிவம் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

★ ★ ★

## (6) உறவும் நட்பும் :

திருச்சி மாவட்டம் தொட்டியம் அடிகளார் மன்றத்தின் சார்பில், புலவர் செல்வி இரா. உருக்குமினி அவர்கள் ஆற்றிய கம்பராமாயணச் சொற்பொழிவுகளை ஒட்டி வெளியிடப்பெற்றுள்ள சிறிய கட்டுரை நூல். குகனின் சிறப்பு, கம்பராமாயணப் பாடல்களபல கொண்டு நன்கினிது இதன்கண் விளக்கப்பட்டுளளது. விலை காசு 50 கிடைக்குமிடம் : அடிகளார் மன்றம், தொட்டியம், திருச்சி மாவட்டம்.

★ ★ ★

## (7) இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியங்கள் :

'வழிகாட்டும் வான்பொருள்' எனப் பக்தர்களால் பெரிதும்போற்றி வழிபடப்பெற்றுவரும் இரெட்டியப்பட்டி சுவாமிகள் அவர்களைப் பற்றியும், அவர்கள் வகுத்தருளியுள்ள சட்டம் என்னும் வழிபாட்டு ஒழுக்கக் கோட்பாடு பற்றியும் அன்பர்கள் அனைவரும் அறிவர். இரெட்டியப்பட்டி சுவாமிகள் அவர்களின் பக்தர்கள் பலரும் ஒன்றுசேர்ந்து, சுவாமிகளின் அருமை பெருமைகளையும், அருள் உபதேசங்களையும் பரப்பும் நோக்கத்துடன், சென்னையில் இலக்கியப் பதிப்பகம் என்னும் அமைப்பு ஒன்றைத் தொடங்கி நடத்தி வருகின்றார்கள். அதன்சார்பில் குருநாதர் பிள்ளைத்தமிழ் (ரூ 1. 60) குருவருள் திருவுந்தியார் (15 காசு). The Kindly Light that Leads (காசு 75) எனப் பல சிறந்த பயனுள்ள நூல்களை வெளியிட்டுளளார்கள். அன்பர்கள் பின்வரும் முகவரியில் அவைகளைப் பெறலாம். இரெட்டியப்பட்டி. சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம், 23 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.

—ஆசிரியர்

அருள் திரு



நடராஜர்

# கட்டுரைப் பட்டியல்

(1972 அக்டோபர் முதல் 1973 செப்டம்பர் வரை)

ஆசிரியர் : ந. ரா. முருகவேள்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அடியவர்களின் செய்கை | 494 |
| 2. | அம்பிகையின் அழகுவெள்ளம் | 474 |
| 3. | அருட்டிரு மறைமலையடிகள் | 397 |
| 4. | அருள்மிகு ஞானியாரடிகள் | 391 |
| 5. | அருள்நந்தி சிவத்தின் அருள்உள்ளம் | 238 |
| 6. | அறுவகைச் சமயங்கள் | 230 |
| 7. | அவையடக்கம் | 837 |
| 8. | இறைவனின் ஐவகை நிலைகள் | 287 |
| 9. | இராமனும் கோவிந்தனும் | 336 |
| 10. | இராமாநுசரின் இனிய அருளுரைகள் | 541 |
| 11. | இராமாநுசரின் மாட்சி | 545 |
| 12. | உயர்வற உயர்நலம் உடையவன் | 276 |
| 13. | கச்சியப்பர் கவிநலம் | 318 |
| 14. | கடவுளின் கருணைத்திறன் | 259 |
| 15. | கந்தர் கலிவெண்பா (கருத்துச்சுருக்கம்) | |
| 16. | கந்தபுராண நுண்பொருள் | 649 |
| 17. | கம்பரும் கவிதைஇயலும் | 361 |
| 18. | கரையேறவிட்டமுதல்வர் | 245 |
| 19. | குறிஞ்சிக்கிழவன் | 551 |
| 20. | சின்முத்திரை | 429 |
| 21. | சிங்கப்பிரான் பெருமை | 449 |
| 22. | சிறந்ததொரு முருகன் துதிச்செய்யுள் | |
| 23. | செந்தமிழ்த் தெய்வம் திருமுருகன் (கவிதை) | 694 |
| 24. | சைவ சித்தாந்தம் | 265 |
| 25. | தஞ்சைமாவட்டக்கோயில்களின் வரலாறு | 439, 495 |
| 26. | தமிழின்பம் | 520 |
| 27. | திருக்கழுக்குன்றத் தலபுராணம் | 1, 25, 41 |
| 28. | திருமந்திரமும் சிவஞானசித்தியாரும் | 145 |
| 29. | திருமாலடியார் இயல்புகள் | 495 |
| 30. | திருமாலடியார் சிறப்பு நலன்கள் | 285 |
| 31. | திருவள்ளுவர் மாட்சி | 409 |
| 32. | திருவாசகத்தில் அறிவியல் | 457 |
| 33. | திருவாசகமும் திருவருட்பாவும் | 97 |
| 34. | திருவாய்மொழியும் திருமாலும் | 191 |
| 35. | திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் | 230 |
| 36. | திவ்வியப்பிரபந்தங்களின் சிறப்பு | 209 |
| 37. | "துயக்கன் மயக்கன்" | 438 |
| 38. | "நம் கலைஞர் நீடுழி வாழ்க" (கவிதை) | 394 |
| 39. | நம்மாழ்வார் பக்திநலம் | 186 |
| 40. | நம்பெருமாள் வடிவநலன் | 243 |
| 41. | நயஞ்செறிந்த நன்றியுரை | 376 |
| 42. | "நாராயணா எனும் நாமம்" | |
| 43. | பக்தி நெறி | 278 |
| 44. | பழநியும் பழநியாண்டவரும் | 525 |
| 45. | பிரபத்திநெறியின் பெருமை | |
| 46. | "பெம்மான் இவன் அன்றே ! | 1 |
| 47. | பேரறிஞர் அண்ணாபோல் உண்டோ பிறர்?" (கவிதை) | |
| 48. | மதிப்புரைகள் | 200, 297, 448 |
| 49. | மனமெனும் பேய்க்குரங்கு | 247 |
| 50. | முருகன்பெருமை | 518 |
| 51. | மூவகை அடியவர் | 430 |
| 52. | மெய்கண்டநூலின் வாழ்வியல் உண்மைகள் | 505 |


## பிற அறிஞர்களின் கட்டுரைகள்


**அண்ணங்கராசார்யர், பி. ப.**

| | |
|---|---|
| அருளிச் செயல் ஓதும் முறைகள் | 479 |
| காஞ்சியில் திருமால் கோயில்கள் | 305 |
| சூடிக்கொடுத்த சுடர்க்கொடி | 188 |
| நீர்வண்ணன் | 340 |
| பெரியாழ்வார் திருமகள் | 349 |

**அருணாசலம், மு.**

| | |
|---|---|
| சிவஞான சனநாயகம் | 486 |
| திருமுறைக் கருத்தரங்கம் | 666 |

**அருணைவடிவேலர், சி.**

| | |
|---|---|
| அருட்பெருங்காப்பியம் | 105, 372 |
| தேனூறுஞ் செஞ்சொல் | 191 |

**அறநிலைய அமைச்சர் :**

| | |
|---|---|
| அறநிலையச் சட்டநிருவாகம் | 322 |
| அறநிலையத்துறையின் ஆக்கப்பணிகள் | 352 |
| ஆலயங்கள் ஆற்றிடும் அரும்பணிகள் | 424 |

**சிறப்புப் பேருரை**

| | |
|---|---|
| திருப்பணிகள் செய்வதன் சிறப்பு | 386 |

**அறநிலைய ஆணையர்**

| | |
|---|---|
| இராசராச சோழன் | 658 |
| திருத்தேர் வெள்ளோட்டம் (மதுராந்தகம்) | 416 |

JL N5971C N73·15·12



திருப்பாதிரிப்புலியூர்
(குடமுழுக்கு விழா) 222
திருப்பெண்ணுகடம் ( ,, ,, ) 472
திருப்பேரூர் ( ,, ,, ) 473
மயிலையின் மாட்சி 347
மாணிக்கவாசகர் மாட்சி 384
முருகன்பெருமை 518

**இரத்தினசபாபதிபிள்ளை, மா.**
அய்யனார் 160
சிவபூசை 128, 309
சிவலிங்கம் 635

**சுப்புரெட்டியார், ந.**
அழுகையும் ஆன்மீகவாழ்வும் 329
நாலாயிரத்திவ்விய பிரபந்தம் 166
நாவாய்உறையும் நாரணநம்பி 533
பன்னிரு திருநாமத் தத்துவம் 620

**நாகசாமி, இரா.**
கோயில்கள் இலக்கணம் 669
திருவண்ணாமலைக் கல்வெட்டுக்கள் 540

**தமிழக முதல்வர்**
சித்திரைப் பௌர்ணமியில்
சிலப்பதிகாரக் கலைக்கூடம் 348
வள்ளலார் காந்தியடிகள் விழாப்
பேருரை 660
வாழ்த்துப்பேருரை (ஆலய ஊழியர்கள்
சங்கம்)
வெள்ளிவிழாப்பேருரை (தருமையாதீனப்
பல்கலைக்கல்லூரி) 121

**தேவசேனபதி, வ. ஆ.**
அடைக்கலம் 182
இறைவனும் உயிரும் 538

**நீதிபதி மகாராசன் :**
ஆடத்தெரியாத கடவுள் 309
உடலும் உயிரும் 418
உறவும் உணர்வும் 515
சிரிக்கும் திறன் 127
தமிழ்நாட்டில் சாக்தம் 257
வாழும்நெறி 333
விளக்கை விளக்கும் விளக்கு 488

**முருகேசன், ம. ஆ.**
பழந்தமிழ் இலக்கியத்தில்
இராமாயணம் 254
திருஈங்கோய்மலைக் காட்சிகள் 337


**வேங்கடகிருஷ்ணன், டி.**
பேதைமை செய்த பெருங்கண்கள் 484
திருவிருத்தத்தில் ஒரு விருத்தம் 227

**வேங்கடசாமி ரெட்டியார், கி.**
இறைவனின் இயல்பு 2
மணவாள மாமுனிகள் மாட்சி 250


148713
008.

## தனிக் கட்டுரைகள்

படிமப்பாதம் வைத்த பரிசு 138
—(அருணசலம்பிள்ளை, டி. என்.)
ஞானநெறி 153
—(அழகரடிகள்)
ஐந்தெழுத்துப்படிகள் 212
—(இராமலிங்கனார், கீ.)
சிற்பத்தில் அணிகலன்கள் 214
—(கணபதி ஸ்தபதி, வை.)
சம்பந்தரும் பௌத்தமும் 284, 383
—(கந்தசாமி, சோ. ந.)
சிவத்திருஞானியாரடிகள் 390
—(கலியாணசுந்தரனர், திரு. வி.)
திருமுறைக் கருத்தரங்கம்
—(கிருஷ்ணசாமி ரெட்டியார், என்.)
சமயதீபம் 379
—(சிதம்பரநாதமுதலியார், டி. கே.)
விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் 152
—(சிவஞானம், ம. பொ.)
திருமுறைக் கருத்தரங்கம்
—(சொக்கலிங்கம், இராய)
சதசரத்தின சங்கிரகம் 118
—(திருஞானசம்பந்தம், பெ.)
சீவகசிந்தாமணி 178
—(திருநாவுக்கரசு, க. த.)
கடவுளின் வடிவநிலை 111
—(பட்டுசாமி ஓதுவார், தி.)
வள்ளுவர்கண்ட வாழ்க்கைநெறி 156
—(பரந்தாமனர், அ. கி.)
அதிரவீசிஆடுவார் 491
—(மகாதேவன், வே.)
அறைகூவி வீடருள்வான் 115
—(முத்துக்குமாரசாமிசேர்வை, ச.)
சிவபிரானின் திருவடையாளம் 124
—(முருகேசமுதலியார், நல்.)
அழுதடியடைந்த அன்பர் 223
—(முருகேசமுதலியார், புரிசை)
திருக்குறளில் ஊழும் முயற்சியும் 453
—(வச்சிரவேலு முதலியார், க.)
தமிழின்பம்
—(விசுவநாதம், கி. ஆ. பெ.)
நல்லச் சிற்றம்பலம் 273
—(வேங்கடசாமி, சீனி.)
'எட்டுக்கொலாம் ஈறில் பெருங்குணம்' 120
—(வேங்கடராமையா, கே. எம்.)
மூவுலகளந்த சேவடி 281
—(வேணுகோபால நாயகர்)
திருவேங்கடத்தின் சீர்மை 158
—(வேணுகோபாலப்பிள்ளை, மே. வீ.)




ஆலய ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் தமிழ்க முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்து அளிக்கப்பெறுதல் (3—9—73).



ஆலய ஊழியர் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டில் அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., அவர்கள் வரவேற்கப் பெறுதல்.



பழநித் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்குத் தமிழக அரசின்சார்பில் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் வருகைதந்து சிறப்பித்தல். (2—9—73)



Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at Super Power Press, Madras-1. Editor. N. R. Murugavell, M.A.,M.O.L.